# வைகறை வெளிச்சம்

விலை ரூ.20/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume - 15 Issue - 02

பிப்ரவரி 2022 - ஜமாஆத்துல் ஆகிர் - ரஜப் 1443




## CAA
## குடியுரிமை திருத்த மசோதா செயலில் வருமா?




## ஜெர்மனியில் இஸ்லாம்



## நேதாஜியின் இந்திய தேசிய இராணுவத்தில் குமரி முஸ்லிம்கள்!







## இஸ்லாமிய அறிவுலகில் இந்திய உலமாக்களின் பங்களிப்பு

بسم الله الرحمن الرحيم

அவர்கள் (கொடுமைக்கார அரசன் முன்னிலையில்) எழுந்து நின்று “வானங்களுக்கும், பூமிக்கும் இறைவனாகிய அவனே, எங்களுடைய இறைவன்; எக்காலத்துக்கும் அவனையன்றி வேறு எவரையும் நாயனென்று அழைக்கமாட்டோம்; (அப்படிச் செய்தால் குஃப்ரில் கொண்டு சேர்க்கும்) - வரம்பு மீறியதைச் சொன்னவர்கள் ஆவோம்” என்று அவர்கள் உறுதியாக கூறிய நிலையில் அவர்கள் இதயங்களை நாம் வலுப்படுத்தினோம். (அல்குர்ஆன் 18: 14)


குடியுரிமை திருத்த மசோதா செயலில் வருமா? 04

ஜெர்மனியில் இஸ்லாம் 12

நேதாஜியின் இந்திய தேசிய இராணுத்தில் குமரி முஸ்லிம்கள்! 18

திருச்சியைத் தொடர்ந்து நாகையிலும்! 30

- முதல் சிலுவைப்போர் வெற்றி வீரர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி(ரஹ்) 20
- ஃபாத்திமா(ரலி) ஆவர்களின் பற்றற்ற வாழ்வு 36
- சிலுவைப்போர் 2.0 24
- இஸ்லாமிய அறிவுலகில் இந்திய உலமாக்களின் பங்களிப்பு 40
- உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும், வீழ்ச்சியும் 48


## தொடர்கள்...


- பலதாரமணம் அன்றும் - இன்றும் - மகளிர் மன்றம் 46
- மூன்றாவது அலை முதியவர்களை அச்சுறுத்தும் - மருத்துவம் 34
- தாய்ப்பாலே தன்னிகரற்ற சக்தி - குழந்தை வளர்ப்பு 56
- பெற்றோர்களின் பாதுகாப்பு 50
- கவிதா ஏன் நூர் பாத்திமா ஆனார்? இஸ்லாம் நாங்கள் தேர்ந்தெடுத்த மார்க்கம் 62



பிப்வரி 2022 - ஜமாஅத்துல் ஆகிர் - ரஜப் 1443

# வைகறை வெளிச்சம்



ஆசிரியர்
மு.குலாம் முஹம்மது,M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,



தனி இதழ்: ரூ.20 | ஆண்டுச் சந்தா - உள் நாடு: ரூ.300 / வெளி நாடு: ரூ.3000.

VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com | Web: www.darultrust.in
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only

# CAA




# குடியுரிமை திருத்த மசோதா செயலில் வருமா?

குடியுரிமை திருத்தச் சட்டம் என்ற ஒன்றை கொண்டு வந்தது, இன்றைய பாசிச அரசு டிசம்பர் 11 2019இல். டிசம்பர் 12ஆம் நாள் சட்டமானது.24 மணி நேரத்திற்குள் சட்டமானது. இதனை வடிவமைத்தது, அப்போதைய சட்ட அமைச்சர் ரவிசங்கர் பிரசாத். நாடாளுமன்றத்தில் "ஆல் இன் ஆல் அழகுராஜா" அமித்ஷாவும், நாடாளுமன்ற வரலாற்றில் மிகவும் பிரகாசமான நாள் என அறிவித்தார்கள்.

அவர்களைச் சார்ந்தவர்களுக்கும், பாசிஸ்ட்டுகளுக்கும் முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கும் திட்டங்களில் ஒன்றை நிறைவேற்றி விட்டதாக மகிழ்ச்சி பெருமிதம். இது நம் நாடு ஆங்கிலேயர்களின் பிடியிலிருந்து விடுபடும் முன்னே பிரகடனப்படுத்திய ஒன்றாகும். முஸ்லிம்களை இந்த ஒரு சட்டத்தால் மட்டுமே ஒழித்துவிட முடியாது என்பதை அவர்கள் அறிந்திருந்தாலும், அவர்களுடைய அன்றைய திட்டம் இன்று நிறைவேறிவிட்டதாக ஒரு சாத்தானிய சிரிப்பும், சந்தோஷமும் அவர்கள் முகத்தில் நிழலாடியதை நாட்டு மக்கள் நன்றாகவே அறிவார்கள். ஆனால் ஓர் அரிப்பு - அன்று தொட்டே இருந்து வந்த அரிப்பு அடங்கிவிட்டதாகவே திமிறினார்கள்.

### காங்கிரஸ் போர்வையில் இந்து மகா சபையினர்

நாம் நீண்ட நெடுங்காலம் தொட்டே ஓர் உண்மையை விளம்பி வருகின்றோம். அது காங்கிரஸ் கட்சியில் தொடக்கக் காலந்தொட்டே இந்து மகா சபையைச் சார்ந்தவர்கள் ஊடுருவி விட்டார்கள். அவர்கள் காங்கிரஸிலும் இந்து மகாசபையிலும் ஒன்று போலவே தலைவர்களாக இருந்தார்கள். இவர்கள் காங்கிரஸ் கட்சியில் இணைந்ததன் நோக்கமே, இந்தியாவை இந்து ராஷ்டிராவாக ஆக்கிடத்தான். இதற்கு, வரலாற்றில் கொட்டிக்கிடக்கும் ஏராளமான சான்றுகளில் ஒரு பகுதியை இங்கே இடம்பெறச் செய்கின்றோம். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம், என்ற அடிப்படையில் :-

The leading Hindu nationalist leaders like Bal Gangadhar Tilak, Lajpat Rai, Madan Mohan Malaviya, M. S. Aney, B. S. Moonje, M. R. Jayakar and N. C. Kelkar, Swami Shardhanand etc. (many of whom were also Congress leaders) did not subscribe to an all inclusive India but were committed to the building of an exclusive Hindu nation. They believed that India was primordially a Hindu nation and should be nurtured as one. Nevertheless, they went around as great Indian 'nationalist' leaders. In fact, the majority community had the advantage of disguising its communalism under the cloak of nationalism. Take one glaring example, Madan Mohan Malviya, while he was President of the Indian National Congress in 1909, 1918 and 1933 which stood for a composite India, he also presided over the sessions of Hindu Mahasabha in the years 1923, 1924 and 1936 which demand India for Hindus only. He was the originator of the most divisive slogan 'Hindi Hindu-Hindusthan'.18 Despite his history of spreading communal hatred he continues to be known as a great Indian nationalist leader. Both RSS and Congress regard him as a leading indian nationalist.

இதன் பொருள்,

இந்து தேசியத்தின் முன்னணி தலைவர்களான பாலகங்காதர திலக், லஜபதி ராய், மதன் மோகன் மாளவியா, எம்.எஸ்.அனீ, பி.எஸ். மூஞ்சே, எம். ஆர். ஜெயகர் மற்றும் என் .சி.கெல்கர், சுவாமி ஷர்தானந்த் ஆகியோர் இவர்களில் பலரும் காங்கிரசிலும் தலைவர்களாக இருந்தார்கள். இவர்களில் யாரும் இந்தியாவை, எல்லாப் பூர்வ குடிகளும் சேர்ந்து வாழும் பூமி என எடுத்துக் கொள்வதற்கில்லை. ஆனால் இவர்களில் அனைவரும் இந்தியாவை இந்து தேசமாக ஆக்கிடவேண்டும் என்பதை தங்கள் இலக்காகக் கொண்டு இயங்கினார்கள். இவர்கள் இந்தியா அன்று தொட்டே ஒரு இந்து தேசம் என நம்பினார்கள். அதை அப்படியே வளர்க்க வேண்டும் என விரும்பினார்கள். இதுபோன்ற வக்கிரத்தை சுமந்துகொண்டு அவர்கள் தேசிய தலைவர்களாக வலம் வந்து கொண்டிருந்தார்கள். யதார்த்தத்தில் பெரும்பான்மை சமூகத்தைச் சார்ந்தவர்கள் தங்கள் மனதில் சுமக்கும் வக்கிர வகுப்புவாதத்தை, தேசியவாதம் என்ற வேஷத்தில் மறைத்துவிட முடிகின்றது. அதற்கான சாதகமான சூழல் அவர்களுக்கு இருக்கின்றது.

எடுத்துக்காட்டாக ஒருவரை சுட்டிக் காட்டுவோம். மதன் மோகன் மாளவியாவை எடுத்துக் கொள்ளுங்கள். இவர் காங்கிரஸ் கட்சியின் Indian National Congress தலைவராக*1909,1918,1933* ஆகிய



ஆண்டுகளில் இருந்தார். அப்போது இந்தியா, எல்லோருக்குமான இந்தியாவாக இருந்தது. அதே நேரத்தில் அவர் 1923,1924,1936 ஆகிய ஆண்டுகளில் நடந்த இந்து மகாசபையின் தலைவராகவும் இருந்தார். (இவர் அவைத் தலைவராக இருந்தபோதுதான்) இந்தியா இந்துக்களுக்கே என்ற முழக்கம் முன்வைக்கப்பட்டது. இந்தியாவை பிளக்கும் மூலகமாகிய ஹிந்தி- ஹிந்து- இந்துஸ்தான் என்ற முழக்கங்களின் ஊற்றுக்கண்ணாக இவர்தான் இருந்தார்.

(ஆதாரம் Gangadharam. K. K., Indian National Congress. Growth and Development, Kalankar, Delhi. 1972 - page 27)

வகுப்புத் துவேஷங்களை வளர்ப்பதில் ஒரு வரலாற்றையே படைத்த இவர் இந்தியாவின் தேசியத் தலைவர் என போற்றப் பெற்றவர். ஆர்.எஸ்.எஸ் (இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு)வும், காங்கிரசும் இந்தியாவின் முன்னணி தேசிய தலைவராக இவரை எடுத்துக் கொள்கின்றார்கள்.

### காங்கிரஸ் முதல்வரின் பிரகடனம்

இப்படி காங்கிரசை அப்பிக்கொண்ட இந்துத்துவ பிரிவினைவாதிகள், அப்போதே அதாவது - நாடு விடுதலை அடைந்துவிடும் என்ற நிலை வந்ததும், முஸ்லிம்களைக் குடியுரிமை அற்றவர்களாக ஆக்கிவிடுவோம், என்று பேசினார்கள். எடுத்துக்காட்டாக, இந்தியாவின் மத்தியப் பிரதேசம் என்ற சென்ட்ரல் பிராவின்ஸ் (இதில் இன்றைய மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், மகாராஷ்டிரா ஆகியவை அடங்கும்) இந்தப் பிரதேசத்தின் முதல்வராக இருந்தவர், (அப்போது அவருக்குப் பிரிமியர் என்று பெயர்) பண்டிட் ரவிசங்கர் சுக்ளா என்பவர்; இவர் காங்கிரஸ் கட்சியின் சார்பில் இருந்த முதல்வர். காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவராக கருதப்பட்டவர். இவர் 1947ஆம் ஆண்டு முதல்வாரத்தில் இந்து சேவா தள் (இந்து சேவா தளம்) என்ற அமைப்பின் மாநாட்டில் பேசும்போது இப்படிப் பேசினார்,

“சுதந்திர இந்தியாவில் இந்திய முஸ்லிம்கள், இந்துஸ்தானில் தங்கள் குடியுரிமையை இழப்பார்கள். அவர்களை ஏனைய வெளிநாட்டு பிரஜைகளைப் போலவே நடத்தப்படுவார்கள்.” (ஆதாரம்:The Bombay Chronicle, June 9,1947)

இதைத்தான் ஆர்.எஸ்.எஸ் என்ற அமைப்பும் பேசிக்கொண்டிருந்தது.

காங்கிரஸ் கட்சியின் அன்றைய முதல்வர் (1947) பேசிய பேச்சு மிகப்பெரிய கிளர்ச்சிகளை இந்தியாவில் உருவாக்கியது. இந்தப் பின்னணியில், அன்றைய முன்னணி பத்திரிகைகளில் ஒன்று இப்படியொரு தலையங்கத்தை எழுதியது.

ஒரு தேவையற்ற ஆலோசனை, அதில் மிகவும் வருத்தத்திற்குரியது என்னவெனில் அது பொறுப்புமிக்க, ஒரு காங்கிரஸ் தலைவரிடமிருந்து வருகின்றது. அதுவும் இந்தியாவின் மிகவும் முக்கியமான மத்திய பிராவின்ஸ் -இன் முதல்வரிடமிருந்து வருகின்றது. அது தவறு, அது அநீதியானது, அது மிகவும் ஆபத்தானது. இது இந்த நாட்டுக்கே ஆபத்தானது. இதற்கான நீதி நியாயங்கள் அவருக்கு எங்கே இருந்து கிடைத்தது? அவர் எப்படி இதனை நியாயப்படுத்துவார்? சுக்ளா சொன்னதாகச் சொல்வது, நாட்டின் ஒற்றுமைக்கு “உலை வைப்பதாகும்” (Editorial : In Bombay Chronicle, June 9,1947).

தொடக்கக் காலம் தொட்டே தாங்கள் பறை சாற்றித்தான், இன்றைய பாசிஸ்டுகள் பல்வேறு நாடகங்களை அரங்கேற்றி வருகின்றார்கள். ஆனால் இவர்களின் குறுகிய எண்ணங்களை மிகவும் எளிதாகச் சட்டமாக்கிட முடிகின்றது, காரணம் ஒரு மிருகப் பெரும்பான்மை நாடாளுமன்றத்தில் இருக்கின்றது.இவர்களுக்கு மாநிலங்களவையில் பெரும்பான்மை இல்லை. ஆனால் அங்கே தங்கள் பாசிச தகிடுதத்தங்களைக் காட்டி சட்டம் நிறைவேற்றப்பட்டதாக அறிவித்து விடுகின்றார்கள்.

பல கட்சியைச் சார்ந்தவர்கள் மாநிலங்களவையில் என்ன செய்கின்றோம் எனத் தெரியாமல் வாக்களித்துவிட்டு வெளியே வந்து வருத்தம் தெரிவித்தார்கள். (இதுதான் ஜனநாயகம்?)

இரு அவைகளிலும் டிசம்பர் 11, 2019 இல் இந்தச் சட்டம் நிறைவேறியது. கிஞ்சிற்றும் சிந்திக்காமல், குடியரசுத்தலைவர் அவரும் இதே சிந்தனையைக் கொண்டவர் என்பதால் கையெழுத்து போட்டு சட்டமாக்கினார் டிசம்பர் 12,2019ல்.

### எதிர்க்கட்சிகள்

எதிர்க்கட்சிகள், அதாவது இந்தக் குடியுரிமை

திருத்தச் சட்டத்தில் நாடாளுமன்றத்தில் தங்களால் சாதிக்க முடிந்தது எதுவுமில்லை என்பதை உணர்ந்தார்கள்.

குடியரசுத் தலைவரை சந்திப்பது என முடிவு செய்தார்கள். குடியரசுத் தலைவரை சந்தித்து இந்தச் சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டா மென கேட்டுக்கொள்ளச் சென்றார்கள். ஆனால் இந்த அதிபுத்திசாலிகள் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்த பின்னரே அவரை சந்தித்தார்கள். (இது ஜனநாயகத்தின் ஒரு தூணாகிய எதிர்க்கட்சியின் லட்சணம்..?)

**குடியரசுத் தலைவர்**

இந்தியாவில் யாரும் குடியரசு தலைவராகலாம். அவர் எந்த பின்னணியைக் கொண்டவராகவும் இருக்கலாம். ஆனால் பதவியில் அமர்ந்து விட்டால், நமது அரசியல் நிர்ணயச் சட்டப்படியே தான் நடந்திட வேண்டும். அவருக்கு அரசியல் சட்டத்தின் நுணுக்கப்பகுதி புரியாமலிருந்தால் ஆலோசனைகளைப் பெற ஆயிரம் வல்லுனர்கள் உண்டு. தேவையானால் அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 143ன் கீழ் உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனையைக்கோரி பெறலாம்.

அடுத்து ஒரு சட்டம் மக்கள் தளத்தில் எப்படி செயல்படும், அதனால் அதிகமாக மக்கள் பாதிக்கப்படுவார்களா? என்பதையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்திட வேண்டும். இதற்கெல்லாம் தன் அதிகாரத்தின் கீழ் இருக்கும், அரசு இயந்திரத்தை நன்றாகவே பயன்படுத்தலாம். இதையெல்லாம் அவர் அவசியம் செய்தாக வேண்டும். இல்லையேல் அவர் தன் கடமையில் தவறியவராவார். ஏனெனில் அவர் (The Custodian of the Constitution) அரசியல் நிர்ணயச் சட்டத்தின் முழுமுதற் காப்பாளர் என்ற பொறுப்பை சுமப்பவர்.

ஆனால் நமது குடியரசுத் தலைவர் வேதனைக்குரிய வகையில், நீட்டிய காகிதத்தில் காட்டிய இடத்தில் கையெழுத்துப் போடுபவராக ஆகிவிட்டார்.

இதனால்தான் இன்று CAA குடியுரிமைச் சட்டத்தால் பாதிக்கப்படும் பகுதிகள் பலனடையும் பகுதியை விட அதிகம். அந்த மக்கள் இந்தச் சட்டம் இயற்றப்பட்ட நாட்களை ஜனவரி 10-12ஐ கருப்பு நாட்கள் என அறிவிக்கின்றார்கள். மூச்சு விடாமல் முச்சந்தியில் நின்று போராடுகின்றார்கள். “அவசரம் இந்தச்சட்டம் அசாமுக்கு” என அள்ளிக் கட்டிக்கொண்டு ஓடினார்கள். ஆனால், அங்கே அத்தனை கெடுபிடிகள், அலம்பல்கள் ஆகியவற்றிற்குப் பின்னும் ஓர் அறுதி இலக்கை அடைந்திட இயலவில்லை.

**இதற்கு முன்னர் இருந்த குடியரசுத் தலைவர்களின் முன்மாதிரி...!**

**K. R. நாராயணன்**

பாசிசத்தின் நேரடி ஆட்சி வாஜ்பேயி காலத்தில் தொடங்கியது (1998-1999). அப்போது அவர் இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தில் பல திருத்தங்களை கொண்டு வந்துவிட முயற்சிகளை மேற்கொண்டார். இவர்கள் தங்கள் பாசிச திட்டங்களைச் செயல் படுத்திட, சில ஜனநாயகப் பம்மாத்துக்களைக் காட்டுவார்கள். அந்த அடிப்படையில் நாட்டு மக்களிடமும் கற்றவர்கள் - சிந்தனையாளர்கள் இவர்களின் கருத்துக்களைப் பெறுவதுபோல், சில Consultation Paper என்ற கலந்தாலோசனை காகிதங்களை அனுப்பினார்கள். அந்தக் கலந்தாலோசனை காகிதங்களில் சில சம்பந்த மில்லாத கேள்விகள் - அந்தக் கேள்விகளுக்குள் மக்கள் புகுமுன் ஓர் அறிமுகம்.

அந்த அறிமுகத்தில் நமது அரசியலமைப்புச் சட்டம் எழுதப்பட்டு 50 ஆண்டுகளை நெருங்கு


K. R. நாராயணன்

கின்றது. காலங்களும், சூழ்நிலைகளும் மாறி விட்டன. அதனால் அதைக் காலத்திற்கேற்ப மாற்றிட வேண்டும். ஆகவேதான் இந்தக் கேள்விகளை முன்வைத்து உங்கள் ஆலோசனை களையும், கருத்துக்களையும் கேட்கின்றோம், என்பதாக அமைந்தன இந்தக் கேள்விகள்.

இதனை பற்றிய முழு தகவல்களையும் நான் நிறுவி நடத்திவந்த, விடியல் வெள்ளி மாத இதழில் விபரமாக வெளியிட்டிருந்தேன். அதேபோல், நான் நிறுவி நடத்திவந்த மக்கள் இயக்கமாம், மனித நீதிபாசறையின் சார்பில் இஸ்லாத்தின் சட்டங்கள்தாம் மனிதனின் இயல்புகளுக்கும், உலகிலுள்ள இயற்கைக்கும் ஏற்றதாக இருக்கும். அவற்றை ஆய்வுக்கு உட்படுத்தி, அவற்றின் அடிப்படையில் நமது சட்டங்களை மாற்றி அமைத்தால் ஒரு அமைதியான, அதே நேரத்தில் ஒரு வல்லரசின் வலுவோடு இந்தியாவை மாற்றியமைக்கலாம் என்றும் எழுதி இருந்தேன்.

ஆனால் அவர்கள்- வாஜ்பேயி தலைமை யிலான பாசிச அரசு, அவர்கள் விரும்பிய வழியில் அரசியல் நிர்ணயச் சட்டத்தை மாற்றியமைத்திட வே முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

அப்போது (1997 முதல் 2002 வரை) குடியரசு தலைவராக இருந்த K. R. நாராயணன் அவர்கள், குடியரசுத் தலைவர் என்ற அடிப்படையில் ஓர் ஆய்வை, தகுதியானவர்களைக் கொண்டு மேற்கொண்டார்கள். அதன்வழி இந்தியாவில் 50 ஆண்டுகளாக அதாவது அரசியல் நிர்ணயச் சட்டம், அரங்கேறிய அன்றிலிருந்து 2000 வரை நன்றாகவே செயல்பட்டிருக்கிறது, இன்னும் செயல்படும் என அறிவித்தார். அதனால் அரசியல் நிர்ணயச் சட்டத்தை அவலட்சணமாகப் பழுதுபார்க்காதீர்கள்.

"Don't Tinker with Constitution" எனச் சொன்னார். இதனை தனது குடியரசு தின உரையிலும் குறிப்பிட்டார். இதனால் அன்றைய முயற்சிகள் கைவிடப்பட்டன. ஒரு வகையில் சொன்னால், அரசியல் நிர்ணயச் சட்டம் பாதுகாக்கப் பட்டது.

(K.R. நாராயணன் அவர்கள், ஒரு நூலையும் இந்தத் திசையில் வெளியிட்டார்கள். In the Name of the People : Reflections on Democracy ; Freedom and Development more )

இதுதான் குடியரசு தலைவர் செய்ய வேண்டிய வேலை. ஏனெனில் அவர்கள் இந்திய அரசியல் சாசனத்தைக் காப்பேன் என உறுதிமொழி எடுப்பவர்கள். அவர் அரசியல் சாசனத்தைக் காப்பாற்றினார் என்பதனால் அவரை இரண்டாவது முறை குடியரசு தலைவராக ஆகவிடாமல் பா.ஜ.க தடுத்தது. இதை அவரே சொல்லியிருக்கிறார். இப்படிப் பல எடுத்துக் காட்டுகளைச் சொல்லலாம்.

(விரிவஞ்சி இப்போது விட்டு விடுகின்றோம்)

ஆக அன்றே இவர்கள் எடுத்த முயற்சிகள் பலன் தந்திடவில்லை, இப்போது CAA என்ற குடியுரிமை திருத்தச் சட்டத்தை தண்டோரா போட்டுக் கொண்டுவந்தார்கள். இப்போது அதையும் செயல்படுத்திடவில்லை, செயல் படுத்திட திணறுகின்றார்கள்.

நாடாளுமன்ற விதிகளின்படி, இயற்றப்பட்ட சட்டங்களைச் செயல்படுத்திட சில சட்ட முறைகளை பின்பற்றிட வேண்டும். இதனை, Working Manual of Parliament என்பார்கள்.

இந்த அடிப்படையில் CAA என்ற குடியுரிமை திருத்தச் சட்டத்தை செயல்படுத்துவதற்கான விதிகளை வகுத்தாக வேண்டும். அதனை Committee on Subordinate Legislation துணை விதிகளை இயற்றும் குழு என அழைக் கின்றார்கள்.

இப்படி ஒரு துணை குழு வழியாக சட்டங்களை செயல்படுத்திடும் முறையை சீர்தூக்கிப்பார்ப்பது நம் நாட்டில் மட்டுமல்ல, உலகெங்கும் புழக்கத்தில் உள்ளது. ஒரு சட்டம் இயற்றப்பட்டவுடன் மூன்று மாதத்திற்குள் இந்த குழுவின் ஒப்புதலைப் பெற்றாக வேண்டும். இல்லையேல் தகுந்த காரணங் களைச் சொல்லி கால அவகாசத்தை நீட்டிக் கேட்க வேண்டும்.

ஒரே நேரத்தில் மூன்று மாதங்களுக்கு மேல் கால அவகாசம், நீட்டிக் கொடுக்கக்கூடாது, மாட்டாது. ஆனால் நமது உள்துறை அமைச்சரகம், முதலில் ஏப்ரல் 9, 2021 வரை அவகாசம் கேட்டது. பின்னர் ஜூலை 9, 2021 வரை அவகாசம் கேட்டது. ஆனால் அதிலும் சட்டத்தைச் செயல்படுத்தும் துணை விதிகளை உருவாக்கி விடவில்லை.

இதில் ஜூலை 9, 2021ல் இருந்து ஜனவரி 9, 2022 வரை ஒரேயடியாக ஆறு மாதங்கள் நீட்டி கொடுத்தது தவறு என்பது சட்ட



வல்லுனர்களின் கருத்து. ஒரு முறை கால அவகாசத்தை நீட்டிப்பது என்பது, மூன்று மாதத்திற்கு மேல் இருக்கக்கூடாது, நாடாளு மன்ற நடைமுறை நெறிக்கு (Parliament Manual) எதிரானது. ஆனால், இங்கே இவர்கள் வென்றவன் சொன்னதெல்லாம் வேதம் என எல்லாம் நடந்து கொண்டிருப்பதால், யாருடைய அறிவுபூர்வமான கேள்விகளுக்கும் பதிலில்லை. இது கேட்பாரற்ற பாசிசத்தின் ஆட்சி. இங்கே நாடாளுமன்ற ஜனநாயகம், இப்படியொரு பரிமாணத்தை எட்டியிருக்கின்றது.

நாடாளுமன்ற நடைமுறைகளின்படி பார்த்தால், இவர்கள் CAA என்ற சட்டத்தை செயல்படுத்தத் தேவையான விதிகளை வகுக்க வில்லை என்றால், இவர்கள் இந்தச் சட்டத்தை செயல்படுத்திட இயலாது.

வேறொரு விதத்தில் பார்த்தால், ஆப்புக்குள் மாட்டிய குரங்குபோல் ஆகிவிட்டார்கள். காரணம் இப்போது இந்தச் CAA என்ற குடியுரிமை திருத்தச் சட்டத்தைச் செயல் படுத்தினால், அது இவர்களின் இந்து, இந்து எனச் சொல்லி நாட்டை நாசக்காடாக ஆக்கிக் கொண்டிருக்கின்றார்களே, அந்த இந்துக்களையே அதிகமாகப் பாதிக்கும் என்பதே நடைமுறை யதார்த்தம். இதுவே அசாமில் நடந்தது.

**அசாமில் NRIC என்ற National Register of Indian Citizens**

இந்திய தேசிய குடிமக்களின் பதிவேடு ஒன்றை உருவாக்கிட வேண்டும் எனக் குதித்தார்கள். அங்கே 40 லட்சம் பங்களாதேஷிகள் வந்து குடியமர்ந்து வாக்குறுதியைப் பெற்று, ஆட்சி மாற்றங்களை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள் எனக் குற்றம் சாட்டினார்கள். ஆனால் அங்கே இறுதியில் நடந்தது என்னவெனில், 12 லட்சம் இந்துக்கள் (இவர்களின் அகராதிப்படி இந்துக்கள்) குடியுரிமை அற்றவர்களாக ஆனார்கள். முஸ்லிம்களில் குடியுரிமை கேள்விக்குறியானது 6 லட்சம் பேருக்கு மட்டுமே. அதுவும் சலசலத்துப்போனது. இந்தத் தகவல்களையெல்லாம் வைகறை வெளிச்சம் வாசகர்களுக்கு நிரம்பவே தந்திருக்கின்றோம்.

“தாருல் இஸ்லாம் ஃபவுண்டேசன் டிரஸ்ட், நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம்” இவற்றின் சார்பில், அசாமில் இதுபோன்ற வழக்குகளை நடத்திக்கொண்டிருக்கும் ஹாபில் ரஷீத் சவுத்ரி அவர்களை அழைத்துவந்து விளக்கங் களையும், வழிமுறைகளையும் விளக்கினோம்.

இவற்றையெல்லாம் மிகவும் விளக்கமாக “வைகறை வெளிச்சம்” இதழில் வெளியிட்டிருந்தோம்.

இன்றளவும் அவர்களால் அசாமில் எதையும் செய்திட இயலவில்லை. இன்னும் அசாமில் தேசிய இந்தியக் குடிமக்களின் பதிவேடு தயாராகிடவில்லை. இப்போது எந்தத் தன்னார்வக்குழு, அசாமில் அந்நியர்கள் குறிப்பாக முஸ்லிம்கள் வந்து அசாம் மக்களின் உரிமைகளைப் பறித்துவிட்டதாக, கூப்பாடு போட்டதோ அதே அமைப்பு, இப்போது இது தேவையில்லை, இதில் ஊழலும், முறைகேடும் தான் மலிந்து காணப்படுகின்றது எனக் கூறி உச்சநீதிமன்றத்தில் NRIC- இரத்து செய்ய வேண்டும். என்றொரு மனுவை தாக்கல் செய்தது. இதையும் வைகறை வாசகர்களுக்குத் தந்துள்ளோம்.

### மிகப்பெரிய வேதனை

அசாம் விவகாரத்தில் நெஞ்சை வருடும் மிகப்பெரிய செய்தி என்னவெனில், 4 லட்சம் கிராமவாசிகளுக்கு அவர்கள் அத்தனை பேரும் இந்தியாவின் பூர்வ குடிகள் இப்படி ஒரு தேசிய பதிவேடு பற்றி பேச்சும்,வழக்குகளும், அடிதடி களும் நடந்துகொண்டிருக்கின்றது என்பதே தெரியாது. அவர்கள் தாங்கள் உண்டு, தங்கள் பிழைப்பு உண்டு என வாழ்ந்து கொண்டிருக்கும் அன்றாடம் காய்ச்சிகள்.

### அடர்ந்து வரும் மாணவர் எதிர்ப்புகள்

NESO - மாணவர்கள் அமைப்பின் பட்டியல் தனியாகத் தரப்பட்டுள்ளது. CAA என்ற குடியுரிமை திருத்தச் சட்டத்தை எதிர்ப்பதில் முன்னணியில் நிற்பவர்கள், மாணவர்கள் தாம். நம் உச்சநீதி மன்றத்தில் இந்த சட்டதிற்கெதிராக அதிகமான வழக்குகளைத் தொடுத்திருப் பவர்களும், இந்த மாணவர்கள் அமைப்புகள் தாம். பல மாநிலங்களில் குறிப்பாக வட கிழக்கு மாநிலங்களிலுள்ள மாணவர்கள்தாம் அதிகமான வழக்குகளைத் கொடுத்துள்ளார்கள். இதற்காகவே அவர்கள் ஓர் அரிய அமைப்பை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். அதன் பெயர்தான் NESO என்ற North East Students Organization - வடகிழக்கு மாணவர்களின் அமைப்பு. மாணவர்களின் கூட்டமைப்பின் சார்பில் ஒரு வழக்கும், இதன் உறுப்பு அமைப்புகள் தனித்தனியாக ஒரு வழக்கையும் தொடர்ந்து இருக்கின்றனர்.




### மாணவர்களின் அச்சம்

இந்துக்களை ஒட்டுமொத்தமாகக் காத்திட கொண்டுவரப்பட்ட இமாலய நிவாரணம் இந்தச் சட்டம் எனப் பீற்றிக்கொள்ளப்பட்ட இந்தச் சட்டத்தை இவர்கள் அகராதிப்படி (இந்துக்கள்) என அறியப்படுபர்கள் ஏன் எதிர்க் கின்றர்கள், என்பது மிகவும் முக்கியமான கேள்வி.

இவர்கள் இந்து, இந்து என அமர்க்களப்படுத்தி முஸ்லிமல்லாத எல்லோருக்கும் எங்கிருந்து வந்தாலும்,குடியுரிமையை வழங்கிடும்போது, பூர்வீகமாக, பரம்பரை பரம்பரையாக இங்கே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள், அவர்களின் இளைய தலைமுறையினர் தங்கள் கல்வி வாய்ப்பு, வேலைவாய்ப்பு ஆகியவை பறிபோய் விடும் என அச்சப்படுகின்றார்கள். இதை யெல்லாம் விட அவர்கள் தங்கள் கலாச்சாரம், அரசியல் உரிமை நில உரிமையெல்லாம் பாதிக்கப்படுகின்றது என உச்சநீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில் கூறியுள்ளார்கள்.

இன்றைய ஆட்சியாளர்கள் தங்கள் முஸ்லிம் வெறுப்பால், தங்கள் எதிர்காலத்தை அதாவது மாணவர்களின் எதிர்காலத்தை இருட்டுக்குள் தள்ளுகின்றார்கள் என அச்சப்படுகிறார்கள். தங்களுடைய எதிர்காலம் ஒளிமயமானதாக இருக்கவேண்டும் என்றால், இந்தச் சட்டத்தை அழித்தாக வேண்டும். அதற்காக எதிர்த்தாக வேண்டும் என முடிவு செய்துள்ளார்கள்.

### பாசிஸ்டுகளின் இடைவிடாத அறிவிப்புகள்

இந்தச் சட்டத்தை 2019ஆம் ஆண்டு டிசம்பர் 11ம் நாள் கொண்டுவந்தார்கள். 24 மணி நேரத்திற்குள் அதனைச் சட்டமாக்கி காட்டினார்கள். உடனேயே வெளிநாடுகளில் முஸ்லிமல்லாதவர்கள் எல்லாம் குடியுரிமை மனுபோட்டு குடிமக்களாக ஆகிக்கொள்ளலாம் என சண்டமாருதம் அடித்தார்கள். ஏதோ முஸ்லிமல்லாதவர்களை எல்லாம் வாழ வைத்து விட்டதாகக் கற்பனை செய்து கொண்டார்கள். தொடர்ந்து ஒவ்வொருமுறை துணை விதிகளுக்கு காலஅவகாசம் கேட்கும்போதும், இப்படியொரு அறிவிப்பைச் செய்வார்கள்.

ஒரு இரண்டு வருடங்களுக்குள் அது இப்படிக் கவிழும், தங்களுடைய வார்த்தைகளை தாங்களே விழுங்க வேண்டியதுவரும் என்பதை அவர்கள் இந்த பாசிச வெறியர்கள் அறிந்திருக்கவில்லை. இவர்களின் கிரிமினல் பின்னணி அப்படி.

உலக அரங்கில் இந்தியாவின் மனித உரிமை மானம், கப்பலேறும் என்பதை அறிந்திருக்க வில்லை. உலக மனித உரிமை அமைப்புகள் தலையிடும் ஓர் அறிவற்ற ஆக்கமே இந்தச்சட்டம் என்பதை அவர்கள் அறிய மாட்டார்கள். இவர்களிடம் இருப்பதெல்லாம் முஸ்லிம்களுக்கெதிரான ஒரு வெறி.

அவ்வளவுதான் இதை விட்டால் இவர்களுக்கு இந்தியாவின் மீதோ இந்தியாவின் உலக மானங்களைப் பற்றியோ தெரியாது. தண்டாலும், தட்டிக்கேட்டால் கொலையும் செய்து கொண்டிருந்தவர்கள், எப்படி இந்தியா என்ற மாபெரும் பூந்தோட்டத்தின் பன்முகத் தன்மைகளையும், மேடுபள்ளங்களையும் அறிந்திடுவார்கள்?

இவர்களின் அறிவின்மைக்கு நம் நாட்டில் வாழும் தற்போதைய தலைமுறையும், எதிர்காலத் தலைமுறையும் தந்திட வேண்டிய விலை மிகவும் அதிகமாகிக்கொண்டே போகின்றது. சர்வதேச அளவில் ஏற்படும் சரிவுகளைச் சரிகட்டிட காலங்கள் பல ஆகலாம்.

இனி இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்பிட வேண்டிய மகத்தான பொறுப்பு இன்றைக்கு இவர்களை எதிர்த்து களத்தில் நிற்கும் அனைவரையும் சாரும். முஸ்லிம்கள் ஆற்றிடும் பொறுப்பு எல்லாவற்றிலும் அதிகமானது.

சற்றும் தளராமல், சற்றும் விட்டுக் கொடுக்காமல் நம் பொறுப்புகளை நிறைவேற்றிட முன்வருவோம். இன்ஷா அல்லாஹ்!

**குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்த மாணவர் அமைப்புகள்**

North East Students Organization (NESO) இந்த அமைப்பு இந்தச் சட்டம் நிறைவேற்றப் பட்ட டிசம்பர் 12ஆம் நாளை ஆண்டுதோறும் கருப்புச் சட்டமாக அறிவித்து வருகின்றது.

- Kasi Students Union
- All Assam Students Union
- Naga Students Federation
- Mizo Zirali Pawl
- TSF - Twipra Students Federation
- Manipur Students Union
- Garo Students Union
- All Arunachalla Students Union

இன்னும் பல அமைப்புகள், அரசியல் கட்சிகள், சமுதாய இயக்கங்கள் இவையும் வழக்கு தொடர்ந்துள்ளன.




**சர்வதேச அமைப்பு**

Officer of the High Commissioner for Human Rights - இன் Michelle Bachelet - என்பவர் உச்ச நீதி மன்றத்தில் ஒரு அறிக்கை தாக்கல் செய்ய உள்ளார். அவர் இந்தச் சட்டம் "CAA" சர்வ தேசிய தரத்தில் இல்லை என புகார் கூறியுள்ளார்.

**உச்சநீதிமன்றம்**

எண்ணற்ற வழக்குகள் குவிந்திருக்கின்றன உச்ச நீதிமன்றத்தில் என்பதே இந்தப் பிரச்சனையின் முக்கியத்துவத்தைப் பறைசாற்றுகின்றது. அதனால் உச்சநீதிமன்றம் இந்த வழக்கை கையிலெடுத்து, உடனே விசாரித்து, ஏங்கி நிற்கும் மக்களுக்கு நிவாரணங்களை வழங்கிட வேண்டும்.

**LTV என்ற நீண்ட கால விசா**

அண்டை நாடுகளிலிருந்து இந்தியா வந்தவர்களுக்கு ஏற்கனவே இருக்கும் நிவாரணங்கள்.

அண்டை நாடுகளிலிருந்து, திக்கற்று திசையற்று வருபவர்களுக்கு நம் நாட்டில் அவர்கள் என்றென்றும் தங்கிட (Long Time Visa) நீண்ட நாட்கள் தங்கிடும் அனுமதி வழங்கப் படுகின்றது. இதைத்தான் LTV என்கின்றார்கள்.

இதில் நம் நாட்டில் தங்கிடுபவர்களுக்கு வாக்குரிமையும், நிலங்களை சொந்தமாக வாங்கிடவும் அனுமதி வழங்கப்படுகின்றது.

ஆனால் இன்றைய ஆட்சியாளர்கள் அவர்களுக்குப் பிடிக்காத பல இந்துக்களைத் திருப்பி அனுப்பி இருக்கின்றார்கள் என்பதும் முறையாகப் பதியப்பட்டுள்ளது.

**- MGM**




# ஜெர்மனியில் இஸ்லாம்

ஜெர்மன், மத்திய ஐரோப்பாவில் அமைந்துள்ள ஒரு நாடு. டென்மார்க், போலந்து, ஒஸ்ட்ரியா, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், லக்ஸ்ஸம்பர்க், பெல்ஜியம், நெதர்லாந்து ஆகியன ஜெர்மனைச் சூழ அமைந்துள்ள அதன் அண்டைய நாடுகளாகும்.

3,56957 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்ட ஜெர்மனின் மொத்த சனத் தொகை சுமார் 8 கோடியாகும். நாட்டின் தலைநகரம் பெர்லின்; அரசாங்க மொழி ஜெர்மன் மொழியாகும். நாட்டு மக்களின் பெரும்பான்மையினர் கிறிஸ்தவர்கள். இங்கு வாழும் முஸ்லிம்களின் குடித்தொகை சுமார் 45 இலட்சமாகும். இவர்களில் பெரும்பான்மையினர் துருக்கிய வம்சாவழியினராவர். இவர்களின் எண்ணிக்கை 30 இலட்சமாக இருக்கலாம் என மதிப்பிடப்படுகின்றது. அரபு நாட்டவர்கள் உட்பட போல்கன் நாடுகளிலிருந்து வந்து குடியேறிய முஸ்லிம்களும் ஜெர்மன் முஸ்லிம் சமூகத்தில் அங்கம் வகிக்கின்றார்கள். ஜெர்மன் நாட்டவர்களில் குறிப்பிடத்தக்க தொகையினரும் இஸ்லாத்தைத் தமது மார்க்கமாகக் கொண்டுள்ளார்கள். இந்நாட்டில் கிறிஸ்தவ மதத்தை அடுத்து இரண்டாம் பெரும்பான்மை சமயமாக இஸ்லாம் தற்போது விளங்குகின்றது. ஜெர்மனியில் சுமார் 50 ஆயிரம் யூதர்களும் வாழ்கின்றார்கள்.

ஜெர்மன் மக்கள் மத்தியில் இஸ்லாத்தின்பால் நல்ல ஆர்வம் இருக்கின்றது. அவர்களின் ஆன்மீக வறுமையையும், உளரீதியான பிரச்சினைகளையும் இஸ்லாத்தினால் தீர்த்து வைக்க முடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள். உள்நாட்டு

முஸ்லிம்களில் பெரும்பான்மையினர் பெண்களாவர். இவர்களில் அதிகமானவர்கள் அரபு, துருக்கிய முஸ்லிம்களைத் திருமணம் முடித்து இஸ்லாத்தைத் தழுவியவர்களாவர். மற்றும் சில ஜெர்மனியர் வெளிநாடுகளில் இருந்தபோது இஸ்லாத்தைத் தழுவியிருக் கின்றார்கள்.

### இஸ்லாம் அறிமுகமான வரலாறு

துருக்கிய உஸ்மானியர் காலத்தில்தான் இஸ்லாம் இந்நாட்டில் அறிமுகமாகிப் பரவியது என்பது பொதுவாகக் கூறப்படும் கருத்தாகும். உண்மையில் இஸ்லாம் உத்தியோக பூர்வமாக இந்த நாட்டில் நுழைந்தது உஸ்மானியரின் ஆட்சியின்போதுதான் என்பதை மறுப்பதற்கு இல்லை. ஆயினும் அப்பாஸிய கலீபா அபூ ஜஃபர் அல் மன்ஸூர் உடைய ஆட்சிக் காலத் திலேயே ஜெர்மனுக்கு இஸ்லாம் அறிமுகமாகி கலீபா ஹாரூன் அர்ரஷீதின் ஆட்சியில் அது மேலும் வளர்ச்சிகண்டமை ஒரு வரலாற்று உண்மையாகும். கலீபா ஹாருன் அர்ரஷீதுக்கும் பிரான்ஸிய மன்னன் ஷார்லிமானுக்குமிடையில் இருந்த தொடர்பு வரலாற்றுப் புகழ்மிக்கதாகும். பிரான்ஸிய மன்னன் ஷார்லிமானின் அன்றைய தலைநகரம் இன்றைய ஜெர்மனியின் ஒரு நகரமான “ஆஹென்” ஆகும். இந்த நகரம் பிரான்ஸ், பெல்ஜியம், போலந்து ஆகிய நாடுகளின் எல்லையில் அமைந்துள்ளது. மற்றுமொரு தகவலின்படி ஜெர்மனியின் ஆரம்பகால சக்கரவர்த்திகளில் ஒருவர் இஸ்லாத்தைத் தழுவியிருந்தார் என்பதற்கான சில ஆதாரங்கள் இருப்பதாக ஆய்வாளர் கலாநிதி முஹம்மத் ஹய்ஸம் அய்யாஷ் குறிப்பிடுகின்றார். இந்த சக்கரவர்த்தியின் பெயர் பொறிக்கப்பட்ட சில நாணயங்கள் சுவீடனில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் சக்கரவர்த்தியின் பெயருடன் ஹிஜ்ரி ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ளதோடு மறு பக்கத்தில் “லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர்ற ஸூலுல்லாஹ்” எனப் பொறிக்கப் பட்டுள்ளது.

ஜெர்மன் சக்கரவர்த்தியாக இருந்த KARL THE GREAT, அப்பாஸிய பேரரசின் கலீபா. ஹாரூன் அர்ரஷீதுடன் ராஜதந்திர தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டார். இரண்டு ஆட்சியாளர் களுக்குமிடையிலான உறவு மிகவும் அபூர்வமாக இருந்துள்ளது. ஆயினும் கி.பி. 1095ம் ஆண்டு ஜெர்மன் படையினரும் முஸ்லிம்களுக்கெதிரான மதப் போரில் கலந்து கொண்டதை அடுத்து இந்த உறவுகள் பாதிப் படைந்தன. பொதுவாக சிலுவை யுத்தங்கள் நடைபெற்ற காலத்தில் இஸ்லாத்தைப்பற்றியும், முஸ்லிம்களைப் பற்றியும் ஜெர்மன் உட்பட முழு ஐரோப்பா விலும் பல தப்பபிப் பிராயங்கள் பரவின. சிலுவை யுத்தங்கள் முடிவடைந்து பல நூற்றாண்டுகள் கழிந்து விட்ட போதிலும் இத்தகைய தப்பபிப் பிராயங்கள் ஐரோப்பியரின் உள்ளங்களில் மனப்பதிவுகளாக தொடர்ந்து காணப் படுகின்றன. பெரும்பாலான ஐரோப்பியர் இன்னும் இஸ்லாத்தை ஒருவகை பயங்கரவாத மாகவும், கொடுரமானதாகவும் தங்களுக்கு ஓர் அச்சுறுத்தலாகவுமே கருதுகிறார்கள். இதனால் ஜெர்மன் போன்றதொரு ஐரோப்பிய நாட்டில் இஸ்லாம் வேரூன்றுவது என்பது மிகவும் சிரமமானதொரு விடயமாகும்.

துருக்கிய உஸ்மானியரின் ஆட்சிக் காலத்தில், ஜெர்மனில் இஸ்லாம் சற்று வேகமாக அறிமுகமானது எனலாம். 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் பல நாடுகளையும் சேர்ந்த முஸ்லிம்கள் சிறுசிறு தொகையில் ஜெர்மனியில் வந்து குடியேறினார்கள். 1920களில் சில ஜெர்மன் பிரஜைகள் இஸ்லாத்தைத் தழுவினார்கள். இக்காலப் பிரிவில் ஓரிரு மஸ்ஜித்களும் நிர்மாணிக்கப்பட்டன. 1960களில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஸ்பெயின், இத்தாலி முதலான நாடுகளில் இருந்து ஜெர்மன் வந்தார்கள். இக்காலப்பிரிவில் துருக்கி, முன்னால் யூகோஸ்லாவியா முதலான நாடுகளிலிருந்து பெருந்தொகையான முஸ்லிம்களும் “ஜெர்மனுக்கு வந்தார்கள்; பிற்பட்ட காலங்களிலும் அரபு நாடுகள், வட ஆப்பிரிக்க நாடுகள், ஆசிய நாடுகள் முதலான வற்றில் இருந்தும் ஏராளமான முஸ்லிம்கள் ஜெர்மனில் குடியேறினார்கள்.

1982ம் ஆண்டு ஜெர்மன் மொழி பேசும் முஸ்லிம்கள் HOUSE OF ISLAM என்ற பெயரில் ஓர் அமைப்பை உருவாக்கி, பல்வேறு இஸ்லாமியப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

1980கள் முதல் அல்குர்ஆன், அல் ஹதீஸ் தொடர்பான சில நூல்கள் ஜெர்மன் மொழியில் பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டு வருகின்றன. அல்குர்ஆனுக்கான மொழி பெயர்ப்பு களும் வெளிவந்துள்ளன. சில மொழி பெயர்ப்புகள் முஸ்லிமல்லாத அறிஞர்களால்




செய்யப்பட்டவையாகும். FATIMA HEEREN, மௌலானா அபுல் அஃலா மௌதூதி, ஹமூதா அப்துல் அத்தி முதலான அறிஞர்களின் சில நூல்களும் ஜெர்மன் மொழிக்குப் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

முதலாவது ஜெர்மனிய இஸ்லாமிய பாலர் பாடசாலை 1981ம் ஆண்டு MUNICH நகரில் ஸ்தாபிக்கப்பட்டது. இந்தப் பாடசாலை ஜெர்மன் அரசினால் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது. தற்போது பெர்லின். பொன் முதலான நகரங்களிலும் பல இஸ்லாமியப் பாடசாலைகள் நிறுவப் பட்டுள்ளன. இந்த வகையில் 1995ம் ஆண்டு செப்டம்பர் மாதம் திறந்துவைக்கப்பட்ட மன்னா பஹ்த் அகடமி சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது.

### இன்றைய நிலை

ஜெர்மனியில் சுமார் 45 இலட்சம் முஸ்லிம்கள் வாழ்ந்த போதிலும் இவர்களில் பெரும்பான்மையினர் வெளிநாட்டவர்களாக இருப்பதனால் இவர்களது அரசியல் ரீதியான செல்வாக்கு பூஜ்ஜியமாகவே இருக்கின்றது. இங்கு அரசியல் ரீதியிலான ஏதாவது நட வடிக்கைகளில் முஸ்லிம்கள் ஈடுபட முற்பட்டாலும் வெகுசனத் தொடர்பு சாதனங்கள் இத்தகைய முயற்சியை மதத் தீவிரவாதமாகவும், அடிப்படைவாதமாகவும் சித்தரிக்கத் தொடங்கிவிடுகின்றன. அடிப்படை வாதம் என்ற சொல்லை வைத்து இஸ்லாம் பற்றிய ஒரு பயத்தையும் பீதியையும் ஜெர்மன் உட்பட ஐரோப்பா எங்கிலும் ஏற்படுத்தி வைத்திருக்கின்றார்கள்.

ஜெர்மனியில் வாழும் முஸ்லிம்கள் பெரியதொரு சிறுபான்மையாக இருந்த போதிலும், நாட்டின் அரச பரிபாலனத்தில் அவர்களின் பிரதிநிதித்துவம் எதுவும் இல்லை. முஸ்லிம் ஸ்தாபனங்களும் அமைப்புக்களும் ஒன்றிணைந்து புரிந்துணர்வுடன் செயற்படாத காரணத்தினால் இவை முஸ்லிம்களின் ஒரு சக்தியாக கருதப்படும் நிலையும் இல்லை. மேலும் இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்களில் பெரும்பான்மையினர் பாட்டாளி வர்கத்தைச் சேர்ந்த சாதாரண தொழிலாளர்களாகவே இருக்கின்றார்கள். இதனால் இவர்களின் சமூக அந்தஸ்தும் அவ்வளவு உயர்ந்ததாக இல்லை.

இந்த நாட்டு முஸ்லிம்கள் கல்வித்துறையிலும் மிகவும் பின்தங்கியவர்களாகவே இருக்கின்றார்கள். பெரும்பான்மையினராக விளங்கும் துருக்கியர் அடிப்படையில் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். உழைப்புக்காக இங்குவந்துள்ள இவர்கள் துருக்கியின் வாழ்க்கைத் தரத்தை வைத்து வசதியாக வாழ்ந்தால் போதுமானது என்று கருதுகின்றார்கள். தமது சிறார்களின் கல்வி முன்னேற்றத்தில் கவனம் செலுத்தும் துருக்கியப்

பெற்றோர் மிகவும் குறைவு. இதனால், வளரும் தலைமுறை பண்பாட்டு ரீதியாகவும் சமூக - கலாச்சார ரீதியாகவும் ஒப்பீட்டு ரீதியில் தாழ்ந்த நிலையிலேயே இருக்கின்றார்கள். ஜெர்மன் மக்கள் இந்த நாட்டு முஸ்லிம்களின் அவல நிலையை இஸ்லாத்துடன் தொடர்புபடுத்தி நோக்குவது மிகவும் வேதனைக்குரியதாகும்.

**தலைவர்களும் புத்திஜீவிகளும்**

ஜெர்மன் முஸ்லிம்கள் மத்தியில் பல தலைவர்கள், புத்திஜீவிகள் இருப்பதையும் மறுப்பதற்கில்லை. இந்தவகையில் ஜெர்மன் மொழி பேசும் முஸ்லிம்கள் மத்தியிலும் பல குறிப்பிடத்தக்க மனிதர்கள் இருக்கின்றார்கள்.

AHMED VON DENFER என்பவர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர். இவர் பல இஸ்லாமிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். ஜெர்மன் மொழியில் இவர் எழுதியுள்ள ஹதீஸ் தொகுப்பு மிகவும் பிரபலமானது. இவர் அண்மையில் புனித அல்குர்ஆனையும் ஜெர்மன் மொழிக்கு மொழிபெயர்த்துள்ளார். இவர் குழந்தை களுக்கான சில இஸ்லாமிய நூல்களை எழுதி யுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். முஹம்மத் அஹ்மத் ரஸூல் என்ற ஜெர்மனியரும் தனது ISLAMIC LIBRARY என்ற வெளியீட்டுப் பணியகத்தின் ஊடாக பல நூல்களை வெளியிட்டுள்ளார். இவரது அல்குர்ஆன் மொழிபெயர்ப்பு மிகவும் புகழ்பெற்றது.


AHMED VON DENFER


அப்துல் ஜவாத்

பேராசிரியர் அப்துல் ஜவாத் என்பவரும் இந்நாட்டிலுள்ள குறிப்பிடத்தக்கதோர் அறிஞர். இவர் இஸ்லாமிய விஞ்ஞான அகடமி என்ற அமைப்பின் ஒத்துழைப்புடன் பல இஸ்லாமிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவர் அண்மையில் எழுதிய பாடநூல்களில் 'இஸ்லாம்' என்ற நூல் ஜெர்மனியில் எல்லாப் பாடசாலைகளுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

ஜெர்மனிய பாடசாலைகளில் கற்பிக்கப்படும் பாட நூல்களில் இஸ்லாம் பற்றி இடம் பெற்றுள்ள பிழையான கருத்துக்களை விளக்கும் இந்நூல் மிகவும் பயனுள்ள ஒரு முயற்சியாக கருதப்படுகின்றது.

மொரோக்கோவின் ஜெர்மன் தூதுவராக இருந்தபோது இஸ்லாத்தை ஏற்ற முராத் Hofmaan அவர்களும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர் இவர் “இஸ்லாம்- மாற்றுவழி” என்ற தலைப்பிலும் “ஒரு ஜெர்மன் முஸ்லிமின் டயரி” என்ற தலைப்பிலும் இரு நூல்களையும் மற்றும் சில சிறு கையேடுகளையும் எழுதி வெளி யிட்டுள்ளார்.

ஜெர்மன் மொழிபேசுவோரின் அமைப்பான HOUSE OF ISLAMஇன் ஸ்தாபகரும் இதன் தலைவருமான ஜெர்மனிய முஸ்லிம் சகோதரரான முஹம்மத் ஸித்தீக் என்பவரையும் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

### மஸ்ஜித்களும் தஃவா அமைப்புகளும்

ஜெர்மனியில் தற்போது சுமார் 2600 மஸ்ஜித்கள் அமைந்துள்ளன. இந்நாட்டின் மிகப் பழமையான பள்ளிவாசல் தெற்குப்பகுதியில் அமைந்துள்ளது. இது சுமார் 400 வருடங்களுக்கு முன்னால் ஒரு ஜெர்மனிய இளவரசரால் நிர்மாணிக்கப்பட்டது என நம்பப்படுகின்றது. இந்தவகையில் பொஸ்னியா தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளில் இன்று காணப்படும் மஸ்ஜித்களில் மிகவும் பழமையானதாக இது இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

முதலாம் உலக மகா யுத்தத்தின்போது பேர்லின் நகரத்தில் முஸ்லிம் கைதிகளுக்கான ஒரு முகாம் WUENSDROF என்ற இடத்தில் - நிர்மாணிக்கப்பட்டிருந்ததென்றும் இங்கு ஒரு பள்ளிவாயல் அமைக்கப்பட்டதென்றும் வரலாறு கூறுகின்றது. 1918ஆம் ஆண்டு இந்த முஸ்லிம் கைதிகள் தத்தமது நாடுகளுக்குத் திரும்பிச்செல்லும் வரை இந்த மஸ்ஜித் இருந்துள்ளது. ஜெர்மனியில் நிர்மாணிக்கப் பட்ட ஆரம்பகால மஸ்ஜித்களில் ஆஹென் நகரில் உள்ள மஸ்ஜித் பிலால் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

ஜெர்மனியில் பல இஸ்லாமிய அமைப்புகளும் நிறுவனங்களும் காணப்படுகின்றன. இங்கு வாழும் முஸ்லிம்களில் பெரும்பான்மையினர் துருக்கிய வம்சாவழியினர் என்ற வகையில் இங்கு பல துருக்கிய முஸ்லிம் அமைப்புகள் காணப்படுகின்றன. இவற்றின் செயற்பாடுகளும் பணிகளும் பெரும்பாலும் துருக்கியர் மத்தியிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அமைப்புக்கள் பெரும்பாலும் துருக்கியிலிருந்து இயக்கப்படுகின்றமையும் குறிப்பிடத் தக்கதாகும். ஜெர்மனியில் இயங்கும் இத்தகைய துருக்கிய முஸ்லிம் அமைப்புக்களில் DITIB என்று சுருக்கமாக அழைக்கப்படும் “சன்மார்க்க விவகாரங்களுக்கான துருக்கிய இயக்கம்” குறிப்பிடத்தக்கதாகும். இந்த அமைப்பு துருக்கியரின் உள்நாட்டு அரசியல் நோக்கங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. முன்னாள் துருக்கியப் பிரதமர் நஜ்முத்தீன் அர்பகானை ஆதரிக்கும் MILLI GORUS இயக்கமும் ஜெர்மனியில் துருக்கியர் மத்தியில் மிகவும் செல்வாக்கு பெற்றதோர் அமைப்பாகும்.

"SULEYMANGEA" (ஸுலைமான்ஜியா) என்று மற்றோர் அமைப்பும் துருக்கியர் மத்தியில் இயங்குகின்றது. இவர்களின் சமயக் கொள்கைகள் அவ்வளவு தூரம் சீரானவையல்ல எனக் கூறப்படுகின்றது.

இவற்றோடு பொதுவாக ஜெர்மன் வாழ் முஸ்லிம்கள் மத்தியிலும் பிறர் மத்தியிலும் இஸ்லாமியப் பணியில் ஈடுபடும் பல இஸ்லாமிய அமைப்புகளும் நிறுவனங்களும் கலாசார நிலையங்களும் காணப்படுகின்றன.

ஜெர்மனியில் பல முஸ்லிம் மாணவர் அமைப்புகளும், கல்லூரிகள், பல்கலைக்கழக மட்டங்களில் இயங்குகின்றன. BONN நகரில் தப்லீஃ, ஜமாஅத்தின் மர்கஸ் ஒன்றும் அமைந்துள்ளது.

ஜெர்மனியின் FRANKFURT நகரில் இயங்குகின்ற அல் மஜ்லிஸுல் இஸ்லாமி என்ற அமைப்பு 1989ம் ஆண்டு உருவாக்கப் பட்டதாகும். இது ஜெர்மனியிலும் மற்றும் பல ஐரோப்பிய நாடுகளிலும் பல இஸ்லாமிய இயக்கங்களை ஒன்றிணைத்து செயற் படுகின்றது.

**MGM**





# இத்தகைய ஆட்சிக்கு அல்லவா மானுடம் ஏங்குகிறது!

மன்னர் ஸைஃபுத்தீன் குதுஸ் எகிப்து மன்னராக பொறுப்பேற்று சில மாதங்கள் கூட கழியவில்லை. எகிப்தை துவம்சம் செய்ய தாத்தாரியர்கள் தங்களது படையை எகிப்தை நோக்கி நகர்த்திக் கொண்டிருந்தார்கள். இன்னும் சில நாட்களில் படை எகிப்தை நெருங்கிவிடும். அந்த நேரத்தில் எகிப்து நாடு மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியில் இருந்தது. என்ன செய்வதென்று தெரியாமல், அமைச்சர்கள், அதிகாரிகள் மற்றும் மார்க்க அறிஞர்கள் ஆகிய அனைவரையும் அழைத்து மன்னர் அவசர ஆலோசனை கூட்டத்தை நடத்தினார்.

எகிப்து நாட்டை நெருங்கிக் கொண்டிருக்கும் எதிரிகள் ஒரு பக்கம். மறுபக்கம் கடுமையான பொருளாதார நெருக்கடியை நாடு சந்தித்து வருகிறது என இந்த இரண்டையும் விளக்கினார் மன்னர். இந்த சூழ்நிலையில் “மக்கள் அனைவரின் மீதும் ஜகாத்தை விட அதிகமான வரி வசூலிக்க வேண்டும். அப்பொழுது தான் எதிரிகளை வீழ்த்துவதற்கு நமது படைக்கு தேவையான வற்றை தயார் செய்ய இயலும்.” இது ஒன்றே இதற்கான தீர்வு உலமாக்களாகிய நீங்களே இதற்கான மார்க்க தீர்பை வழங்க வேண்டும் என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

உடனே அந்த சபையில் இருந்த சுல்தானுல் உலமா இஸ் இப்னு அப்துஸ் ஸலாம்(ரஹ்) அவர்கள் கூறினார்கள்: “மன்னரே தாங்கள் கூறியது சரியே!! ஓர் இஸ்லாமிய நாட்டை நோக்கி எதிரிகள் போர் தொடுக்க தயாராகும் போது அந்த இஸ்லாமிய நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்தால் போரை எதிர் கொள்வதற்கு தேவையானவற்றை பெற்றுக் கொள்ளும்பொருட்டு மக்களிடமிருந்து வரியை ஸகாத்திற்கும் அதிகமாக வசூலிக்கலாம்.

ஆனால் அவ்வாறு மார்க்க தீர்ப்பை வெளியிட வேண்டுமென்றால் இரண்டு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

*1*வது நிபந்தனை அரசின் பைத்துல்மால் காலியாக இருக்க வேண்டும்.

*2*வது நிபந்தனை (இது மிகவும் கடுமையான நிபந்தனை) மன்னர், அமைச்சர்கள், அரசு அதிகாரிகள் என அனைவரும் தங்களது அடிப்படை தேவைகளுக்கு தேவையானவற்றை தவிர மற்ற அனைத்தையும் விற்று மக்களும் இவர்களும் சமமானவர்களாக மாற வேண்டும். இதன்மூலம் நாட்டின் தேவை பூர்த்தி செய்யப் பட வேண்டும் இவ்வாறு செய்தும் இயல வில்லை எனும்போது தாராளமாக மக்களிடம் ஜகாத்தை விட அதிகமாக வரி வசூலிக்கலாம் என்ற மார்க்க தீர்பை நாங்கள் வெளியிடுவோம்.

இந்த இரண்டாவது நிபந்தனையை விட ஆச்சரியமானது இதனை மன்னர் ஸைஃபுத்தீன் குதுஸ்(ரஹ்) அவர்கள் நடைமுறைப் படுத்தியது. மன்னர், அமைச்சர்கள் அதிகாரிகள் அனைவருமே தேவைக்கு அதிகமாக தாங்கள் வைத்திருக்கும் அனைத்தையும் விற்றார்கள்.

இதனால் போர் செய்வதற்கு இஸ்லாமியப் படைக்கு தேவையான அனைத்தும் பூர்த்தி யானது. இன்னும் பணம் மீதம் இருந்தது, அதனை கொண்டு நாட்டின் கடன்கள் அடைக்கப்பட்டது. இன்னும் மீதம் இருந்தது அது ஏழை எளியோருக்கு வழங்கப்பட்டது.

பொருளாதார நெருக்கடியில் இருந்த தங்களது எகிப்து நாடு எவ்வாறு இத்தகைய செல்வ செழிப்பான நாடாக உருமாறியது என்று மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்தனர். இந்த அருமையான நிகழ்வை இஸ்லாமிய ஆட்சியை தவிர வேறெங்கு நாம் பெற்றுக் கொள்ள இயலும்!

ஆதாரம்:

தாதாரியர்களின் வரலாறு, டாக்டர் ராகிப் ஸர்ஜானி

தமிழில்:

மௌலவி நியாசுதீன் புகாரி



நேதாஜி



ஆதம் ஷேக் பாவா



எம்.எஸ். பீர்முகம்மது

# நேதாஜியின் இந்திய தேசிய இராணுவத்தில் குமரி முஸ்லிம்கள்!

தக்கலை அஞ்சுவண்ணம் ஜமாஅத் சேர்ந்த ஆதம் பாவா மகன் ஷேக் பாவா.. சிறு வயதிலேயே தாய் மரணித்து விட தக்கலையில் பள்ளி இறுதி வகுப்பு முடித்திருந்த ஒரே மகன் ஷேக் பாவாவை, தந்தை ஆதம் பாவா தன்னோடு சிங்கப்பூர் அழைத்து சென்றார். சிங்கப்பூரில் பிரபலமான London School of Commerce - ல் சேர்த்து படிக்க வைத்த ஷேக் பாவா ஆங்கிலத்தில் மிகவும் புலமை பெற்றிருந்தார்.

இந்தியாவில் சுதந்திரப் போராட்டம் உச்சத்தில் இருந்த காலமது. பஞ்சாப் மாகாணத்தில் ஜாலியன் வாலாபாக் படுகொலை சம்பவங்கள் வானொலி மூலம் கேட்டு, ஷேக் பாவா கொதித்துப் போயிருந்தார். சிங்கப்பூரில் வசித்து வந்த தக்கலை நண்பர்களிடம் இந்திய விடுதலை போராட்ட தகவல்களை வானொலியில் கேட்டு பகிர்ந்து வந்தார்.

இந்த காலகட்டத்தில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் காந்தியடிகளிடம் இந்தியர்களின் இன்னுயிரை கொன்றொழிக்கும் ஆங்கிலேயரை துப்பாக்கி முனையில் சந்திக்க அனுமதி கேட்க காந்திஜி அஹிம்சை வழியில் போராடுவோம் என்று மறுத்தார். காந்தியின் பதிலால் விரக்தி அடைந்த நேதாஜி யாரிடமும் சொல்லாமல் நாட்டை விட்டு வெளியேறி கால்நடையாகவே ஜப்பான் சென்று ஹிட்லரை சந்தித்து பேசியது வரலாறு..

திடீரென ஒருநாள் நேதாஜியின் குரல் வானொலியில் ஒலித்தது. "இந்திய மக்களை கொன்றொழிக்கும் வெள்ளையனை போர் முனையில் எதிர் கொள்வோம். ஜப்பானும் ஜெர்மனியும் நம்முடன் கைகோர்க்கும்.. அந்தப்படையின் பெயர் "இந்திய தேசிய ராணுவம் Indian National Army. - INA" வெளிநாடுகளில் வசிப்பவர்கள் INAல் இணையுங்கள். ஜப்பான் ராணுவ கர்னல் டோஜோ, சிங்கப்பூரில் வைத்து ஐ.என்.ஏ.யில் இணைபவர்களுக்கு பயிற்சி வழங்குவார்" என்று நேதாஜியே வானொலியில் பேசியதை உணர்ச்சி பொங்க கேட்டு கொண்டிருந்த ஷேக் பாவாவை மறுநாள் காலையில் காணவில்லை..

இவரது தந்தை ஆதம் பாவா மிகவும் கவலையுடன் பல இடங்களிலும் தேடி அலைந்து பின்னர் சிங்கப்பூரில் தக்கலை மக்கள் வசிக்கும் இடங்களில் தேடிய போது ஷேக் பாவா நேதாஜியின் ராணுவத்தில் சேர்ந்த விபரம் தெரிய வந்தது.. குறுகிய காலத்தில் ஆயுதப் பயிற்சி, துப்பாக்கி சுடும் பயிற்சி முடித்த நேதாஜியின் படை ரங்கூனுக்குள் நுழைந்தது. நேதாஜி ராணுவம் பயணித்த ரயில் ஐராவதி நதியை கடக்க துவங்கும் போது ஐஎன்ஏயின் வருகையை தெரிந்து கொண்ட ஆங்கிலேய விமானங்கள் குண்டு வீசும் நோக்கத்தில் வானில் பறந்தது.. ரயிலை விட்டு வெளியே வந்தவர்கள் நதியில் விழுந்து பலியான நிலையில் ஏனையோர் கைது செய்யப் பட்டு ரங்கூன் சிறையில் அடைக்கப்பட்டனர்..


தாயகம் செல்கிருர்

முன்னுள், அடிமை இந்தியாவின் விடுதலைக்காக கிழக்காசியாவிலிருந்து போர் தொடுத்த சுதந்திர வீரர் சுபாஷ் சந்திர போஸின் படையணியிலே 'சர்ஜெண்ட்' பதவி வகித்த எங்களது அன்பில் பிணைந்த ஜனப் எம். எஸ். பீர்முஹம்மத் அவர்கள் 4—9—55 அன்று இந்தியாவிற்கேகும் 'ஸ்டேட் ஆப் மதராஸ்' என்ற கப்பலில் தாயகமேகுவதை முன்னிட்டு, அன்னர் தாயகம் சென்று, இன்பத் தடாகத்தில் மூழ்கி நலம் பல பெற்று தனி சிறக்க வாழ வல்ல இறைவனின் பெருங்கருணை வாய்ப்பதற்கு வாழ்த்துகின்றோம்.

இன்னணம்

பி. எஸ். பக்ருத்தீன், எம். பி. எஸ். ஹமீத், டி. ஏ. காதிர்.

1955ல் எம்.எஸ்.பீர் பீஹம்மது அவர்கள் தாயகம் திரும்பிய போது வெளிவந்த பத்திரிகை செய்தி

ஷேக் பாவாவும் மரணமடைந்து விட்டதாக தக்கலையிலும் சிங்கப்பூரிலும் தகவல் பரவியது. உறவினர்கள் ஃபாத்திஹா ஓதியது கூட நடந்துள்ளது. நீண்டகால சிறைத்தண்டனை அனுபவித்து விடுதலையான ஷேக் பாவா ரங்கூனிலிருந்து தக்கலை வந்த போது அனைவரும் வியப்பாக பார்த்து சம்பவங்களை கேட்டறிந்தனர்.

இந்திய விடுதலைக்காக நேதாஜியின் இந்திய தேசிய ராணுவத்தில் பணியாற்றி சிறைத் தண்டனை உட்பட பல்வேறு கொடுமைகளை அனுபவித்த ஷேக் பாவா பிற்காலத்தில் தமிழக அரசின் போக்குவரத்து துறையில் செக்கிங் இன்ஸ்பெக்டராக பணியாற்றியவர். ரங்கூனிலிருந்து தக்கலை வந்து மனைவி பிள்ளைகளுடன் வசித்தவர் தக்கலை அஞ்சு வண்ணம் ஜமாஅத் துணை தலைவராகவும் பொறுப்பு வகித்துள்ளார்.

அன்புக்குரிய சகோதரர்கள் Basheer Ina , Adam Sheikh Hameed Ina Ameer Ina உள்ளிட்டோர் இவரது பிள்ளைகள். தங்கள் தந்தை இந்திய தேசிய ராணுவத்தில் பணியாற்றிய நினைவை போற்றும் வகையில் நாகர்கோவில் இளங்கடை ஹவ்வா நகரில் தங்களது வீடுகள் இருக்கும் பகுதிக்கு "INA Quarters" என்று பெயர் சூட்டியுள்ளனர். ஜனவரி 23 - நேதாஜியை நினைவுகூறும் தினத்தில் குமரி மண்ணிலிருந்து இந்திய தேசிய ராணுவத்தில் பணியாற்றிய ஆதம் ஷேக் பாவாவையும் நினைவு கூறுவதில் பெருமை கொள்கிறேன்.

சிங்கப்பூரில் ஷேக் பாவாவுடன் இணைந்து இந்திய தேசிய ராணுவத்தில் பணியாற்றிய மேலும் இரண்டு பேரும் உண்டு. தக்கலை அஞ்சுவண்ணம் ஜமாஅத் சேர்ந்த ஹாஜி எம்.எஸ்.கவுஸ் மற்றும் எம்.எஸ். பீர்முகம்மது.

சேக் பாவாவும், எம்.எஸ்.கவுஸ் இருவரும் ராணுவத்தில் பணியாற்றிய நிலையில் எம்.எஸ். பீர்முகம்மது அவர்கள் "சர்ஜெண்ட்" அந்தஸ்தில் பணியாற்றி யுள்ளார்...



**குளச்சல் ஆஷிம்**



# முதல் சிலுவைப்போர் வெற்றி வீரர் சுல்தான்

# நூருத்தீன் ஸங்கி(ரஹ்)

## இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்), சுல்தான் ஸலாஹூத்தீன் அய்யூபி(ரஹ்) ஓர் அறிமுகம்

வரலாற்றில் முஸ்லிம்கள் மறக்கக்கூடாத நபர்களில் முக்கியமானவர்கள் இமாதுத்துன் ஸங்கி(ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்) மற்றும் ஸலாஹூத்தீன் அய்யூபி(ரஹ்) ஆகியோர். ஆனால் மறக்கப்பட்டு விட்டவர்கள்.

நபி(ஸல்) அவர்களுக்கு பின்னர் நேர்வழி பெற்ற கலீபாக்களாலும் அதன் பின்னர் வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களாலும் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. உமர்(ரலி) அவர்களுடைய காலத்தில் ஜெருசலேம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.

ஜெருசலேம் யூதர்களுக்கும் கிஜீத்தவர்களுக்கும் முக்கியமான பூமி. குறிப்பாக கிறித்தவர்களுக்கு அது ஏசு பிறந்த மண். எனவே, அவர்கள் இந்த மண்ணை கைப்பற்ற எல்லா விதமான முயற்சிகளையும் செய்து வந்தனர். அதற்காக கி.பி.1095இல் போப் அர்பன்-2 என்பவர் உத்தரவின் பேரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலிருந்தும் ஒருவர் என பங்கேற்று முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு போரை தொடங்கினர். இதன் பெயர் சிலுவைப்போர். இப்படி பல சிலுவைப் போர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப் பட்டன.

இப்படி நடத்தப்பட்ட அனைத்து சிலுவைப் போர்களிலும் சிலுவைப்படையினர் முஸ்லிம் களுக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை அரங்கேற்றினர். இந்த சிலுவைப்படையினர் தாங்கள் படையெடுத்து வந்த வழி நெடுகிலும் பல்வேறு அநியாயங்களை முஸ்லிம்களுக்கு செய்தனர். இந்த அநியாயங்களில் அவர்கள் கிறித்தவர்களையும் கூட விட்டு வைக்கவில்லை. அவர்களையும் கொலை செய்தனர். சிலுவைப் படையினரின் குதிரைகளின் முழங்கால்கள் ரத்தத்தில் மூழ்கும் அளவிற்கு ரத்த சகதி இருந்தது என வரலாற்றில் பதியப்பட்டது. அந்த அளவிற்கு வெறி கொண்ட கூட்டமாக அவர்கள் இருந்தனர்.. சிறுவர்களோ பெரியவர் களோ யாரையும் அவர்கள் உயிரோடு விட்டு வைத்ததில்லை. கண்ணில் காண்வர்களை எல்லாம் கொன்று, பார்வையில் பட்டதை எல்லாம் கொள்ளையடித்து சென்றனர்.

அப்படிப்பட்ட சிலுவைப்படையினரின் தாக்குதல்களை தடுக்கவே முடியாத கையறு நிலையில் முஸ்லிம்கள் இருந்து வந்த

வேளையில் முதன் முதலில் அவர்களை நோக்கி எதிர் தாக்குதலை தொடுத்தவர் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள். முஸ்லிம்களை ஒரு தலைமைக்குள் கொண்டு வர முயன்றவர். ஜிஹாதை மறந்து இருந்த இஸ்லாமிய சமுதாயத் திற்கு ஜிஹாதை மீண்டும் நினைவுப் படுத்தியவர். கிறித்தவர்களின் கையில் இருந்து எடெஸ்ஸா போன்ற முக்கியமான பகுதிகளை கைப்பற்றியவர்.

இதன் பின்னர் இந்த பணிகளை அடுத்த நிலைக்கு எடுத்து சென்றவர் நூருத்தீன் ஸங்கி அவர்கள். சிலுவைப்படையினரை சின்னா பின்னப்படுத்தியவர். இன்று சுல்தான் ஸலாஹூத்தீன் அய்யூபி(ரஹ்) அவர்களை தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் சுல்தான் ஸலாஹூத்தீன் அய்யூபி அவர்களின் தலைவராக, வழிகாட்டியாக இருந்தவர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

இஸ்லாத்தை பின்பற்றுவதிலும் அதனை செயல்படுத்துவதிலும் நேர்வழி நின்று ஆட்சி செய்த, சொர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப்பட்ட நான்கு கலீஃபாக்கள், அவர்களுக்கு பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸ்(ரஹ்), இவர்களுக்கு பின்னர் நூருத்தீன் ஸங்கி(ரஹ்) அவர்களை தான் இந்த பெருமக்களுக்கு இணையாக கூறமுடியும்.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் ஆட்சியாளர்களுடன் குறிப்பாக வடக்கு ஈராக் போன்ற நாடுகளுடன் இணைந்து ஒரு திறமையான இஸ்லாமிய தடுப்பு படையை உருவாக்கியவர் நூருத்தீன் ஸங்கி(ரஹ்) அவர்கள்.

நூருத்தீன் ஸங்கி அவர்களின் கனவு ஒன்று தான். முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும். ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப் படையினருக்கு எதிராக ஓர் ஒருங்கிணைந்த இஸ்லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கனவு.

நூருத்தீன் ஸங்கிக்கு பிறகு அந்த பணியை தொடர்ந்தவர் ஸலாஹூத்துன் அய்யூபி அவர்கள். இவர் காலத்தில் தான் ஜெருசலேம் முஸ்லிம்களின் கையில் வந்தது. இந்த வடு ஆறாத வடுவாக கிறித்தவர்களுக்கு இருந்தது. முதலாம் உலகப்போரின் போது பிரெஞ்சு தளபதி ஹென்றி ஜோசப் ஈகுவின் கௌராட் என்பவன் சலாஹூத்தீன் அய்யூபி அவர்களின் அடக்கஸ்தலத்தை எட்டி உதைத்து "எழுந்திரு, ஸலாஹூத்தீன் நாங்கள் திரும்பி வந்து விட்டோம். இன்றைய தினம் 'பிறையை சிலுவை' வெற்றி கொண்டு விட்டது" என்று வெறிகொண்டு கூறியதிலிருந்து ஸலாஹூத்தீன் அய்யூபி அவர்கள் கிறித்தவர்களுக்கு கொடுத்த அடி எப்படிப்பட்டது என்பதை உலகம் அறியும்.

கிறித்தவ உலகம் கிட்டத்தட்ட எண்ணூறு வருடங்களுக்கு பிறகு வரலாற்றை நினைவில் வைத்து இஸ்லாமிய உலகத்தை பழி தீர்த்து கொண்டது. ஆனால் இஸ்லாமியர்கள் தங்களது வரலாற்று நாயகர்களை மறந்து விட்டது தான் வேதனை. இனி உள்ளே...

**சென்ற தொடரின் தொடர்ச்சி.....**

அப்துல் மஸீஹ் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாக நாடகமாடி வந்தார். ஆனால் அவர் மறைமுகமாக கிறித்தவராகவே வாழ்ந்து வந்தார். அவர் மொசூலில் மொத்த அதிகாரத்தையும் தன் கைவசம் வைத்திருந்தார். அவர் முஸ்லிம்களில் இருந்த அறிஞர்களை கண்டுபிடித்து அவர்களை நாட்டை விட்டு விரட்டி வந்தார். முஸ்லிம்களை கொடுமைப் படுத்தி வந்தார். ஆனால் இவை அனைத்தையும் அவர் முஸ்லிம் என்ற பெயரில் செய்து வந்தார்.

இதையெல்லாம் அறிந்த காரணத்தினால் தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள் தன் படைகளுடன் வந்து மொசூலை முற்றுகையிட்டிருந்தார். ஆனால் அவர் அதனை தாக்கவோ அழிக்கவோ விரும்பவில்லை. மாறாக அதனை சூழ்ச்சியாளர் களிடமிருந்து பாதுகாக்கவே விரும்பினார். அவரிடம் அப்துல் மஸீஹின் கெட்ட நடத்தைகள் குறித்தும் முஸ்லிம்களிடம் அவர் நிகழ்த்திய கொடுமைகள் குறித்தும் ஏற்கனவே கூறப்பட்டிருந்தன. நூருத்தீனின் நோக்க மெல்லாம் கிறித்தவர்கள் முஸ்லிம்களின் மீது ஆதிக்கம் செலுத்துவதை தடுப்பது தான்.

நிலைமை இவ்வாறிருக்க நூருத்தீன் ஸங்கி அவர்களுடன் சமாதானம் பேச அப்துல் மஸீஹ் பல முயற்சிகளை முன்னெடுத்தார். ஆனால் நூருத்தீன் ஸங்கி அவர்கள் அவை அனைத்தையும் நிராகரித்து விட்டார்.

"நான் வந்து விட்டேன். மொசூலுக்குள் நான் நுழைந்தே தீருவேன்" என்று நூருத்தீன் கூறி விட்டார்.

இதற்கிடையே நூருத்தீன் ஸங்கி அவர்களின் உண்மையான நோக்கம் தெரிய வந்தவுடன் அவருடைய மருமகன் ஸைஃபுத்தீன் அவருடன் ஓர் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டார். இந்த விஷயங்களை தெரிந்து கொண்ட அப்துல் மஸீஹின் நண்பர் ஒருவர் அவரிடம் வந்து, "உங்களுக்கு இன்னும் உண்மை தெரியாதா? நூருத்தீன் ஸங்கி அவர்களும் அவருடைய மருமகனும் ஓர் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார்கள். நீங்கள் தனிமைப்படுத்தப் பட்டுவிட்டீர்கள். இதனால் உங்கள் தலை உங்கள் உடலை விட்டு பிரியப்போகும் நாள் வெகுதூரத்தில் இல்லை. ஆகவே, உடனடியாக ஏதாவது செய்து தப்பிக் கொள்ளுங்கள். ஏதோ எனக்கு தெரிந்த செய்தியை உங்களுக்கு உங்களின் நன்மையை நாடி நான் கூறி விட்டேன்" என்று சொல்லி சென்றுவிட்டார்.

இந்த செய்தியை கேள்விப்பட்டவுடன் அப்துல் மஸீஹிற்கு தூக்கமே வரவில்லை. நேரே ஸைஃபுதீனிடம் சென்று, "நீயும் உன் மாமனும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டீர் களாமே. நான் உன்னுடைய இராஜ்யத்தை பாதுகாக்கவும் பராமரிக்கவும் ஏகப்பட்ட முயற்சிகளை செய்துள்ளதை நீ மறந்து விட்டாயா? என்னால் நூருத்தீனை எதிர்த்து போரிட இயலாது. தயவு செய்து என்னை காப்பாற்று" என்று கதறி அழ ஆரம்பித்து விட்டார். இதற்கு பதிலளித்த ஸைஃபுத்தீன், "என்னுடைய மாமனை தடுக்கும் சக்தி எனக்கில்லை. ஆனால் உன்னை காப்பாற்ற ஒரு வழி உள்ளது. நீ நேராக ஷேக் (தலைவர்) உமருல் மல்லா அவர்களிடம் சென்று உதவி கேள். அவர் ஒருவர் மட்டுமே உன்னை இப்போதைக்கு இந்த பிரச்னையிலிருந்து காக்க வல்லவர்." என்று கூறிவிட்டார்.

இதனை கேட்ட அப்துல் மஸீஹ் அவர்கள், "அல்லாஹ்வின் மீது சத்தியமாக நான் இதுவரை முஸ்லிம்களுக்கு செய்த கொடுமைகளை அறிந்த பின்னர் உமருல் மல்லா அவர்கள் எனக்கு நிச்சயம் உதவி செய்யவே மாட்டார். ஆனால் எனக்காக அவரை இங்கே வரச்சொல்லி நீ தான் பரிந்து பேச வேண்டும்" என்று கோரினார்.

உமருல் மல்லா அவர்கள் ஓர் இறையச்சம் கொண்ட இறைநேசர். அவர் யாரிடமும் எந்த தேவையும் கொண்டிராதவர். இறை இல்லத்தில் தன்னை தனிமைப்படுத்தி கொண்டிருந்தவர். இதன் காரணமாக அவர் மீது நூருத்தீன் ஸங்கி அவர்கள் பெருமதிப்பு கொண்டிருந்தார்கள்.

அப்துல் மஸீஹின் வற்புறுத்தலின் காரணமாக ஸைஃபுத்தீன் அவர்கள் உமருல் மல்லா அவர்களை பெரும் சிரமத்திற்கு அவருடைய இருப்பிடத்திற்கு சென்று சந்தித்தார். அப்துல் மஸீஹ் அவர்களும் உடனிருந்தார். ஸைஃபுத்தீன் அப்துல் மஸீஹை எல்லா விவரங்களையும் எடுத்துரைக்கும் படி கூறினார். அப்துல் மஸீஹ் எழுந்து நின்றவர் அப்படியே தேம்பி தேம்பி அழ ஆரம்பித்து விட்டார். இப்போது உமருல் மல்லா அவர்கள் அப்துல் மஸீஹை நோக்கி, "மனிதகுலத்திற்கு விரோதியாக மாறிவிட்டவர் இப்போது பெண்ணைப்போல் அழுது கொண்டிருக்கிறார்" என்று கூறினார்.

அப்துல் மஸீஹ் இப்போது உமருல் மல்லா அவர்களை நோக்கி, "நான் நூருத்தீன் ஸங்கி அவர்களால் என் இரத்தம் சிந்தப்படுவதிலிருந்து உங்களிடம் பாதுகாப்பு கோருகிறேன்" என்று கோரினார்.

இதற்கு பதிலளித்த உமருல் மல்லா அவர்கள், "நூருத்தீன் அவர்களால் நீங்கள் இரத்தம் சிந்தப்படுவதிலிருந்து பாதுகாப்பு பெற்றீர்கள்" என்று பதிலளித்தார்.

"அப்படியானால் என் செல்வம்" என்று அடுத்த கேள்வி எழுப்பினார் அப்துல் மஸீஹ்.

"உங்களின் செல்வத்திற்கும் பாதுகாப்பு பெற்றீர்கள்" என்று பதிலளித்தார் உமருல் மல்லா.

அடுத்ததாக, "என் குடும்பம்" என்று கேள்வி எழுப்பினார் அப்துல் மஸீஹ்.

"உங்களின் குடும்பத்திற்கும் பாதுகாப்பை பெற்றீர்கள்" என்றார் உமருல் மல்லா.

ஸைஃபுத்தீன் உடனடியாக சில முக்கியமான நீதிபதிகளை வரவழைத்து இந்த உறுதி மொழியை எழுதி இரண்டு பிரதிகளை எடுத்து உமருல் மல்லா அவர்களிடம் கொடுத்தார். ஒன்று நூருத்தீன் அவர்களுக்கு. மற்றொன்று அப்துல் மஸீஹ் அவர்களுக்கானது.

உமருல் மல்லா அவர்கள் அந்த பிரதிகளை எடுத்துக் கொண்டு நேராக நூருத்தீன் அவர் களிடம் சென்றார். நூருத்தீன் அவர்கள் உமருல் மல்லா அவர்களை கண்டவுடன் மிகுந்த மகிழ்ச்சியுடன் மரியாதையுடனும் தன்னுடைய கூடாரத்தை விட்டு வெளியில் வந்து அவரை வரவேற்றார். அதன் பின்னர் உமருல் மல்லா

அவர்கள் தான் வந்ததற்கான நோக்கத்தை கூற ஆரம்பித்தார்.

“நீங்கள் என்னை நம்புகிறீர்கள் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். நான் உங்களிட மிருந்து ஒரு பரிசை எதிர்பார்த்து வந்துள்ளேன்”.

நூருத்தீன் அவர்கள் ஆச்சரியத்துடன் அவரை பார்த்து, “நீங்கள் நான் தரும் எதையும் சாப்பிட மாட்டீர்கள். நான் தரும் எந்த பொருளையும் வாங்கிக்கொள்ளமாட்டீர்கள். அப்படி இருக்க நான் எப்படி உங்களுக்கு பரிசளிக்க இயலும்” என்று கேட்டார்.

அதற்கு பதிலளித்த உமருல் மல்லா அவர்கள், “நீங்கள் இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றி தருவதன் மூலம் எனக்கு பரிசளிக்கலாம்” என்று கூறினார்.

இப்போது அந்த ஒப்பந்தத்தை வாங்கி அதன் வாசகங்களை படித்துப் பார்த்த நூருத்தீன் அவர்கள் கலங்கியவராக, “நான் இங்கே வந்ததே அப்துல் மஸீஹிடமிருந்து முஸ்லிம்களை காப்பாற்றுவதற்காகத் தானே” என்று கூறினார்.

இதற்கு பதிலளித்த உமருல் மல்லா அவர்கள், “நீங்கள் அவரை முஸ்லிம்களின் மீது ஆதிக்கம் செலுத்தும்படியான எந்த சலுகையையும் நான் கேட்கவில்லை” என்று கூறினார்.

இந்த உரையாடல்களுக்கு பின் ஒரு முடிவுக்கு வந்தவராக நூருத்தீன், “அப்துல் மஸீஹ் அவருடைய உயிருக்கு என்னால் ஆபத்துவராது” என்று கூறினார்.

இப்போது உமருல் மல்லா அவர்கள், “அப்படியானால் அவருடைய குடும்பத்தினர்” என்று கேள்வி எழுப்பினார்.

“யார் அவருடைய குடும்பத்தினர்” என்று நூருத்தீன் கேட்டார்.

“அவர்கள் கிறித்தவர்கள்” என்று மல்லா பதிலளித்தார்.

“அவர்களும் என்னிடம் பாதுகாப்பு பெற்றார்கள்” என்று பதிலளித்தார் நூருத்தீன்.

“அப்படியானால் அவருடைய செல்வங்கள்” என்று மறுபடியும் கேள்வி எழுப்பினார் மல்லா.

நூருத்தீன் அதிர்ச்சியுடன், “இந்த இஸ்லாத்தின் எதிரியை நம் அடிமையை செல்வங்களுடன் செல்ல எப்படி அனுமதிப்பது?” என்று திருப்பி கேட்டார்.

அதற்கு பதிலளித்த உமருல் மல்லா அவர்கள்,” அவர் உங்களின் உத்தரவாதப்படி சுதந்திர மாக்கப்பட்டுவிட்டார். மேலும் அவர் மொசூலின் அதிகாரத்தில் ஏற்கனவே இருந்தவர் என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள்” என்று கூறினார்.

இதன் பின்னர், “அவருடைய செல்வங்களும் பாதுகாக்கப்பட்டன” என்று உத்தரவாத மளித்தார் நூருத்தீன்.

இந்த சம்பவங்களுக்கு பின்னர் அப்துல் மஸீஹ் அவர்கள் தன்னை வெளிப்படையாக முஸ்லிமாக அறிவித்தார். ஆனால் ஏற்கனவே இருந்த அனுபவங்களின் அடிப்படையில் நூருத்தீன், அவரை தன்னுடனே உயிர் உத்தர வாதமளித்து அவருடைய செல்வங்களையும் அவருக்கு அளித்து அவருடைய குடும்பத்தையும் அவருடன் வர அனுமதித்து அழைத்து சென்றார். அப்துல் மஸீஹ் அவர்களின் விருப்பப்படியே வெளிப்படையாக பெயர் மாற்றத்தை அறிவித்து தன்னுடன் அழைத்து சென்றார்.

அடுத்ததாக நூருத்தீன் அவர்கள் திரும்பி சென்றதற்கான முக்கிய காரணம் அவர் மொசூலுக்குள் தங்கி இருந்த காலத்தில் அவர் ஒரு கனவு கண்டார். அந்த கனவில்.....

- இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்.

**அபூ அஃப்ராஹ்**


## இஸ்லாமிய நாகரிகம்




**ஆசிரியர்:** முஸ்தபா அஸ்ஸிபாஈ
**பக்கம்:** 208 பக்கங்கள்
**விலை:** 130/-

“

**நமது கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் எத்துணை கீர்த்திமிக்கது என்பதை இங்கே இயன்ற மட்டும் எடுத்துக் காட்டியுள்ளேன்.**

**நமது நாகரிகத்தின், பண்பாட்டின் அனைத்து அம்சங்களையும் இங்கே சுட்டிக்காட்டுவது என்பது இயலாத ஒன்றுதான். நான் தொடங்கி வைத்திருக்கின்றேன். நீங்கள் தொடருங்கள்; முடித்தும் வையுங்கள்.**

- முஸ்தபா அஸ்ஸிபாஈ

8072773868


Vergal Pathippagam | 8148129887

# CRUSADE 2.0 BY JOHN FEFFER

**The west Resurgent War on Islam**

# சிலுவைப் போர் 2.0

**மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்**




இன்றைய நாள்களில் மேலைநாட்டவர்கள் அமெரிக்காவின் தலைமையின் கீழ் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் ஒரு பெரும் போரைத் தொடுத்து வருகின்றார்கள். இந்தப் போரை அவர்கள் சிலுவைப் போர் 2.0 என அழைக்கின்றார்கள். சுருக்கமாகச் சொன்னால் நாங்கள் முஸ்லிம்கள் மேல் தொடரும் இரண்டாவது சிலுவைப் போர் என்கின்றார்கள். சிலுவைப் போர்கள் என்றாலே அது முஸ்லிம்களுக்கும் கிருஸ்தவர்களுக்கும் இடையே நடந்த போர் என்று பொருள். இப்போது நடப்பது இரண்டாவது சிலுவைப் போர் என்றால் முதல் சிலுவைப் போர் எப்போது தொடங்கியது? எப்போது முடிந்தது?

முதல் சிலுவைப் போர் 1095ல் தொடங்கி 1274ல் முடிந்தது. அவை 9 போர்களாக நடந்தன. அவற்றை சிலுவைப்போர் 1.0 என்று கிருஸ்தவ உலகம் அழைக்கின்றது.

சிலுவை யுத்தம் 2.0 என்ற இரண்டாவது சிலுவைப்போர் 1991ல் தொடங்கியது என்பது வரலாற்று வல்லுநர்களின் கணிப்பு. இதனை முதல் வளைகுடா போர் என அழைப்பார்கள். இந்த சிலுவைப் போர் 2.0வை எப்படி நடத்திக் கொண்டிருக்கின்றோம் என்பதை ஜான் பெஃபர் என்பவர் ஒரு நூலாகத் தருகின்றார். அந்த நூலின் பெயர் CRUSADE 2.0 THE WEST'S RESURGENT WAR ON ISLAM அதாவது சிலுவைப் போர் 2.0 மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்.



இந்த நூலின் தமிழ் வடிவமே இந்தத் தொடர். முஸ்லிம்கள், முஸ்லிம் நாடுகள், இஸ்லாம், இவற்றின் மேல் இன்றைய நாட்களில் நடக்கும் தாக்குதல்களைப் புரிந்திட இந்தத் தொடரைப் படியுங்கள். இது தொடரல்ல. பயன் பயக்கும் பாடம். வரலாற்றுத் தொகுப்பு.

**தமிழ் வடிவம்: மு. குலாம் முஹம்மது.M.A.,**

# ரஷீத் கன்னவ்சியின் நீதிமன்ற வாக்குமூலம்

இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்கள் மீது விசாரணை நடைபெற போகின்றது என்பதை அறிவித்ததும், துனீஸியாவெங்குமுள்ள வழக்கறிஞர்கள் அனைவரும் ஒன்று திரண்டு இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்களுக்காக வாதாட முன் வந்தார்கள்.

விசாரணை நாடகத்தில் நடுவராய் அமர்ந்திருந்தவர் ஹாஷிமி ஸெம்மால் என்ற நீதிபதி. உண்மையிலேயே முறையான நீதிபரிபாலனம் நடைபெறுகின்றது என்றொரு தோற்றத்தை ஏற்படுத்திட வெளிநாட்டுப் பார்வையாளர்களும், மேலைநாட்டுப் பத்திரிகையாளர்களும், பார்வையாளர்கள் வரிசையிலே அமர அனுமதிக்கப்பட்டார்கள்.

ஆனால் போர்கிபாவின் அரசு சுமத்திய குற்றங்களை நிரூபிக்க முடியாத சூழ்நிலை வரும்போது, பார்வையாளர்கள் பகுதியில் அமர்ந்திருந்தவர்கள், அத்தனைபேரும் வெளியேறும்படி பணிக்கப்பட்டார்கள்.

முதன் முதலில் வெடிகுண்டு வைத்து உல்லாச விடுதிகளைத் தகர்த்தார்கள் என்று 13பேர் நீதிமன்றத்திற்கு இழுத்து வரப்பட்டனர். இந்த 13 பேருமே இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தைச் சார்ந்தவர்கள்தான் என்று சாதிக்க நீதிபதியே வாதித்தார்.

ஆனால், இந்த 13 பேரும் எந்த இயக்கத்தையும் சார்ந்தவர்களல்லர். வேறுபல குற்றங்களுக்காக பல மாத காலம் சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்தவர்கள். அவர்கள் நீதிமன்றதில் தந்த வாக்கு மூலத்தில்,

“நாங்கள் இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என்று கூற வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளோம். நாங்கள் அப்படிக் கூறவில்லையென்றால் சித்ரவதைக் குள்ளாக்கப்படுவோம் என அச்சுறுத்தவும் பட்டுள்ளோம். ஏற்கனவே இந்தப் பொய்யைச் சொல்ல வேண்டும் என்பதற்காக பல கடுமையான தண்டனைகளை அனுபவித்து வருகின்றோம்” என்று கண்ணீர் ததும்ப கூறினர்.

அத்துடன் தங்களுடைய மேலாடைகளைக் களைந்து தங்களுக்கு அளிக்கப்பட்ட சித்ரவதைகளையும்,காயங்களையும் வழக்கறிஞர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் காட்டினார்கள். இதன் பிறகு இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தைச் சார்ந்த உண்மையான உறுப்பினர்கள் விசாரணைக்கு அழைத்து வரப்பட்டனர்.

இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தின் உறுப்பினர்கள் நீதிமன்றதில் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதை பிரான்ஸ் நாட்டிலிருந்து வெளிவரும் லிபரேஷன் என்ற நாளிதழ் இப்படிச் சுட்டிக் காட்டுகின்றது:

“இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தைச் சார்ந்த அத்தனை பேரும் தாங்கள் அந்த இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என்பதை பெருமையுடன் சொன்னார்கள். தூக்குக்கயிற்றின் முன்னால் நிற்கின்றோம் என்ற அச்சமோ பீதியோ அவர்களிடம் கிஞ்சிற்றுமில்லை. அத்தனை பேரும் தங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகளை பொறுமையுடன் அதே நேரத்தில் அழுத்தமாக மறுத்தார்கள். அவர்கள் அத்தனை பேரும் சீரிய அறிவுப் பயிற்சியைப் பெற்றிருந்தார்கள். கட்டுப்பாட்டுடன் திகழ்ந்தார்கள்.”

நீதி விசாரணை என்ற பெயரில்தான் நீதிமன்ற நடவடிக்கைகள் நிகழ்ந்தாலும் நீதிபதியே முழுவதும் பேசினார். அவர் அங்கு வேறு யாரையுமே பேசவிடவில்லை. பேசியவர்களையெல்லாம் இடைமறித்து தன்னுடைய தீர்ப்பைச் சொல்லியே மிரட்டிவந்தார். வழக்கறிஞர்களுக்கும் இதே கதிதான்.

குற்றவாளிகளையோ, வழக்கறிஞர்களையோ ஒரு வார்த்தையைக் கூட ஒழுங்காகச் சொல்லி முடிக்க அனுமதிக்காததைக் கண்டு பல வழக்கறிஞர்கள் கொதித்தெழுந்தனர். தங்களுடைய அதிருப்தியை வெளிப்படுத்தும் வகையில், வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தை விட்டு வெளிநடப்புச் செய்தனர். இவற்றையெல்லாம் சற்றும் சட்டை செய்யவில்லை அந்நீதிபதி ஹாஷிமி.

இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்கள் மீது சுமத்தப்பட்டக் குற்றச்சாட்டுகளில் ஒன்று, அவர்கள் ஈரானின் எடுபிடிகள் என்பது.

ஈரானில் இடம்பெற்ற இஸ்லாமிய புரட்சியை துனீஸிய இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்கள்

வரவேற்றார்கள், ஆதரித்தார்கள் என்பது உண்மைதான். ஆனால் அந்தப் புரட்சியை ஹபீப் போர்கிபாவும் தான் ஆதரித்தார், வரவேற்றார். அதுமட்டுமல்லாமல் ஈரான் புரட்சியை ஆதரித்தமைக்காக இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தின் தலைவர் ரஷித் கன்னவ்சி அவர்களுக்கு அரசாங்க வரவேற்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்தார் ஹபீப் போர்கிபா. அதே போர்கிபாதான் இப்போது ஈரான் புரட்சிக்கு ஆதரவு தெரிவித்ததற்காக இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்களை ஈரானின் எடுபிடிகள் என குற்றம் சாட்டி தூக்கிலிட ஏற்பாடு செய்தார்.

இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்கள் மீது சுமத்தப்பட்ட அடுத்தக் குற்றச்சாட்டு "ஆட்சியைக் கவிழ்க்கத் திட்டம் போட்டனர்" என்பதாகும். இந்தக் குற்றச்சாட்டிற்கு துனீஸிய நாட்டு சட்டப்படி மரணதண்டனை தரலாம்.

இந்தக் குற்றச்சாட்டு நீதிமன்றத்திற்கு வருமுன்னே அது நிரூபிக்கப்பட்டுவிட்டது என முழங்கினார் நீதிபதி. இதன் அடிப்படையில் இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்களுக்கு மரண தண்டனை தரப்படும் என்ற செய்தி நாடு முழுவதும் பரவியது.

மக்கள் வெகுண்டெழுந்தார்கள். இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்களை விடுதலை செய்யக் கோரி ஊர்வலங்கள், அறப் போராட்டங்கள் ஆரம்பமாயின. இந்நிலையில் இயக்கத் தலைவர் ரஷீத் கன்னவ்சி விசாரணைக்காக நீதிமன்றம் கொண்டு வரப்பட்டார்.

ரஷீத் கன்னவ்சி தன்னுடைய இளமையை இஸ்லாமிய இயக்கத்திற்காக செலவிட்டவர். அதுமட்டுமல்ல. தன்னுடைய அறிவையும் ஆற்றல்களையும் உடமைகளையும் இஸ்லாத்தை மேலோங்கச் செய்வதற்காக அர்ப்பணித்தவர்.

இஸ்லாமிய இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்ட நாள் முதல் வறுமையை வாஞ்சை யுடன் ஏற்றுக் கொண்டவர். ஆயுள் தண்டனை, சிறைவாசம், சித்ரவதை இவையே அவர் வாழ்க்கையில் அதிகமாக அனுபவித்த சுகங்கள்!

மார்க்கம் பேணி நடந்த தங்கள் குடும்பத்தினரையும், ஆறு மழலைகளையும் பயங்கர வறுமையில் விட்டுவிட்டு தன்னிடம் எஞ்சி இருக்கும் ஒரே ஆஸ்தியான தன்னுடைய உயிரையும் இஸ்லாத்திற்காக தந்திட நீதிமன்றத்திலே நின்றுகொண்டிருந்தார்.

இதற்கு முன் இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தைச் சார்ந்தவர்கள் விசாரணைக்குக் கொண்டு வரப்படும்போதெல்லாம் அவர்களை வாய்திறந்து பேச நீதிபதி அனுமதிப்பதே இல்லை. பல வேளைகளில் வாதாட வந்த வழக்கறிஞர்கள் வெறும் பார்வையாளர்களாக மட்டுமே அனுமதிக்கப்பட்டனர்.

இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தின் தலைவர் ரஷீத் கன்னவ்சி அவர்கள் வந்தபோதும் நீதிபதியே பேச ஆரம்பித்தார்.

தன் மீது சுமத்தப்பட்ட குற்றத்தை மறுக்கவோ, விளக்கம் தரவோ அவகாசம் தரவிரும்பாமல் நீதிபதியே அளந்து கொட்டிக் கொண்டிருந்தபோது இடைமறித்தார் கன்னவ்சி. நீதிபதியைப் பார்த்து அவர் சொன்ன முதல் வார்த்தைகளே அத்தனை பேரையும் நிசப்தத்தில் ஆழ்த்தியது. ரஷீத் கன்னவ்சி அவர்கள் சொன்னார்கள்:

"So you are so much in a hurry to see my bloodshed that you refuse to allow me to speak"

அதாவது, "நீதிபதி அவர்களே! உங்களுடைய அவசரம் எனக்குப் புரிகின்றது. நீங்கள் என்னுடைய இரத்தத்தைக் குடிக்கத் துடிக்கின்றீர்கள். ஆகவே தான் என்னை பேச அனுமதிக்கமாட்டேன் என்கிறீர்கள்.'"

நீதிபதியின் குரலை வெற்றி கொள்ளும் அளவில் சற்று உரத்த குரலிலேயே ரஷீத் கன்னவ்சி அவர்கள் இதனைச் சொன்னார்கள்.

தொடர்ந்து ரஷீத் கன்னவ்சி அவர்கள் தன்னுடைய இயக்கத்தின் கொள்கை, குறிக்கோள் ஆகியவற்றை விவரித்துவிட்டு தன்னுடைய இயக்கத்தவர்கள் மீது சுமத்தப் பட்ட குற்றச்சாட்டை ஆணித்தரமாக மறுத்தார்கள். அப்பொழுது நீதிபதி குறுக்கிட்டு கேட்டார். (அப்பொழுது துனீஸியா முழுவதும் கிளர்ச்சி ஆரம்பித்திருந்தது)

**நீதிபதி:**

இப்போது நாடு முழுவதும் உங்கள் இயக்கத்திற்கு ஆதரவாக நடக்கும் பேரணி களுக்கும் கிளர்ச்சிகளுக்கும் நீங்கள் தானே பொறுப்பு? நீங்கள் தானே அவற்றை ஏற்பாடு செய்தீர்கள்?

**ரஷீத் கன்னவ்சி:**

இல்லை. இந்தப்பேரணிகளுக்கோ,

கிளர்ச்சிகளுக்கோ நாங்கள் ஏற்பாடு செய்யவில்லை. எங்கள் இயக்கத்தின் எல்லா முன்னணித் தலைவர்களும் சிறையிலிருக் கின்றனர். இந்தக் கிளர்ச்சிகளும் பேரணிகளும் ஆட்சியாளர்கள் எங்கள் மீது கட்டவிழ்த் திட்டுள்ள அநீதிகளுக்கும் அபாண்டங்களுக்கும் எதிராக மக்களே ஏற்பாடு செய்தவை.

**நீதிபதி:**

உல்லாச விடுதிகள் மீது நடந்த வெடிகுண்டு தாக்குதலுக்கு நீங்கள் தான் பொறுப்பு. இதற்கு என்ன சொல்கின்றீர்கள்?

**ரஷீத் கன்னவ்சி:**

உல்லாச விடுதிகளில் நடந்த வெடிகுண்டு சம்பவங்களுக்கும், எங்கள் இயக்கத்தவர் களுக்கும் எந்தத் தொடர்புமில்லை. வன்முறை எப்போதும் எங்கள் வழியாக இருந்ததில்லை. நீங்கள் ஏன் சில பரம்பரை குற்றவாளிகளைப் பிடித்துத் துன்புறத்தி எங்களவர்கள் என்று முத்திரை குத்துகின்றீர்கள்?

**நீதிபதி:**

அவர்கள் உங்கள் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் தான் என ஒத்துக் கொண்டுள்ளார்கள். அவர்கள் தான் வெடிகுண்டு வைத்து உல்லாச விடுதி களைத் தகர்த்தவர்கள்.

**ரஷீத் கன்னவ்சி:**

அவர்கள் இதற்காக காட்டுமிராண்டித் தனமாக சித்ரவதை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் எங்கள் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் எனக் கூறும்படி கட்டாயப்படுத்தப் பட்டுள்ளனர். இத்தனைச் சித்ரவதைகளுக்குப் பின்னரும் அவர்கள் தாங்கள் இந்த இயக்கத்தைச் சார்ந்தவர்களில்லை என்றே கூறி இருக்கின்றனர்.

**நீதிபதி:**

என்ன இருந்தாலும் உங்கள் இயக்கத்திற்கும், வன்முறைகளுக்கும் தொடர்புண்டு.

**ரஷித் கன்னவ்சி:**

வன்முறையாளர்கள் என்ற வீண் பழியைச் சுமப்பதைத் தவிர வன்முறைக்கும் எங்களுக்கும் எந்தத் தொடர்புமில்லை.

**நீதிபதி:**

இவ்வளவு பெரிய இயக்கத்தை நடத்துவதற்கு உரிய நிதியை எங்கே இருந்து பெற்றீர்கள்?

**ரஷீத் கன்னவ்சி:**

நிதியை வைத்தே எல்லாவற்றையும் பார்க்கும் உங்களிடமிருந்து இப்படியொரு கேள்வி வந்ததில் ஆச்சர்யமில்லை. முதலில் ஒன்றை புரிந்து கொள்ளுங்கள். இஸ்லாமிய இயக்கங் களை நடத்த பணம் எப்போதும் மூலதனமாய் இருந்ததில்லை. அங்கே கொள்கைதான் மூலதனம்.

எங்கள் இயக்கத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய வருமானத்தில் ஐந்து சதவிகிதம் இயக்கத்திற்காகத் தருகின்ற வர்கள். எங்கள் இயக்கத்தின் அனுதாபிகள் தங்களது வருமானத்தில் 2.5 சதவிகிதத்தை இயக்கத்திற்கு தருகின்றார்கள். நானும் என்னுடைய இயக்கத்தின் முன்னணி தலைவர்களும் எங்களது கடைசி உடைமைகளைக் கூட விற்று இயக்கத்திற்கு செலவு செய்திருக்கின்றோம். இதுவே எங்கள் நிதியாதாரம்.

**நீதிபதி:**

உங்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றங்களுக்கு மரணதண்டனை என்பதை அறிந்திருப்பீர்கள். வேறு ஏதும் சொல்ல விரும்புகின்றீர்களா?

**ரஷித் கன்னவ்சி:**

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! யா அல்லாஹ், சாதாரண சாமான்யமான என்னை, உன் மார்க்கத்திற்காக அர்ப்பணிக்க வழி காட்டிய உனக்கே புகழனைத்தும்! உனக்கு என் உளமார்ந்த நன்றி! எனக்காக வாதாட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு முயற்சி களை மேற்கொண்ட அத்தனை சகோதரர் களுக்கும் யா அல்லாஹ் நீ உன் நல்லருளை இறக்கியருள்வாயாக!

என்னருமை துனீஸிய மக்களே! அல்லாஹ்வின் இந்த அடிமை ரஷீத் கன்னவ்சிக்குத் தரப்படும் தீர்ப்பு என்னவாக இருந்தாலும் அதனை அல்லாஹ்வுக்காக அவன் ஏற்றிடத் தயாராக இருக்கின்றான். இதற்காக நீங்கள் உங்களை வருத்திக் கொள்ள வேண்டாம். எல்லா வற்றிற்கும் அல்லாஹ் போதுமானவன். அவன் பக்கமே நிலைத்து நில்லுங்கள். நிச்சயமாக நீங்கள் தான் வெற்றியாளர்கள். நீதிபதி அவர்களே! நீங்கள் என்ன தீர்ப்பு

வழங்கினாலும் அல்லாஹ்வின் நாட்டம் எதுவோ அதுதான் நிறைவேறப் போகின்றது. ஆகவே நீங்கள் வழங்குகின்ற தீர்ப்பைப் பற்றி எனக்கு எந்தக் கவலையுமில்லை.

என்னுடைய உடல், பொருள், உயிர் அனைத்தையும் அல்லாஹ்வின் பாதையில் அர்ப்பணித்த ஓர் இறையடிமை என்ற அந்தஸ் திலேயே நான் உங்கள் முன் நின்று கொண்டிருக் கிறேன். என்னுடைய மரணத்தின் மூலம் துனீஸியாவிற்கு ஒளிமயமான ஒரு எதிர்காலம் உருவாகும் என்று நம்புகின்றேன்!

என்னுடைய உயிரை குடிக்கத் துடிக்கும் நீதிபதி அவர்களே! நான் ஒரு முஸ்லிம். நான் வாழவே விரும்புகின்றேன். ஆனால் நான் அல்லாஹ்வின் பாதையில் உயிர் துறந்து தான் ஆகவேண்டும் என்பது அல்லாஹ்வின் நாட்டம் என்றால் அப்படியே நடக்கட்டும். அந்த அளப்பரிய பாக்கியம் எனக்குக் கிடைக்கச் செய்யும் அல்லாஹ்வுக்கு நன்றி. என்னுடைய மரணம் வெறும் மரணமாக இருந்துவிடப் போவதில்லை. நான் சிந்தும் இரத்தத்திலிருந்து ஆயிரமாயிரம் கொள்கை மலர்கள் மலரவே செய்யும். இஸ்லாம் என்ற உயர்ந்த இலட்சி யத்திற்காக உயிர்துறக்கவும் தயாராகும் ஒரு பெரும் கொள்கை மறவர் கூட்டத்தை என் மரணம் உருவாக்கவே செய்யும்.

நீங்கள் நடத்திய இந்த விசாரணையோடு இந்த வழக்கு முடிந்துவிடப் போவதில்லை. இன்னும் இரண்டு முறை இந்த வழக்கு விசாரணைக்கு வரும். (நீதிபதி விழிபிதுங்க பார்க்கின்றார்)

**ஒன்று**

நாளைய தலைமுறையின் மக்கள் மன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு வரும். அப்போது மக்கள் ஒரு தீர்ப்பை வழங்குவார்கள்.

**இரண்டாவதாக**

நாளை மறுமையில் நீதிபதிகளுக்கெல்லாம் மாபெரும் நீதிபதியான அல்லாஹ்வின் முன் இந்த வழக்கு நிச்சயமாக விசாரணைக்கு வரும். அந்த அல்லாஹ் வழங்கும் தீர்ப்பே நிலை யானது. நியாயமானது.

நீதிபதி அவர்களே! நீங்கள் உங்கள் கைகளால் தேடிக்கொண்டாலன்றி உங்களுக்கும் அங்கே அநீதி இழைக்கப்படமாட்டாது. நான் அந்த அல்லாஹ்வின் நிரந்தரமான தீர்ப்பை நோக்கி வேகமாகப் போய்க் கொண்டிருக்கின்றேன். அந்த அல்லாஹ் நிச்சயமாக என்னைக் கைவிடமாட்டான்.

அல்லாஹ் அக்பர்!

இந்த வழக்கின் முடிவில் ரஷீத் கன்னவ்சி உட்பட இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்கள் 90 பேருக்கு மரண தண்டனை தரப்பட்டது.

தொடரும்......


எது முதலில் ?




380 பக்கங்கள் | ₹ 380/-

Vergal Publications

- இந்த நூல் சன்மார்க்கம் நமக்குத் தந்துள்ள ஆதாரப்பூர்வமான விஷயங்கள் அனைத்திலும் **எதற்கு முதலிடம் தரவேண்டும் என்று வெளிச்சம் காட்டுகிறது.**
- இது சிந்தனையை சீர்படுத்தும் லட்சியத்தை நேராக்கும் அடிப்படையான புரிதல்களை தரும்.
- **இந்நூல் இஸ்லாமிய களப்பணியாளர்களுக்கும் அவர்களை விமர்சிப்பவர்களுக்கும் நல்வழிகாட்டும்.**
- இந்நூல் **வரம்பு மீறுபவர்கள் அலட்சியப் படுத்துபவர்கள் ஆகிய இருத்தரப்பினருக்கும் வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு என்று உண்மையை உரைக்கிறது.**

**மேலும் தூய உள்ளத்துடன் பணியாற்றுபவர்கள் பார்வைகளை சீராக்க உதவும்.**



# வில்வித்தை..!

மமாலிக்குகளது ஆட்சியில்.....

வில்வித்தை பயிற்சிக் கூடத்தில் பயிற்சி பெறுவோர் 75 மீட்டர் தொலைவில் உள்ள இலக்கை மூன்று முறை குறி தவறாமல் சில வினாடிகளில் எய்தினால்தான் பயிற்சிக் கூடத்திலிருந்து வெளியேற இயலும்.

இவர்களது பயிற்சிகளில் மிக முக்கியமானது ஓடும் குதிரையில் அமர்ந்து தரையில் நடப் பட்டிருக்கும் வாளை, அம்புகளின் மூலம் இரண்டாகப் பிளக்க வேண்டும்.

மமாலிக் மன்னர்கள் அவ்வப்போது மார்க்கச் சட்ட மேதைகளையும் மார்க்க கல்வி கற்கும் மாணவர்களையும் கூட வில்வித்தையில் சோதித்துப் பார்ப்பார்களாம். அதில் தேர்ச்சி பெறவில்லை என்றால் அரசாங்கத்திலிருந்து வரும் ஊக்கத்தொகை அவர்களுக்கு தடுக்கப் பட்டுவிடும்.

உஸ்மானிய்யா பேரரசின் படை வீரர்களில் சராசரியாக ஒருவர் வில்வித்தையில் நன்கு தேர்ச்சி பெறுவதற்கு சுமார் 500 அம்புகளைத் தினந்தோறும் செலவிடுவாராம்.

ஸஹாபாக்கள் வில்வித்தையில் மிகச் சிறந்து விளங்கினார்கள். ஒரு முறை காலித் இப்னு வலீத்(ரலி) அவர்களது தலைமையில் ஈராக்கின் மிக முக்கிய பிராந்தியமான "அன்பருக்கு" படைகள் நகர்ந்தது. அந்த நகரைச் சுற்றிலும் முஸ்லிம்கள் முற்றுகை யிட்டனர்.

அந்த நகரத்து மக்களும் எதிரிகளிடமிருந்து தங்களது நகரத்தை காக்க அதனைச் சுற்றி ஆழமான அகழிகளை தோண்டி முஸ்லிம்கள் அந்த அகழிகளை நெருங்காத வண்ணம் அதற்கான அரணாக உருமாறினார்கள்.

போர் மூண்டதும் காலித் இப்னு வலீத் (ரலி) அவர்கள் முஸ்லிம்களுக்கு இட்ட ஒரே கட்டளை "எதிரிகளது கண்களை மட்டும் அம்புகள் குறிவைக்கட்டும்." கட்டளை பிறப்பிக்கப்பட்ட சிலநிமிடங்களில் ஸஹாபாக்களுடைய அம்புகள் எதிரிகளது ஆயிரம் படை வீரர்களது கண்களைப் பதம் பார்த்தது.

தாக்குதலை தாங்க இயலாமல் எதிரிகளே வலியவந்து முஸ்லிம்களிடம் அமைதி உடன் படிக்கை செய்தார்கள். பொதுவாக ஒரு போரிற்கானப் பெயர் என்பது அந்த இடத்தை வைத்து தீர்மானிக்கப்படும். ஆனால் ஸஹாபாக்களது இந்த வீரதீர செயலினால் இந்தப் போரிற்கான பெயர் "கண்கள் போர்" என்றே அழைக்கப்பட்டது.

ஆதாரம்:

அல்பிதாயா வந்நிஹாயா

தமிழில்:

மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி



# திருச்சியைத் தொடர்ந்து நாகையிலும்!



திருச்சியில் தொழுகைக்கு வருகின்றவர்களைப் படம் எடுத்து அந்த முஹல்லாவாசிகளிடம் விசாரித்ததை நாம் வைகறை வெளிச்சம், ஜனவரி 2022 இதழில் குறிப்பிட்டிருந்தோம். அத்தோடு இதுபோன்று உளவுத்துறையினர் உங்கள் பகுதியில் செயல்பட்டால் வைகறை வெளிச்சம் இதழுக்குத் தெரிவியுங்கள் என குறிப் பிட்டிருந்தோம். இந்தப் பின்னணியில் நமது நாகை நிருபர் ஒரு செய்தியை அனுப்பினார்.

**அந்தச் செய்தி**

நாகப்பட்டினத்தில் உளவுத்துறையைச் சார்ந்தவர் எனக் கூறிக்கொண்டு ஒருவர் வந்து, 12.12.2021 அன்று திருச்சி கபரிஸ்தான் மஸ்ஜிதில் தொழச் சென்ற இருவரை, தான் உடனேயே சந்தித்தாக வேண்டும் எனக் கூறியிருக்கின்றார். ஊரில் உள்ள சில நபர்களிடம் இதைச்சொல்லி தொழச் சென்றவர்களின் நம்பரை, திருச்சியிலிருந்து தந்தார்கள் எனக்கூறியிருக்கின்றார். அவருடைய அதாவது, விசாரிக்க வந்தவரின் பெயரைக் கேட்டபோது, நான் நாகை உளவுத்துறையில் இருந்து வருகின்றேன் என்று கூறியுள்ளார். பெயரையும் சொல்ல மறுத்துவிட்டார். "உங்கள் பெயரையும், பதவியையும் சொல்லாவிட்டால் நாங்கள் எதையும் சொல்லிட முடியாது" எனக் கூறியிருக்கின்றார்கள் அந்த முஸ்லிம் இளைஞர்கள்.

ஆனாலும் தனது பெயரையோ பதவியையோ சொல்லாத அவர், "உங்களை தீவிரவாதிகள் பட்டியலில் சேர்த்துவிடுவோம். உங்களுக்கு NIA பற்றி தெரியுமா? நாங்கள் உங்கள் பெயரை அவர்களிடம் சொல்லிக் கொடுத்துவிடுவோம்." என்றெல்லாம் மிரட்டியுள்ளனர்.

(ஏற்கனவே நாகையில் சிலர் மீது NIA பொய்வழக்குப் புனைந்து சிறையிலடைத்தும்) கைது நடந்த அன்று அவர்களின் பெற்றோர்கள் பிரஸ் மீட் என்ற பத்திரிக்கையாளர் சந்திப்பை நடத்தியதும், பின்னர் வைகறை வெளிச்சம் நிருபர் ஒரு கள ஆய்வை நடத்தி உண்மையை நாட்டுமக்களுக்கு சொன்னதும், நாட்டுமக்களுக்கு நினைவிருக்கும். பின்னர் அவர்கள் பிணையில் வந்தார்கள். இதனை இன்றும் நாகை மக்கள் மறந்துவிடவில்லை. அதற்கெல்லாம் இதுபோன்ற பெயர் சொல்லாமல் ஓடிப்போனவர்கள் தாம் காரணமா? என்ற கேள்வி நாகை வாழ் மக்களிடம் இப்போது மிகைத்து நிற்கின்றது. ஆக நாகையிலும் சிறுபான்மையினருக்கு எதிராக இயங்கிடும் சில உளவுத்துறையினர் இருக்கின்றனர் என்பது தெளிவு. இதையும் சம்பந்தப்பட்ட மக்கள் அரசின் பார்வைக்கும், மனித உரிமை ஆணையங்களுக்கும் கொண்டு செல்ல உள்ளனர்.

திருச்சிதான் இவற்றிற்கெல்லாம் பிறப்பிடம் எனத் தெரிகின்றது.

**- நமது நாகை நிருபர்**

**திருச்சி உளவுத்துறையின் கொரோனா ஜிஹாத்**

திருச்சி உளவுத்துறை என வருகின்றபோது, தமிழ்நாட்டு மக்கள் ஒன்றை மறந்திருக்க மாட்டார்கள்.

கொரோனா 19 - (Covid -19) என்ற நோய் முதன் முதலில் இந்தியாவில் பரவியபோது, இந்தியாவில் இந்த கொரோனா நோயை

முஸ்லிம்கள் திட்டமிட்டு பரப்புகின்றார்கள். இதற்கு "கொரோனா ஜிஹாத்" எனப் பெயர் வைத்திருக்கின்றார்கள். என்றொரு செய்தியை "தினமலர்" நாளிதழ் வெளியிட்டது.

அப்போது திருச்சியிலிருந்து இயங்கும் சட்டக் குழுமம், தினமலர் நாளிதழ் மீது வழக்கு தொடுக்கத் தயாரானது. அதேபோல் தமிழகமெங்கும் முஸ்லிம்கள் தயாரானார்கள். அதற்கு மறுநாள் தினமலர் மறுப்பொன்றை வெளியிட்டது. அதில், "உளவுத்துறை தந்த தகவலைத்தான்" வெளியிட்டோம் எனக் கூறியது. இது திருச்சி உளவுத்துறையின் அப்பட்டமான முஸ்லிம் வெறுப்பையே காட்டுகின்றது. சென்ற வைகறை வெளிச்சம் செய்தியைத் தொடர்ந்து ரவி ராஜன் அவர்கள் வைகறை வெளிச்சம் அலுவலகத்தைத் தொடர்புகொண்டு, தான் அப்படி முஸ்லிம் களுக்கு எதிரான மனநிலை கொண்டவர் அல்ல எனக் கூறினார்.

**கோவையிலும்**

"வைகறை வெளிச்சம்" ஜனவரி 2022ல் இடம்பெற்ற திருச்சி செய்தியைத் தொடர்ந்து வந்த செய்தி,

கோவையில் புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களை, சில உளவுத்துறையினர் மிரட்டுவதாகவும், இப்படி மிரட்டுவது உங்களது கடமை இல்லை. நாங்கள் உங்களுக்கு எதிராக புகார் செய்வோம் எனக் கூறியபோது, நாங்கள் மத்திய அரசின் பார்வையின் கீழ் வேலை செய்கின்றோம். மத்திய அரசு மிகவும் பலம் மிக்கது அதனால் எங்களை யாரும் எதுவும் செய்ய இயலாது எனக்கூறினர். கூறியவர்கள் தங்கள் பெயரை குறிப்பிடக் கூடாது என வேண்டிக் கொண்டார்கள்.

**- கோவையிலிருந்து நமது நிருபர்.**

**காவல்துறை புகார்கள் அதிகாரம்**

Police Complaints Authority.

காவல்துறையினர் மீதான புகார்களைக் கவனிக்கவும், விசாரிக்கவும் "காவல்துறை புகார்கள் அதிகாரம்" ஒன்றை அமைத்திட வேண்டும் என்பது 2006 செப்டம்பர் 22ஆம் நாள் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த (Direction)வழிகாட்டுதல்.

இதற்கு ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைவராக அமைக்கப்படவேண்டும். மாவட்ட அளவில் ஓய்வு பெற்ற மாஜிஸ்ட்ரேட் தலைவராக அமைக்கப்படவேண்டும்.

ஆனால் மாநில அரசு தனது வசதிக்கேற்ப 2013ம் ஆண்டு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. அதில் மாநில உள்துறை அமைச்சகத்தின் செயலாளரைத் தலைவராக நியமித்தது. ஓர் "அதிகாரத்தை" அமைத்துள்ளது. இதனால் காவல் துறையின் மீதானப் புகார்களை காவல்துறையினரே விசாரித்து தங்கள் அளவில் அதனை முடித்துவந்தனர். இதனால், புகார் செய்தவர் அதிகமான சித்திரவதைகளுக்கும், அதிகமான அலைச்சலுக்கும், மன உளைச்சலுக்கும் ஆளானார்கள். இறுதியில் ஏனடா இப்படி ஒரு புகாரை செய்தோம் என முடிவுக்கு வந்து, காவல்துறையினர் சொல்வதுபோல் எழுதித் தந்துவிட்டு ஓடிப் போய்விடுகின்றனர். இந்த நிலையை மாற்றிட வேண்டும் என்றும், உச்சநீதிமன்றம் 2006ல் வழி காட்டியபடி "காவல்துறை புகார்கள் அதிகாரம்" அமைக்கப்பட வேண்டும் என நாமும், மனித உரிமை அமைப்புகளும் வலியுறுத்தி வந்தோம்.

இந்தப் பின்னணியில் நமது முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரு காவல்துறை ஆணையத்தை, ஜனவரி 19,2022ல் அறிவித்தார்கள். இந்த ஆணையத்தின் தலைவராக நீதிபதி (ஓய்வு) C.I.செல்வம் அவர்களை நியமித்துள்ளார்கள்.

இந்த ஆணையமும், உச்சநீதிமன்றம் வழிகாட்டிய காவல்துறை அதிகாரமும் ஒன்றா என்ற ஐயம் எல்லோருக்கும் வந்தது. அதுபோலவே நமது உயர்நீதிமன்றத்திற்கும் வந்துள்ளது. இதனை தெளிவுபடுத்திடச் சொல்லி மாநில அரசை நமது சென்னை உயர் நீதிமன்றம் 24.01.2022 அன்று ஆணை யிட்டுள்ளது.

இந்தத் தெளிவு கிடைத்தவுடன், காவல்துறை மீதான புகார்களை, இந்த அதிகாரத்திற்கு அல்லது ஆணையத்திற்கு அனுப்பலாம். (இன்ஷா அல்லாஹ்).

இந்தப் பின்னணியில் நமது சட்டக்குழு பல புகார்களை "ஆன்லைன் வழி" அனுப்பி பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளது. அவற்றை நாம் விரிவாக வைகறை வெளிச்சத்தில் அவ்வப் போது வெளியிட்டிருக்கின்றோம். (பார்க்க அடுத்தப் பக்கம்)

**எம்.ஜி.எம்**



## தப்லீக் ஜமாஅத் மீது அவதூறு

# நமது சட்டக் குழுமம் தொடுத்தப் போர்..!

நாடெங்கும் முஸ்லிம்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள் சட்ட அமைப்புகளைக் கொண்டே நிறைவேற்றப்படுகின்றன. இன்று இந்திய சிறைச்சாலைகளில் அதிக அளவில் விசாரணைக் கைதிகளாகவே இருப்பவர்கள் முஸ்லிம்கள். இதற்கான காரணம் சட்டம் குறித்த அறியாமை. முறையாக சட்ட முறைமைகளை பயன்படுத்தாமை. சட்ட அமைப்புகளை நாடுவதில் உள்ள நடைமுறை சிக்கல் குறித்த பயம். இதன் காரணமாகவே முஸ்லிம்களின் மீது எளிதாக குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு அவர்கள் சிறைச்சாலைகளில் உள்ளனர்.

ஆனால் வெளிப்படையாக குற்றசெயல்களில் ஈடுபட்டவர்கள், நாட்டின் ஒற்றுமைக்கு எதிராக விஷத்தை கக்குபவர்கள் மிகச் சுதந்திரமாக நாட்டில் உலா வந்து கொண்டிருக்கின்றனர். இந்த நிலை மாறவேண்டும் என்பதே அனைவரின் அவா.

பூனைக்கு யார் மணி கட்டுவது. இதற்கான முயற்சி ஒன்றை தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் தமிழகத்தில் முன்னெடுத்தது. இதற்காக தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும் தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்-இன் சட்டக்குழுவினர் பயணம் செய்து ஆங்காங்கே படித்த மக்களை ஒருங்கிணைத்து அவர்களை சட்டரீதியான போராட்டத்திற்கு தயார் செய்தது.

இந்த முயற்சிகளுக்கு அல்லாஹ் நிறைவாக வெற்றியை தந்தான். நாடெங்கும் கொரோனா வைரஸ் காரணமாக ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு அனைவரும் வீட்டுக்குள் அடைபட்டுக் கிடந்த நிலையிலும் சங்க பரிவாரத்தின் ஊதுகுழலாக இருந்த சில ஊடகங்கள் இஸ்லாமிய சமூகத்தினர் மீது அவதூறு பிரச்சாரத்தை முன்னெடுத்தன இஸ்லாமியர்கள் மீது வெறுப்பை கக்கின. அதில் முன்னணியில் நின்றது தினமலர் என்ற நாளிதழ்.

இதன் திருச்சி இதழில் டீக்கடை பெஞ்ச் என்ற பகுதியில் முஸ்லிம்கள் கொரோனா ஜிஹாத் செய்வதாகவும் நாடெங்கும் தப்லீக் ஜமாத்தினர் நோய் பரப்பி வருவதாகவும் அவதூறை செய்தியாக வெளியிட்டது. இதுவரை தாங்கள் செய்துவந்த வெறுப்பு பிரச்சாரத்திற்கு எந்தவித தடைகளும் இல்லாத காரணத்தினால் தங்குதடையின்றி இதுபோன்ற விஷப்பிரச்சாரத்தை செய்து வந்த தினமலர் பத்திரிகையை இந்த முறை அப்படி எளிதாக வெறுப்பு பிரச்சாரத்தை செய்ய தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் அனுமதிக்கவில்லை.

உடனடியாக அது உருவாக்கி வைத்திருந்த சட்ட குழுமங்கள் வழியாக தமிழகமெங்கும் தினமலர் பத்திரிக்கைக்கு எதிராக ஆன்லைனில் காவல்துறையிடம் புகார் அளிக்கப்பட்டது. அதன் விளைவு அடுத்த இரண்டு நாட்களில் தினமலர் மறுப்பு செய்தியை மன்னிப்பு கோரும் விதத்தில் வெளியிட்டது. ஆனால் நாம் அதை அவ்வளவு சுலபமாக விடுவதாக இல்லை அந்த செய்தியில் தங்களுக்கு ஜிஹாத் குறித்த செய்தியை உளவுத்துறை தான் தந்தது என்றொரு குறிப்பை. தந்திருந்தது.

எனவே நமது சட்ட குழுமத்தினர் உடனடியாக உளவுத் துறைக்கு எதிராக முதலமைச்சர் தனிப்பிரிவில் புகார் செய்தனர். அதுமட்டுமன்றி நாடெங்கிலும் சமூக ஊடகங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக பல இந்துத்துவாவினர் தங்களது சேட்டைகளை விஷம வெறுப்பு பிரச்சாரங்களின் வழியாக மேற்கொண்டிருந்தனர். இதற்கும் முற்றுப்புள்ளி வைக்க தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் முடிவு செய்தது.

எனவே நமது சட்டக் குழுமத்தினரின்

மே - 2020 ✧ 50

வைகறை வெளிச்சம்

உதவியை நாடினோம். உடன் நாடெங்கும் சங்க பரிவாரத்தின் அங்கத்தினருக்கு எதிராக ஆன்லைனில் காவல்துறையிடம் புகார் அளிக்கப்பட்டது.

பல சங்க பரிவாரத்தின் அங்கத்தினர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட பல பதிவுகள் வேக வேகமாக நீக்கப்பட்டன. பலர் இந்த ஆன்லைன் புகார்களை சுட்டிக்காட்டி தயவுசெய்து சங்பரிவாரத்தினர் இது போன்ற பதிவுகளை போட வேண்டாம் என அவர்களின் அங்கத்தினர் களிடம் கதறி அழும் அளவிற்கு நமது சட்ட குழுமத்தினரின் நடவடிக்கைகள் அமைந்தன. அவர்கள் ஆதாரங்களை அழிப்பதற்கு முன்பு நாம் அதன் பதிவுகளை படம் எடுத்து வைத்திருந்து அந்த ஆதாரங்களுடன் புகார் அளித்த காரணத்தினால் அவர்களால் தப்ப முடிய வில்லை. இதன் காரணமாக அவர்கள் தாங்கள் செய்தது தவறு மன்னித்துக் கொள்ளுங்கள் என்று கூறி மறுப்பு வீடியோக்களை போடும் அளவிற்கு நமது நடவடிக்கைகள் அமைந்தன. அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும்.

இந்த வெற்றிகள் சமூக வலைத்தளங் களில் பரவலாக பேசப்பட்டன. இதன் காரண மாக மற்ற மக்களும் இந்த போராட்டத்தில் ஈடுபடும் உற்சாகத்தையும் மனோ தைரியத் தையும் பெற்றனர்.

ஒரு கட்டத்தில் இது ஒரு நடைமுறை ஆகிப்போனது. செய்தித் தாள்களிலும் அல்லது சமூக ஊடகங்களிலும் முஸ்லிம்கள் குறித்து இஸ்லாத்தை குறித்து அவதூறோ அல்லது விஷமக் கருத்துக்களோ பரப்பப் பட்டால் அதை எதிர்கொள்ளும் வழி முறையை அவர்கள் கற்றுக் கொண்டனர். எனவே தமிழகமெங்கும் மற்ற மற்ற இயக்க சகோதரர்களும் இதே வழி முறையை கையாள துவங்கினர். முஸ்லிம் களுக்கு வெற்றிக்கு மேல் வெற்றி கிடைத்தது.

ஒரு கட்டத்தில் தமிழகத்தில் செயல்பட்டு வந்த ஊடகங்களான தினமணி, பாலிமர், தந்தி டிவி போன்ற முக்கியமான ஊடகங் களுக்கு எதிராக பல்வேறு இயக்கங்களின் சார்பாக பல்வேறு மக்களின் சார்பாக காவல் துறையிடம் ஆன்லைனில் புகார் அளிக்கப் பட்டது. இதன் காரணமாக தப்லீக் ஜமாஅத் தினர் குறித்து பரப்பப்பட்டு வந்த விஷமக் கருத்துக்கள் நிறுத்தப்பட்டன. அதன்பின்னர் நேரடியாக தப்லீக் ஜமாஅத்தினர் என்ற வார்த்தை பிரயோகம் நிறுத்தப்பட்டு மறை முகமாகவே அவர்களை குற்றம்சாட்ட ஊடகங்களால் முடிந்தது. இன்ஷா அல்லா அதற்கும் நாம் முற்றுப்புள்ளி வைப்போம்.

இப்போதைக்கு இந்த சட்ட நடவடிக்கை களை நம்மால் எடுக்க இயன்றது. விஷமி களுக்கு எதிரான முழுமையான போர் நீதி மன்றங்களின் வழி நிச்சயம் நடத்தப்படும். அவர்கள் செய்து வந்த விஷம பிரச்சாரங் களுக்கு நிச்சயம் பதில் சொல்லியே ஆக வேண்டும் இன்ஷா அல்லாஹ். அதுவரை நாம் ஓயப்போவதில்லை. உறங்கப் போவ தில்லை.

இப்படி தமிழ்நாட்டில் நாம் ஈன்றெடுத்த வெற்றிகள் குறித்து இந்தியாவெங்கும் பேசப்பட இது இந்தியா முழுமைக்கும் கொண்டு செல்லப்பட்டது. விளைவு குஜராத்திலும் விஷமப் பிரச்சாரம் செய்த சங்கபரிவாரத்தினருக்கு எதிராக பலர் ஆன்லைன் வழியாக காவல்துறையிடம் புகார் அளிக்கும் தைரியம் பெற்றனர். அங்கும் பல சங்கபரிவாரத்தினருக்கு எதிராக கைது நடவடிக்கைகள் வேறுவழியின்றி மேற்கொள்ளப் பட்டன என்ற செய்திகள் இங்கே கிடைக்கப் பெற்றன.

இவை அனைத்தும் நம்முடைய சட்ட குடும்பத்தினரின் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு கிடைத்த வெற்றி என்றால் மிகையல்ல. அந்த நடவடிக்கைகள்

- இன்ஷா அல்லாஹ் தொடரும்.




# மூன்றாவது அலை முதியவர்களை அச்சுறுத்தும்

இந்த மூன்றாவது அலையில், கொரோனா வீரியம் இழந்ததாகவே இருக்கின்றது. இளைஞர்கள் பெரும்பாலும் மருத்துவமனைக்குச் செல்லாமல் வீட்டிலேயே மருத்துவம் பார்த்துக் கொள்கின்றார்கள். ஒரு வார காலத்திற்குள், வெளியே வந்துவிடுகின்றார்கள். அரசு மருத்துவமனைகளிலும், மருந்துகளைத் தந்து வீட்டிலேயே தனிமைப் படுத்திக் கொள்ளச் சொல்லி அனுப்பி விடுகின்றார்கள். மருத்துவ மனைகளில் அனுமதி தேவைப்படுபவர்கள் முதியவர்களாகவே இருக்கின்றார்கள் என்பது இந்த மூன்றாவது அலையின் தனித்தன்மையாக இருக்கின்றது. (The Hindu jan 14,2022) அதனால் முதியோர்களைப் பாதுகாக்கும் வழிகளை - முதியோர் நல மருத்துவர்கள் தரும் குறிப்போடு இங்கே தருகின்றோம்.

**தற்காப்பு வழிகள்!**

கொரோனா நோயின் தாக்கம்பற்றி ஓர் ஆய்வுக்கட்டுரையை புகழ்பெற்ற மருத்துவ இதழான "லேன்செட்" வெளியிட்டுள்ளது. 'கொரோனா தாக்கியவர்களின் வயது கூடக்கூட, உயிரிழப்பும் கூடுகிறது. 60 வயதுக்குக் குறைவாக உள்ளவர்களை நோய் தொற்றினால் ஏற்படும் மரண அபாயத்தைவிட, 60 வயதுக்கு மேல் உள்ளவர்களுக்கு நான்கு மடங்கு அதிகம் அபாயம் ஏற்படுகிறது. 70 வயது தாண்டியவர்களுக்கு இந்த அபாயம் 16 மடங்கு அதிகரிக்கிறது" என்கிறது அந்த ஆய்வு.

கொரோனா குறித்த அச்சம் அவ்வளவு சீக்கிரம் விலகாது என்பதால், முதியோருக்கு சில தற்காப்பு முறைகள் அவசியம்!

இதுபோன்ற ஆபத்தான வைரஸ்கள் முதியவர்களை அதிகம் தாக்குவதற்கு முதல் மற்றும் முக்கிய காரணமே, நோய் எதிர்ப்பு சக்தி குறைவதுதான். 40 வயது தாண்டினாலே பல நோய்கள் தாக்க ஆரம்பித்துவிடுகின்றன. இதனால் சுமார் 50 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி இயற்கையாகவே குறையக்கூடும்.

முதுமையை "நோய்களின் மேய்ச்சல் காடு" என்பார்கள். இந்தப் பருவத்தில்தான் நீரிழிவு நோய், உயர் ரத்த அழுத்தம், உடல் பருமன், சிறுநீரகக் கோளாறு, பக்கவாதம், மறதி நோய் மற்றும் புற்றுநோய்கள் ஏற்படுகின்றன. இதனாலும் நோய் எதிர்ப்பு சக்தி குறைய வாய்ப்புண்டு.

இதய நோய் இருப்போருக்கு ஏற்கனவே இதயத் தசைகளுக்கு போதுமான ஆக்சிஜன்

கிடைக்காது. கொரோனா தாக்கி நுரையீரல் பாதிக்கப்படும் போது, இது இன்னும் மோசமாகும். அதனால் தான் இதய நோயாளிகள் அதிகம் பாதிப்புக்கு ஆளாகிறார்கள்.

நுரையீரல் நோய்கள் உள்ளவர்கள் ஏற்கனவே மூச்சுவிட சிரமப்படுவார்கள். சுவாசப்பாதையும் பாதிப்புக்கு ஆளாகி இருக்கும். கொரோனா தாக்குவது இங்குதான் என்பதால், பாதிப்பு விரை விலேயே மோசமாகும்.

நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்கனவே பல பிரச்சனைகள் இருக்கும். நோய் எதிர்ப்பு சக்தியும் பலவீனமாக இருக்கும். கொரோனா வந்ததும் நிலைமை இன்னும் மோசமாகும்.

ஒரு சில மருந்துகளாலும் நோய் எதிர்ப்பு சக்தி குறைய வாய்ப்புண்டு. உதாரணம்: ஸ்டீராய்டு மற்றும் புற்றுநோய்க்குக் கொடுக்கும் மருந்துகள்.

முதுமை அடைந்ததுமே "வெந்ததைத் தின்று விதி வந்தால் போவோம்" என்ற மனநிலைக்குப் பல முதியவர்கள் வந்துவிடுகிறார்கள். இதனால் உடலுக்கு ஊட்டச்சத்து கிடைப்பதில்லை. இதன் விளைவாக நோய் எதிர்ப்பு சக்தி குறைகிறது. அதனால் எந்த தொற்றுநோயும் முதியவர்களை எளிதில் தாக்கும் ஆபத்து உள்ளது.

சுவாசப் பிரச்சனையை ஏற்படுத்தி ஆபத்தை விளைவிக்கும் நிமோனியா நோயை நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம். அது பாக்டீரியா தொற்று. கொரோனா அதிலிருந்து வேறு படுகிறது. இது சுவாச மண்டலத்திலும் சிறுநீரகத் திலும் பாதிப்பு ஏற்படுத்துகிறது.

இந்நோய்க்கு என்று குறிப்பிடும்படியான அறிகுறிகள் ஏதுமில்லை. ஆரம்பத்தில் உடல் வலி, சோர்வு, தொண்டைக்கட்டு, வறட்டு இருமல் ஒரு சில நாட்கள் இருக்கும். இரண்டு அல்லது மூன்று நாட்கள் கழித்து லேசான காய்ச்சலும் தொண்டை வலியும் ஏற்படும். பசி குறையும். சுமார் ஒரு வாரத்திற்குப் பின்பு தொண்டை வலி அதிகரிக்கும். உடல் சோர்வு மிகவும் அதிகரிக்கும். இந்த சமயத்தில்தான் காய்ச்சல் அதிகரித்து குளிரும் ஏற்படும். சிலருக்கு பசி குறையும், வயிற்றுப்போக்கும் ஏற்படும். இதற்கு அடுத்தகட்டமாக மூச்சுத் திணறல் ஏற்படும். நுரையீரல் பாதிக்கப்பட்டு, மூச்சு விடுவதில் அதிக சிரமம் ஏற்படும்போது வென்டி லேட்டர் பொருத்தி சிகிச்சை தரப்படும்.

ஊரடங்கு இருந்தாலும், இல்லாவிட்டாலும், அவசியமில்லாமல் வெளியே செல்வதைத் தவிர்க்க வேண்டும். நிறைய பேர் கூடும் நிகழ்ச்சி களுக்குச் செல்லாமல் தவிர்க்கலாம். அவசியம் போக வேண்டும் என்றால் முகக் கவசம் அணிந்து செல்லலாம். கூட்ட நெரிசல் உள்ள இடங்களுக்குப் போகக் கூடாது. எங்கு இருந்தாலும், சமூக இடை வெளியைக் கடைபிடிக்க வேண்டும்.

வெளியே போய்விட்டு வீட்டிற்குள் வந்தவுடன் கைகளை சோப் போட்டு நன்றாகக் கை கழுவ வேண்டும். முதியவர்கள் தங்கள் பேரக் குழந்தைகளைக் கொஞ்சிப் பேசுவதையும், முத்தமிடுவதையும் தவிர்க்கலாம்.

கை குலுக்குவதைத் தவிர்க்கலாம். மற்றவர் களிடம் பேசும்போது மூன்று அடி தூரம் விலகி நின்றே பேசலாம்.

வெளி உணவுகள், குளிர்ச்சியான பழ பானங்கள், குளிர்சாதனப் பெட்டியில் வைத்த உணவுகள் போன்றவற்றைத் தவிர்க்கலாம்.

மிதமான சூட்டில் தண்ணீரை அடிக்கடி அருந்தலாம். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உணவில் நெல்லிக்காய், ஆரஞ்சு, எலுமிச்சை, கொட்டை வகைகள், பாகற்காய், தேன், காளான், பூண்டு, இஞ்சி, தயிர், மிளகு சேர்த்துக் கொள்ள வேண்டும்.

உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க வைட்டமின் டி உதவி செய்யும். ஆகையால் முதியோர்கள் குறைந்தது 30 நிமிடமாவது சூரிய ஒளி உடலில் படுமாறு உட்கார வேண்டும். அல்லது நடைப்பயிற்சி செய்யலாம்.

நீரிழிவு நோய் உள்ளவர்கள், சர்க்கரையின் அளவைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டியது அவசியம்.


பாபரி மஸ்ஜித்
அடிப்படைத் தகவல்கள்

"1992 டிசம்பர் 6 இலிருந்து நாம் - எந்தப் பாடத்தையும் படிக்கவில்லை. அந்த நிகழ்வுகளிலிருந்து நாம் முறையான பாடங்களைப் படித்திருந்தால், பாபரி மஸ்ஜித்-ஐ மீட்க ஓர் மக்கள் இயக்கத்தைக் கட்டி எழுப்பி இருப்போம்."

இதை செய்யாதது ஓர் வரலாற்றுப் பிழை!




ஆசிரியர்: மு.குலாம் முஹம்மது
பக்கம்: 143 பக்கங்கள்
விலை: 90/-
8072773868

Vergal Pathippagam - 8148129887

# ஃபாத்திமா(ரலி) அவர்களின் பற்றற்ற வாழ்வு

அன்னை பாத்திமா(ரலி) குடும்பம், வறுமை எனக்கு பெருமை என்று நபிகள் நாயகத்தின் அருளுரையை அரவணைத்ததாக திகழ்ந்தது. அக்குடும்பம் தொடர்ந்து பல நாட்கள் பட்டினியால் வாடியதென வரலாற்றில் பார்க்க முடிகிறது. ஹஸ்ரத் அலீ(ரலி) அவர்கள் புல் அறுத்தும், கூலி வேலை செய்தும் வாழ்வு நடத்தினார்கள்.

மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

என்றபடி அலீ(ரலி)க்கு பாத்திமா நாயகி மனைவியாக அமைந்து நன்மக்களை ஈன்று பெருமை சேர்த்தார். அலீ(ரலி) – அன்னை பாத்திமா நாயகி இல்லற வாழ்வு அதிகமாக வறுமை நிறைந்ததாக காணப்படுகிறது. இருவர் இல்லற வாழ்வும் பற்றற்றதாகவும் காண முடிகிறது.

வாழ்க்கையை நடத்த பாத்திமா நாயகி பஞ்சின் மூலம் நூல் நூற்றும், சோளம், கோதுமை இவைகளை திரிகையில் அரைத்தும், சமையல் வேலை, பாத்திரம், வீடு போன்றவற்றை பராமரித்தும் துணிமணிகளை துவைத்தும், பிள்ளைகளான ஹஸன், உசைனை பராமரித்தும், தோல் துரித்தியில் தண்ணீர் சுமப்பதும், அன்றாட வேலைகளை தாமே நிறைவேற்றுவதும் வழமையாக கொண்டிருந்தார்கள்.

நல்ல மனைவி வெளியே சென்று வீட்டிற்கு வரும் கணவனை மகிழ்விப் பவளே என்ற நபிவாக்கிற்கு இலக்கணமாக, அன்போடு உபசரிக்கும் பண்பாடு அன்னை பாத்திமா வாழ்வில் காணலாம். ஹஸ்ரத் அலீ(ரலி) அவர்கள் பெரும்பாலும் வெளியே சென்று விட்டு வெறுங்கையுடன் வீட்டிற்கு வரக் கூடியவராக இருந்தார்கள். இப்படி வெறுங்கையுடன் வரும் கணவனுக்கு கிடைக்கும் வசைவு வார்த்தைகள், ஆசீர்வாதங்கள் நம் வீடுகளில் சொல்ல முடியாதது. லட்சம், லட்சமாக சம்பாதிக்கும் கணவன் மார்களுக்கே கிடைக்கும் வாழ்த்து சில நேரங்களில் சொல்ல முடியாதது. பெருமானாரின் குணாதிசயங்களையும், சாயலையும் பெற்றிருந்த அன்னை பாத்திமா(ரலி) வாழ்வு, அலீ(ரலி)யோடு வறுமையாக வாழ்ந்தாலும் பொறுமை யுடையதாகவும், பொறுப்பானதாகவும் இருந்தது.

வீட்டு வேலையை தானே செய்வதால் கையிலே கொப்பளம் உண்டானது. ஒருபொழுது பாத்திமா(ரலி) மாவு அரைக்கும் பொழுது, பிள்ளைகளான ஹஸன், ஹுஸைனை பிலால்(ரலி) கவனிக்க வேண்டியது ஏற்பட்டபோது பள்ளிக்கு பாங்கு சொல்ல ஹஸ்ரத் பிலால்(ரலி) போக முடியவில்லை. பாங்கு சொல்ல பிலாலே ஏன் நீங்கள் வரவில்லை? என்று நாயகம் காரணம் கேட்டபோது மிட்டில் ஹஸன், ஹுசைனை கவனிக்க வேண்டியதிருந்ததால் என பதில் சொன்னார்கள்.

வீட்டு வேலையால் உடல் பலகீனமாக இருந்த அன்னை பாத்திமா (ரலி) இல்லற வாழ்வோடு,பற்றற்ற வாழ்வே வாழ்ந்தார்கள். “கோதுமையை கையரைக்க கோவுரையை நாவுரைக்க போதுமென்ற பொன்மனத்தால் பொலிவடைந்தீர் பாத்திமா” என இறையருட் கவிமணியின் கவிதைவரிகள் போதுமென்ற மனதால் பாத்திமா(ரலி) பொறுமையோடு வாழ்ந்தார்கள் என்பதை அறிய முடிகிறது.



ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்
குளச்சல்

வீட்டு வேலையால் சிரமமுற்ற பாத்திமா(ரலி), கணவர் அலீ(ரலி) ஆலோசனையின் பேரில் பெருமானார் வீட்டிற்கு வந்துள்ள போர்க் கைதிகளில் ஒருவரை தன் வீட்டிற்கு வேலை செய்ய அழைத்துவர எண்ணிச் சென்று, பெருமானார் வீட்டில் இல்லாததால் விபரத்தை அன்னை ஆயிஷா நாயகியிடம் சொல்லி, தன் வீட்டிற்கு திரும்பினார்கள். பெருமானார் வெளியே இருந்து வீட்டிற்கு திரும்பி வந்தவுடன் ஆயிஷா நாயகி, மகள் வந்துபோன விபரத்தைச் சொன்னார்கள். பெருமானார் மகளைப் பார்க்க வீட்டிற்கு சென்ற போது, பாத்திமா நாயகி குடும்பம் தூங்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. பெருமானாரைக் கண்டவுடன் மகளும், மருமகனும் எழுந்திருக்கவும், வேண்டாமென சொல்லி மகளே! நம் வீட்டு வேலையை நாமே செய்வது தான் உகந்தது. வேலையாட்களை விட உயர்ந்த செயலை உங்களுக்குச் சொல்கிறேன். இரவில் நீங்கள் தூங்கச் செல்லும்முன் சுப்ஹானல்லாஹ் 33 தடவையும், அல்ஹம்துலில்லாஹ் 33 தடவையும், அல்லாஹு அக்பர் 34

தடவையும் வழமையாக ஓதி வாருங்கள். இது வேலையாளை விட நற்பேறு கிடைக்கும் செயலாகுமென உபதேசித்தனர். ஹஸ்ரத் அலீ (ரலி), பாத்திமா(ரலி) குடும்ப வாழ்வு, பெண்கள் ஆண்களுக்கு ஆடை, ஆண்கள் பெண்களுக்கு ஆடை என்ற திருமறை வசனத்தை உண்மைப் படுத்தியதாக உள்ளது.

ஹஸ்ரத் அலீ(ரலி) வெளியிலிருந்து வீட்டிற்கு வருகிறார்கள். பிள்ளைகளான ஹஸனும், ஹுஸைனும் பசியால் அழுகிறார்கள். பிள்ளைகள் ஏன்? அழுகின்றன என பாத்திமா நாயகியிடம் அலீ(ரலி) கேட்டார்கள். பசியால் பிள்ளைகள் அழுகின்றனர். வீட்டிலோ உண்பதற்கு உணவு இல்லை என தாய் பதிலுரைத்தார்.

ஹஸ்ரத் அலீ(ரலி) குடும்பப் பசித்தீர்க்க ஏதாவது கூலி வேலை கிடைக்காதா என வீட்டை விட்டு வெளியே கிளம்பினார். வேலை தேடி வெளியே வரும்போது ஓர் இடத்தில் ஒரு பொற்காசு மினு மினுத்துக் கொண்டிருந்தது. இப்பொற்காசை எடுத்து விபரத்தை பாத்திமா நாயகியிடம் சொன்னார்கள். பாத்திமா நாயகி பொற்காசிற்கு கோதுமை வாங்கி வரச் சொன்னார்கள்.

ஹஸ்ரத் அலீ(ரலி) ஓர் யூதனின், மளிகைக் கடையில் சென்று பொற்காசு கொடுத்து கோதுமை மாவு கேட்டார். யூதன்,பெருமானர் மீது பேரன்பும், பாசமும் கொண்டவன். மாவுக்குரிய விலையை ஹஸ்ரத் அலீ(ரலி) வேண்டியும் அவன் வாங்கவில்லை. காசை திருப்பிக் கொண்டுவந்த அலீ(ரலி)யிடம் அப்பொற்காசிற்கு இறைச்சி வாங்கி வர பாத்திமா(ரலி) வேண்டினார். இறைச்சி வரவும், ஆணம் தயார்செய்து ரொட்டியும் தயார்செய்தனர். உணவு உண்ண நபிபிரானையும் அழைத்தனர்.

பெருமானாரும் மருமகன், மகள், பேரப் பிள்ளை களும் உணவு உண்ணப் போகும்போது ஒரு பையன் வீட்டு வாசலில் நின்று என் பொற்காசு காணாமல் போய்விட்டது. யாராவது கண்டெடுத்தால் அல்லாஹ்விற்காகவும், இஸ்லாத்திற்காகவும் திருப்பி தந்துவிடுங்களென அறிவிப்புச் செய்கிறார். இது கேட்ட பெருமானர் பையனை அருகே அழைத்து பொற்காசு தவறிய விதம் மற்றும் விபரங்கள் கேட்டு மருமகர் அலீ(ரலி)யிடம் இறைச்சிக்கடைக்குச் சென்று பொற்காசை திருப்பி வாங்கவும், இறைச்சிக்குரிய ரூபாய் நான் தருவதாகச் சொல்லுங்களென சொல்லி அனுப்பினார்.

(அலீ)அவ்வாறே செய்தார். பையனிடம் பொற்காசு திருப்பி ஒப்படைக்கப்பட்டது. இம்மாதிரி நிகழ்வுகள் அலீ(ரலி) பாத்திமா(ரலி) சரிதையில் காணலாம்.

ஹஸ்ரத் அலீ(ரலி) வேலை செய்து தன் இல்லற வாழ்வை நல்லற வாழ்வாக கழித்தனர். பெருமானார் ஒருநாள் தன் மகளை இல்லத்தில் சந்தித்தபோது, மகளின் முகம் தொடர் பட்டினியால் வாடி வதங்கி, செந்நிறமாகி இரத்த ஓட்டம் இல்லாமல் இருந்தது. பெருமானார் மகள் முகத்தில் தங்களின் கரத்தை வைத்து பசி வேதனையை நீக்குவோனே! தேவைகளை நிறைவேற்றி, குறைகளை போக்குபவனே! முஹம்மதின் மகள் பாத்திமாவின் பசியை போக்குவாயாக! இந்த துவா கேட்டபின் பாத்திமா(ரலி) வாழ்வில் இறுதிவரை தொடர் பசியால் அவதியுறவில்லை என்பதை அறிகிறோம்.

ஹஸ்ரத் அலீ(ரலி)க்கும் அன்னை பாத்திமாவுக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டு மனைவியை, அலீ(ரலி) மனம் புண்பட பேசிவிட்டார்கள். பாத்திமா நாயகி தந்தை பெருமானாரிடம் புகார் செய்ய சென்றார்கள். மனைவியை பின் தொடர்ந்து சென்ற அலீ(ரலி) பெருமானாரிடம் புகார் செய்யும் போது, பாத்திமா நாயகியின் பின்னால் மறைந்து நின்றார்.

என்னருமை மகளே! கணவனுக்கு அடி பணிவது மனைவி மீது கடமை. எப்படிப்பட்ட சூழ் நிலையிலும் நீ கணவனுக்கு கீழ்படிந்து நடக்க வேண்டும். உனக்கு நோவினை செய்தாலும் நீ பொறுத்தருள வேண்டும். நன்றாக சிந்திந்துப் பார் உலகில் எந்தக் கணவராவது மனைவியை தொடர்ந்து வந்து இவ்வாறு பின்னால் நிற்பாரா?

எப்பொழுதும் இருவரிடையேம் பிரச்சினை எழும் போது மகளாரயே உபதேசம் கூறும் அண்ணலார் பாங்கு ஹஸ்ரத் அலீ(ரலி) மனதில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. அவர்கள் இதன்பின் இறுதிவரை இருவரும் மனத்தாங்கலின்றி வாழ்ந்தனர்.

“அன்பு வாழ்வே, பண்பு வாழ்வே, அரிய வாழ்வே, பெரிய வாழ்வே, துன்ப வாழ்வில் இன்ப வாழ்வைத் துலக்க வந்தீர் பாத்திமா!” என இறையருட் கவிமணி, பாத்திமா நாயகி வாழ்வு எப்படி இருந்ததென குறிப்பிடுகிறார்கள். பற்றற்ற நிலையில் வாழ்ந்த அன்னை பாத்திமா(ரலி) சுகவீனமுற்று படுக்கையாக இருந்தார்கள். தன் இரு புதல்வர் களோடு தந்தை கப்ரை போய் ஸியாறத் செய்தார்கள். குளிக்கச் சென்றார்கள் குளிப்பு முடிந்து படுக்கைக்குச் சென்றார்கள். தாயை காணாத பிள்ளைகள் அறைக்குள் சென்று பார்க்கும் பொழுது பாத்திமா (ரலி) ஆவி பிரிந்திருந்தது. இந்நிகழ்வை பற்றி இறை யருட் கவிமணியின் பாத்திமா பாடலில்,

காலைப்பாதே குளித்து வந்து கடமையாற்றிக் மாலைப்போதே மவுத்து மானீர் மாண்பொளிரும் பாத்திமா! எனக் குறிப்பிடுகிறார்.

பற்றற்ற வாழ்வு பாத்திமா(ரலி) வாழ்வு.

சமுதாய தாய்மார் பின்பற்றி ஒழுக வேண்டிய வாழ்வு.

அன்னை பாத்திமா வாழ்ந்தமுறை, பெண்ணினத் திற்கோர் வழிகாட்டியாகும்.

தலையங்கம்

# சிறந்த சமுதாயம்

இன்றைய சூழலில் தீமைகள் என்பது மிக வேகமாக பார்க்கும் இடங்களிலெல்லாம் பரவிக் கொண்டிருக்கின்றது. மக்கள் நன்மைகளில் இருந்து விலகியும்,தீமையின் பக்கம் விரைந்து செல்பவர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழலில் ஓர் இறைநம்பிக்கையாளன் மற்றவர்கள் செய்கின்ற தீமையைக் கண்டும் காணாமல் செல்லக்கூடாது.அதை தீமை என்று எடுத்துச் சொல்லிட வேண்டும். அழகிய முறையில் அறிவுறுத்த வேண்டும். நன்மையின் பக்கம் மக்களை அழைக்க வேண்டும்.

முஹம்மது நபி(ஸல்) கூறினார்கள் :

உங்களில் ஒருவர் ஒரு தீமையைக் கண்டால் தன் கையால் அதைத் தடுக்கட்டும், அதற்கு இயலாவிட்டால் தன் நாவால் தடுக்கட்டும், அதற்கும் இயலாவிட்டால் தன் மனதால் (வெறுக்கட்டும்) இது இறைநம்பிக்கையில் மிக பலவீனமானதாகும்.(நூல் : முஸ்லிம்)

மேலும், (மக்களை) நன்மையின் பக்கம் அழைப்பவர்களாகவும், நல்லதைக் கொண்டு (மக்களை) ஏவுபவர்களாகவும் தீயதிலிருந்து (மக்களை) விலக்குபவர்களாகவும் உங்களிலிருந்து ஒரு கூட்டத்தார் இருக்கட்டும் இன்னும் அவர்களே வெற்றி பெற்றோராவர்.(அல்குர்ஆன் : 3:104)

முஹம்மது நபி (ஸல்) எச்சரிக்கின்றார் :

“கியாமத் நாளில் ஒரு மனிதன் கொண்டுவரப்பட்டு நரகில் போடப்படுவான். அவனது வயிற்றிலுள்ள குடல்கள் வெளியாகிவிடும்.கழுதை திருகையை சுற்றுவது போல( வேதனையில்) அவன் தன் குடலைச் சுற்றுவான்.நரகவாதிகள் அவனிடம் ஒன்றுகூடி மனிதனே உனக்கு என்ன ஆனது? நீ நன்மையை ஏவி தீமையைத் தடுத்துக் கொண்டிருக்கவில்லையா? எனக் கேட்பார்கள். அதற்கவன் “ஆம்“ நான் நன்மையை செய்யாமல் அதை ஏவக் கூடியவனாக இருந்தேன். தீமையை செய்துகொண்டு அதை தடுப்பவனாக இருந்தேன் என விடையளித்தான்.(நூல் : புகாரி)

நன்மையை ஏவி தீமையை தடுக்கின்ற இந்த பணி,இறைநம்பிக்கை கொண்ட ஆண்கள் மட்டுமல்ல ,இறைநம்பிக்கை கொண்ட பெண்களும் செய்ய வேண்டிய பணி. “மூஃமினான ஆண்களும்,மூஃமினான பெண்களும் ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாக இருக்கின்றனர். அவர்கள் நல்லதைச் செய்யத் தூண்டுகிறார்கள். தீயதை விட்டும் விலகுகிறார்கள்(9:71)

மனித சமூகத்திலேயே சிறந்த சமுதாயமாக முஹம்மது நபியின் உம்மத்தாகிய நம்மை அல்லாஹ் ஆக்கியிருக்கின்றான். அதற்கான காரணம் நீங்கள் நன்மையை ஏவுகின்றீர்கள் தீமையைத் தடுக்கின்றீர்கள் என்பதற்காகத்தான். அல்லாஹ்வின் வேதனை நம்மீது விழாமல் இருக்க அல்லாஹ் நம் மீது சுமத்திய பொறுப்புகளை சரிவர நிறைவேற்றி சிறந்த சமுதாயமாக திகழ்வோம்.

# வாசகர்கள் எண்ணங்கள்!

Shiek Manzoor • 9 days ago

Professor Gregory H. Santon என்பவர் 1994-இல் rwanda இனப்படுகொலையை முன்பே கணித்து கூறினார், அதை போன்று நடந்தது.இப்போது ஹிந்துதுவா முஸ்லிம்களுக்கு எதிராக மிக பெரிய அளவில் இனப்படுகொலை நடத்த போகிறது, சுமார் 10 லட்சம் முஸ்லிம்கள் வரை கொல்லப் படலம் என்று கூறியுள்ளார்

REPLY 0 replies 1



14 ரிமாண்ட் | ஹரித்வார் வெறுப்பு பேச்சு | நாட்டின் ...

மாற்றம் • 11 days ago

மிகவும் பயனுள்ளா பதிவு

REPLY 0 replies 2



காந்திஜியை காப்பாற்றிய முஸ்லிம் | ஜனவரி 30 காந்திஜி ...

IQBAL MATHS • 12 days ago

அரசியல் சாசனத்தை ஒரு பக்கசார்பாக பயன்படுத்தும் நீதிபதிகளும், அவர்களின் மீதான ஆளும் அரசின் அழுத்தங்களும் நமக்கு சரியான நீதி கிடைக்குமா என்ற அச்சத்தினை தருகிறது. பொது சமூகம் இந்த விடயத்தில் அமைதிக்காப்பதுதான் பேராபாத்தான செயலாகும்.

உலகின் எங்கோ ஒரு மூலையில் எவனோ ஒருவன் முஸ்லிமாகவோ அல்லது முஸ்லிம் பெயரிலோ தீவிரவாதத்தாக்குதலில் ஈடுப்பாட்டால் நம்மிடம் அதனைப்பற்றியதான கண்டனங்களை எதிர்ப்பார்க்கும் பொது சமூகம் அவர்களின் கண்ணெதிரே நடக்கும் இனப்படுகொலை அழைப்பிற்கான ஒரு பயங்ரத்தினைக் கண்டு வாய்மூடி இருப்பதன் மர்மம்தான் புரியவில்லை.

REPLY 0 replies




ஹரித்வார் வெறுப்பு பேச்சு | கைது நடவடிக்கைகள்

Mansoor ali • 13 days ago

சரியான,விளக்கம்,அல்லாஹ் நாடினால்,நல்லதே,நடக்கும்

REPLY 0 replies



முஸ்லிம்களுக்கு எதிரான பாஸிஸ்டுகளின் ...

Mansoor ali • 2 weeks ago

எல்லா வகையிலும்,சிறுபான்மை மக்களை,பழி,வாக்கும்,அரசாகத்தான்,தற்போது,உள்ள,ஒன்றிய அரசு செயல்படு கிறது,மக்கள்,தங்கள் ஓட்டுவங்கியை,சரியாக,பயன்படுத்தி,பாடம்,கற்பிக்கவேண்டும்

REPLY 0 replies



மனித உரிமை அமைப்புகளை நசுக்கும் ஒன்றிய அரசு...

Aamir Feroz Kamarudheen • 2 weeks ago

இது போன்று தகவல்கள் பரிமாற அடிக்கடி கலந்தாய்வு நடத்துங்கள். நன்றி

REPLY 0 replies 1




பெரியார் பார்வையில் இஸ்லாம் | மறைக்கப்படும் ...



# இஸ்லாமிய அறிவுலகில் இந்திய உலமாக்களின் பங்களிப்பு

மூலம்:
**அபுல் ஹஸன் அலீ நத்வீ(ரஹ்)**



தமிழில்:
**மௌலவி. நியாசுதீன் புகாரி நத்வீ**

இந்திய முஸ்லிம்கள் தங்களது நாட்டின் மீது தீராத பற்று உடையவர்களாக இருந்தனர். இந்த நாட்டின் கல்வி, உற்பத்தி, கலாச்சாரம் ஆகியவற்றை முன்னேற செய்வதிலும், அதற்கு தங்களது பங்களிப்பை அளிப்பதை விட்டும் அவர்கள் பாராமுகமாக இல்லை.அதே நேரத்தில் தங்களது மார்க்கத்தின் மீதும் இஸ்லாமிய கலாச்சாரத்தின் மீதும் ஆழ்ந்த பற்று உடையவர்களாக இருந்தனர்.

இந்தியாவின் வளர்ச்சிக்கு இவர்கள் ஆற்றிய முழுமையான பங்களிப்பின் காரணமாக மார்க்கத்தை பின்பற்றும் விஷயங்களில் இஸ்லாமிய கலாச்சாரத்தை பேணும் விஷயங்களில் இவர்களிடம் பின்னடைவு ஏற்படவில்லை. வரலாற்றின் சில காலகட்டங் களிலே இவர்களை படையணிகளில் முன்னால் நிற்பவர்களாகவும் உலகின் கடிவாளத்தை பிடித்து வழிநடத்துபவர்களாகவும் நம்மால் காண முடிகிறது.

நேர் எதிரான இரு கலாச்சாரத்தை ஒருங் கிணைப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. அதேபோல அரசியலிற்கும், ஆன்மீகத்திற்கும் ஒரே நேரத்தில் விசுவாசியாக இருப்பது மிகவும் சிரமமான காரியம். இவ்வாறான இரு முக்கிய பொறுப்புகளையும் தங்கள் மீது சுமத்திக் கொண்டு அதில் ஜெயித்தும் காட்டியது இந்திய முஸ்லிம்களாக மட்டுமே இருக்க முடியும்.

இஸ்லாமிய அறிவுத் துறையில் இந்திய மார்க்க அறிஞர்கள் எண்ணிலடங்கா நூல்களை எழுதி யுள்ளனர்.அந்த நூல்களின் பெயர்களை பட்டியலிட்டால் இப்னு நதீமின் ஃபஹ்ரஸ்த் நூலைப் போல ஹாஜி கலீஃபா அவர்களது கஷ்ஃபுள் லுனூன் நூலைப் போல அந்த பட்டியலே மிகப்பெரிய நூலாகிவிடும்.

'அஸ்ஸகாஃபதுல் இஸ்லாமியா ஃபில் ஹிந்து' என்ற நூலை வாசிக்கும் போது இந்திய இஸ்லாமிய அறிவு மையத்தை பற்றியும் இஸ்லாமிய எழுத்துலகில் அதன் மார்க்க அறிஞர்கள் செய்த மாபெரும் பங்களிப் பையும் நம்மால் அறிய முடிகிறது. இவற்றில் முதலில்

அரபு மொழியில் எழுதப்பட்டு இந்தியாவையும் தாண்டி உலக அளவில் அங்கீகாரத்தைப் பெற்று அரபு உலகமே புகழ்ந்து மகுடம் சூட்டிய நூல்களை மட்டும் காண்போம்.

அந்த வரிசையில் முதலில் அல்லாமா ஹஸன் இப்னு முஹம்மத் அஸ்ஸகானி அல்லாஹுரி (ரஹ்) அவர்களால் எழுதப்பட்ட "அல் உபாபுஸ் ஸாஹிர்"இவர் ஹிஜ்ரி ஒன்பதாம் நூற்றாண்டை சார்ந்தவர்.இவரது இந்த படைப்பு அரபு மொழி அகராதியின் மூல மேற்கோள் நூலாகவும் பிரபல்யமான நூலாகவும் விளங்குகிறது. (எழுதப்பட்ட நேரத்திலும் சரி இன்றும் சரி) இஸ்லாமிய அறிஞர்கள் இந்த நூலிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

இந்தத்துறையில் மிகவும் துல்லியமாக முழுமையாக எழுதப்பட்ட நூல் என்று அனைத்து அறிஞர்களுமே ஒப்புக் கொள்கின்றனர். இந்த நூலின் ஆசிரியரது உயர்ந்த அந்தஸ்தையும் இந்தத் துறையில் அவரே தலைவர் என்றும் அனைத்து மார்க்க அறிஞர்களும் ஒப்புக்கொள்கின்றனர்.

"இவர் அரபு மொழி அகராதியின் கொடியைச் சுமப்பவராக இருந்தார்" என்று இமாம் சுயூதி (ரஹ்) அவர்கள் போற்றுகிறார்கள். "தேடலின் இறுதி இடமாக இருந்தார்" என்று அன்னாரை இமாம் தஹபி(ரஹ்) அவர்கள் புகழ்கிறார்கள். (அதாவது அரபு மொழியில் எந்த வார்த்தையை தேடினாலும் அதனை இந்த புத்தகத்தில் பெற்று விடலாம், இந்த நூலை விட்டு வேறு நூலை அணுக வேண்டிய தேவை இல்லை என்கிற அளவிற்கு முழுமையான ஒரு நூலாக திகழ்ந்தது).

"ஹதீஸ், அரபு மொழி அகராதி, ஃபிக்ஹ் ஆகிய துறைகளின் அரசன் இவரே" என்று இமாம் தும்யாத்தி(ரஹ்) அவர்கள் போற்று கிறார்கள். அதேபோல ஹதீஸ் துறையில் இவர் எழுதிய நூலான மஷாரிகுல் அன்வார் இஸ்லாமிய உலகில் மிகப்பெரிய அங்கீ காரத்தை பெற்றது. பல ஆண்டுகளாக பாடப் புத்தகத்தில் இந்தப் புத்தகம் வைக்கப் பட்டிருந்தது.

அடுத்ததாக அஷ்ஷைகு ஹுஸாமுத் தீன் அல்முத்தக்கி அல்புர்ஹான்பூரி(ஹி975)(ரஹ்) அவர்களால் எழுதப்பட்ட கன்ஜுல் உம்மால். இந்த நூலானது இமாம் சுயூத்தி(ரஹ்) அவர்களால் எழுதி அவர்களால் சரியான வரிசை முறையில் தொகுக்கப்படாத, ஜம்உல் ஜவாமிஃ என்ற நூலை சரியான வரிசை முறையில் அமைத்து தொகுக்கப்பட்ட நூல் கன்ஜுல் உம்மால்.

ஹதீஸ் துறை அறிஞர்கள் இந்த நூலின் மூலம் மிகப்பெரிய அளவில் பயன் பெற்றார்கள். இந்த நூலாசிரியரின் அளப்பரிய உழைப்பை ஒப்புக் கொண்டார்கள். ஏனென்றால் பல மூல நூல்களைத் தேடி பலநேரம் செலவிடுவ திலிருந்து இந்த நூல் அவர்களுக்கு மிகப்பெரிய ஓய்வை தந்தது. பத்தாம் நூற்றாண்டில் ஹிஜாஸில் வாழ்ந்த மூத்த அறிஞரான அஷ்ஷைகு அபுல் ஹஸன் அல்பக்ரி அஷ்ஷாஃபிஈ(ரஹ்) அவர்கள் கூறினார்கள், "மார்க்க கல்வி கற்கும் அனைவரும் இமாம் சுயூத்தி(ரஹ்) அவர்களுக்கு நன்றி கடன் பட்டுள்ளார்கள். இமாம் சுயூத்தி அவர்களோ இமாம் முத்தகி(ரஹ்)அவர்களுக்கு நன்றிக்கடன் பட்டுள்ளார்கள்".

அடுத்ததாக அஷ்ஷைகு முஹம்மத் தாஹிர் அல்ஃபதனி(ரஹ்)(ஹி986)அவர்களால் எழுதப்பட்ட "மஜ்மஉ பிஹாரில் அன்வார் ஃபி கராயிபித் தன்ஜீல் வ லதாஇ ஃபில் அஹ்பார்". அல்லாமா அப்துல் ஹை ஹஸனீ (ரஹ்) அவர்கள் நுஸ்ஹதுல் ஹவாதிர் என்ற தங்களது நூலில் இவ்வாறு பதிவுச் செய்கிறார்: எல்லா நூதனமான ஹதீஸ்களையும் ஆசிரியர் இந்நூலில் ஒன்றுத்திரட்டி இருக்கிறார். இவை யனைத்தும் பிரபல்யமான ஆறு ஹதீஸ் கிரதங்களின் விளக்கவுரை போல அமைந்துள்ளது. இந்த நூல் வெளியான நேரத்தி லிருந்து மார்க்க அறிஞர்களிடம் மிகப்பெரிய அளவில் அங்கீகாரத்தை பெற்றது.

இப்படி ஒரு பணியை செய்ததன் காரணமாக அந்த காலத்தில் வாழ்ந்த இதர அறிஞர்களை விடவும் பெரும் பாக்கியத்தையும் பெற்றவராகி விட்டார். அதேபோல இவரது மற்றொரு நூலான தத்கிரத்துல் மவ்லுஆத் இந்த துறையில் பரவலாக இருக்கின்ற இதர நூல்களை விடவும் மேம்பட்டதாக திகழ்கிறது. அடுத்ததாக அல்ஃபதாவா அல் ஹிந்தியா, ஃபிக்ஹ் சட்டத் துறையின் மிகப்பெரிய தேடுகளமாகவும். ஹனஃபி மத்ஹபின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கும் நடைமுறையைக் கொண்ட மிக அதிகமான இஸ்லாமிய நாடுகளது சட்டக் கருவூலமாகவும் இது திகழ்கிறது.

இந்த நூலைப் பற்றி அல்லாமா அப்துல் ஹை

ஹஸனீ நத்வி(ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: ஃபதாவா ஆலம்கீரியை ஃபதாவா ஹிந்தியா என்றும் அழைக்கிறார்கள். பல்வேறு மஸாயில்களை உள்ளடக்கிய எளிமையான வாக்கியங்களால் அமைக்கப்பெற்ற, பல பிரச்சனைகளுக்கு தீர்வுகளைக் கொண்ட, மிகவும் பயனளிக்கக் கூடிய மிகப்பெரிய சட்டக் கருவூலம். அரபு நாடுகளான ஷாம், எகிப்து ,கெய்ரோ ஆகிய நாடுகளில் இது ஃபதாவா ஹிந்தியா என்றே பிரபல்யமடைந்தது. ஆறு பாகங்களான இந்த நூல் ஹிதாயா ஃபிக்ஹ் நூலின் வரிசைப்படி தொகுத்திருக்கிறார்கள். பெரும்பாலும் ஹனஃபி ஃபிக்ஹ் கிதாபின் பிரபல்யமான ஆறு கிரந்தங்களை கொண்டு மட்டுமே மஸாயில்களுக்கான பதில்களை எழுதுவதை போதுமாக்கிக்கொண்டார்கள்.

சில சட்டப்பிரச்சனைகளுக்கு இந்த கிரந்தங்களின் மூலம் பதில்கள் கிடைக்கப் பெறாத போது மட்டுமே வேறு ஃபிக்ஹ் நூல்கள் மூலம் வினாக்களுக்கான பதில்களை அகழ்ந்தெடுத்து எழுதினார்கள். மஸாயில்களுக்கான பதில்களை வேறு சட்ட நூல்களிலிருந்து பெறும்போது, இந்த கருத்துக்குதான் ஃபத்வா கொடுக்கபட்டிருக்கிறது என்ற அடையாளத்தோடு சுட்டி காட்டி சொந்த வார்த்தைகளில் இல்லாமல் மூல நூலில் உள்ள வாக்கியத்தை அப்படியே பதிவுச் செய்தார்கள்.

சுல்தான் அவ்ரங்கஜேப்(ரஹ்) அவர்கள் தனது ஆட்சியின் துவக்கத்தில் ஹனஃபி மத்ஹபின் அடிப்படையில் ஒரு சட்ட நூலை தொகுப்பதற்காக அஷ்ஷைகு நிஜாமுதீன் அல்புர்ஹான் பூரி(ரஹ்) அவர்களை நியமித்தார்கள். இந்த அரும் பணியை மேற்கொள்ள 2 லட்சம் ரூபாயை சுல்தான் அவர்கள் வழங்கினார்கள்.

இந்து நூலின் ஆசிரியர் இந்த நூலை தொகுப்பதற்கு பங்களிப்பு செய்த 24 மார்க்க அறிஞர்களது பெயர்களை பதிவுச் செய்கிறார். இவர்களில் நான்கு அறிஞர்களான காஜி முஹம்மத் ஹுஸைன் ஜோன்புரி அல்முஹ்தஸிப், அஷ்ஷைகு அலி அக்பர் அல்ஹுஸைனி அஸதுல்லாஹ் கானி, அஷ்ஷைகு ஹாமித் இப்னு அபில் ஹாமித் அல்ஜோன்புரி, அல்முஃப்தி முஹம்மத் அக்ரம் அல்ஹனஃபி அல்லாஹுரி ஒட்டுமொத்த நூலை நான்கு பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் இவர்களில் ஒருவர் மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டார்கள்.

அடுத்ததாக அல்லாமா முஹிப்புள்ளா இப்னு அப்து ஷுகுர் அல்பிஹாரி(ஹி1119) அவர்களால் உஸுலுல் ஃபிக்ஹ் துறையில் எழுதப்பட்ட முஸ்லிமுஸ் சுபூத் என்ற நூல் இந்தியா மற்றும் இதர இஸ்லாமிய நாடுகளின் கல்வி நிறுவனங்களில் மிகப் பெரிய அங்கீகாரத்தை பெற்றது. மூத்த மார்க்க அறிஞர்கள் இதனைக் கொண்டே பாடம் நடத்தியதும் விளக்கம் அளித்ததும் இதன் கூடுதல் சிறப்பு. இந்திய மூத்த அறிஞர்களால்  பத்திற்கும் மேற்பட்ட விரிவுரைகள் இதற்கு எழுதப்பட்டுள்ளது.

14ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அஷ்ஷைகு முஹம்மத் அஃலா அத்தானவி(ரஹ்) அவர்களால் எழுதப்பட்ட கஷ்ஷாஃபு இஸ்திலாஹத்தில் ஃபுனூன், மிகப்பெரிய அளவில் பயனளித்த நூல். அரபுலகின் கல்வியாளர்களிடையே மிகப்பெரிய வரவேற்பையும் அங்கீகாரத்தையும் பெற்ற நூல். அனைவரும் அதனைப் போற்றிப் புகழ்ந்தார்கள் ஏனென்றால் அனைத்து துறைசார்ந்த வார்த்தைகளின் அகராதியாக  இது விளங்கியது. பல்லாயிரம் பக்கங்களை புரட்டுவதையும், பலநூறு புத்தகங்களில் தேடுவதையும், இந்நூல் தேவையற்றதாக ஆக்கியது

மிகவும் தேவை இருந்தும் கூட இது போன்ற ஒரு பெரிய நூல் எழுதப்படவில்லை. இன்றும் கூட மார்க்க அறிஞர்கள், ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள் ஆகியவர்களுக்கு இது ஒரு ஒற்றை தேடுகளமாக விளங்கி வருகிறது. இதனைப்போலவே 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அஷ்ஷைகு அப்துந் நபி இப்னு அப்துர் ரசூல் அல் அஹ்மத் நகிரி அவர்களால் எழுதப்பட்ட நூல் ஜாமிஉல் உலூம் இது மார்க்க அறிஞர்களின் பெட்டகம் என்றப் பெயரில் பிரபல்யமடைந்தது. இது நான்கு பாகங்களை கொண்ட நூல்.

இந்த வரிசையில் அடுத்ததாக இல்லை இவற்றையெல்லாம் விட அற்புதமான நூல் இமாம் ஷாஹ் வலியுல்லாஹ்(ரஹ்) அவர்களால் எழுதப்பட்ட ஹுஜ்ஜத்துல்லாஹில் பாலிகா, இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்கள் கடமையாக்கபட்டதன் இரகசியங்களையும் அதன் தத்துவங்களையும் உள்ளடக்கிய நூல் .

இஸ்லாமிய அறிவு உலகில் இது ஒரு புது வகையான படைப்பு இதற்கு நிகராக இதுவரை ஒரு படைப்பு எழுதப்படவில்லை. மார்க்க அறிஞர்கள் அனைவருமே இந்த நூலைப்

போற்றிப் புகழ்ந்தார்கள். எகிப்து நாட்டில் இது திரும்பத்திரும்ப பதிப்பிக்கப்பட்டது.

இந்த நூலைப் பற்றி முக்கியமாக குறிப்பிட வேண்டியது, இது முழுமையாகவே அரபு மொழியில் எழுதப்பட்டது. அழுத்தமான வாக்கியங்கள், அந்த வாக்கியங்களுக்கு மத்தியில் உள்ள ஒருங்கிணைப்பு ஆகியவை சிறப்பாக அமைந்திருந்தது. தேவையற்ற அடுக்குமொழி வார்த்தைகள் தவிர்க்கபட்டிருந்தது. அந்தக் காலத்தில் அரபு மொழி உலகில் ஹரிரீ அவர்களது எழுத்து நடையே கோலோச்சி இருந்தது. ஆனால் இந்த நடை இந்த நூலில் அறவே தவிர்க்கப்பட்டிருந்தது. கடைசி நூற்றாண்டுகளில் ஹரிரீயின் நடையை தவிர்த்து எழுதுவது என்பது மிகவும் அரிது. இது எழுதப்பட்ட காலமும் கவனிக்கத்தக்கது அரபு மொழி வீழ்ச்சியை நோக்கிச்சென்று கொண்டிருக்கும் அதே நேரத்தில், அந்நிய மொழிகளின் ஆதிக்கம் மிகைக்கக்கூடிய நேரத்தில், இஸ்லாமிய உலகின் எழுத்தாளர்களிடம் ஒரு செயற்கை தன்மை மிகைக்கக் கூடிய தருணத்தில், தெளிவான, இயல்பான இலக்கிய உரைநடையை உள்ளடக்கிய விஷயத்திலும், நிறைய கல்வி ஞானம் பொதிந்த வாக்கியங்களை உள்ளடக்கிய விஷயத்திலும் முகத்தமது இப்னு ஹல்தூன் என்ற நூலுக்கு பிறகு இதுவே இரண்டாவது முன்னுதாரணமாக திகழ்கிறது.

அடுத்ததாக சையது முர்தலா இப்னு முஹம்மத் அல்பில்கிராமி,ஜுபைதி என்ற பெயரால் பிரபல்யமடைந்தவர். அறிமுகம் தேவையில்லை என்ற அளவிற்கு பிரபல்யமானவர். இவர் எழுதிய தாஜுல் உரூஸ் ஃபி ஷரிஹில் காமூஸ், பத்து பாகங்களை உள்ளடக்கிய மிகப்பிரம்மாண்டமான அகராதி நூலாகும். இந்நூலின் ஆசிரியர் காலத்திலேயே மிகப்பெரிய அளவில் பிரபல்யமடைந்தது.

உஸ்மானியா பேரரசின் மன்னர் இவரிடமே எழுதிக்கேட்டு ஒரு பிரதியை வாங்கிக் கொண்டார்கள். அதேபோல தார்ஃபூரின் சுல்தான்கள், மொரோக்கோவின் மன்னர், ஆகியோர் ஒரு பிரதியை வாங்கி கொண்டார்கள். எகிப்தின் படைத்தளபதி, முஹம்மது பேக் அபூ தஹப் ஒருப் பிரதியை வாங்கி அஸ்ஹர் பல்கலைக்கழகத்திற்கு அருகில் தன்னால் நிறுவப்பட்ட மஸ்ஜிதின் நூலகத்தில் வைத்தார்.இந்த பிரதியைப் பெற்றுக் கொள்ள ஆயிரம் ரியால்களை செலவழித்தார்.

ஹிஜ்ரி 14ஆம் நூற்றாண்டில் இந்திய முஸ்லிம் எழுத்தாளர்கள் தலைசிறந்து விளங்கினார்கள். வேகமாக நூல்களை எழுதி,அதனை வெளியிடுவது, அதிகமான நூல்களை எழுதுவது, மிகப் பெரிய தொகுப்புகளை எழுதுவது என இஸ்லாமிய அறிவுலகில் உச்சத்தை அடைந்தார்கள். அவர்களில் ஒவ்வொருவருமே உற்சாகம் நிறைந்த கல்வி நிறுவனங்களாக விளங்கினர். அதிலும் குறிப்பாக சில அறிஞர்கள் பல நேரங்களில் பெரிய கல்வி நிறுவனத்தால் செய்யமுடியாத பணிகளை கூட செய்திருக்கிறார்கள்.

உதாரணமாக போபாலின் நவாப் சித்தீக் ஹஸன் இப்னு அவ்லாத் ஹஸன் அல்கனூஜி (ஹி1307) அவர்கள் எழுதிய நூல்களின் எண்ணிக்கை 222. இதில் அரபு மொழியில் எழுதப்பட்ட நூல்கள் மொத்தம் 57.

இந்த நூல்களில் முக்கியதுவம் வாய்ந்த மிகப்பெரிய நூல் ஃபத்ஹுல் பயான் ஃபி மகாஸிதில் குர்ஆன் பத்து பாகங்களை கொண்டது. இன்னும் அப்ஜதுல் உலூம், அத்தாஜுல் முகல்லல், அல் புல்கா ஃபி உசூலில் லுகா, இல்முல் ஹஃபாக் ஃபி இல்மில் இஷ்திகாக் என்ற முக்கியமான நூல்களும் உள்ளடங்கும்.

அடுத்ததாக இந்தியாவின் மூத்த அறிஞர் அஷ்ஷைகு அப்துல் ஹை இப்னு அப்துல் ஹலீம் அல்லக்னவி(ஹி1304) அவர்களால் எழுதப்பட்ட நூல்கள் 110. இதில் 86 நூல்கள் அரபு மொழியில் எழுதப்பட்ட நூல்கள்.

இவற்றில் அஸ்ஸிஆயா ஃபி ஷரஹில் விகாயா, மிஸ்பாஹுத் துஜா, தஅலீகுல் மஜ்த், ஸஃபுருல் அமானி ஆகியவை பிரபல்யமான நூல்கள். இவர் எழுதிய மற்றொரு நூலான அல்ஃபவா இதுல் பஹிய்யா நிறைய எழுத்தாளர்களுக்கு ஹனஃபி மத்ஹபைச் சார்ந்த அறிஞர்களது வாழ்க்கை குறிப்பை அறிவதற்கு ஒரே மூல நூலாக இன்றும் விளங்கி வருகிறது.

மிகப்பெரிய சமூக சீர்திருத்த வாதி, மிகவும் பிரபலமான மார்க்க அறிஞர் மௌலானா அஷ்ரஃப் அலி தானவி(ஹி1362) சிறிது பெரிதுமாக எழுதப்பட்ட நூல்களின் எண்ணிக்கை 910. இதில் 13 நூல்கள் அரபு மொழியில் எழுதியவை.

தொடரும்....

# பிப்ரவரி – மால்கம் X மாதம்



## மால்கம் X
19 May, 1925 - 21 Feb, 1965

அமெரிக்காவின் நிறவெறி கொள்கையை இஸ்லாத்தை முன் வைத்து முறியடித்த மாவீரன் மால்கம் X என்ற மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீத்.

தான் இஸ்லாத்தை ஏற்றார், அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கறுப்பு நிறத்தைக் கொண்டவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். நிறவெறிக் கொடுமைகளிலிருந்து நிரந்தரமாக மீட்டார்.

'ஹஜ்' பயணம் என்ற புனித மக்கா மாநகரம் சென்று இஸ்லாம் தொடங்கிய பூமியில் தன் கடமையை முடித்தார். சவூதி அரேபியா அரசின், அரசு விருந்தினர் என்ற கண்ணியத்தாடு.

*16* ஆப்ரிக்கா நாடுகளுக்குச் சென்று இஸ்லாத்தைப்பிரச்சாரம்செய்தார். லட்சக்கணக்கான கறுப்பு நிறம் கொண்டவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்யும் தனது பெரும் பயணத்தின் ஒரு பகுதியாக, 'கேசியஸ் கிளே' என்ற உலக மகா குத்துச் சண்டை வீரனை முஹம்மத் அலீ கிளேயையும் இஸ்லாத்தில் இணைத்தார்.

ஆனால், அமெரிக்காவின் வெள்ளை நிற வெறியர்களால், இதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அவர்கள் அதாவது, குழு கிளக்ஸ் கிளான் என்ற வெள்ளை நிற அமைப்பைச் சார்ந்தவர்கள் அமெரிக்காவின் உளவுத்துறையின் உதவியோடு மால்கம்–X அவர்களை பிப்ரவரி *21–1965* இல் கொலை செய்து விட்டார்கள்.

இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளாத கறுப்பர்களின் நிலை அமெரிக் காவில் குரூரம் நிறைந்த ஒன்றாகவே இருக்கின்றது. இதனை அண்மையில் கொலை செய்யப்பட்ட ஜார்ஜ் பிளாயிட் George Floyd என்ற கறுப்பின அப்பாவியை நடு ரோட்டில் வைத்து கழுத்தை நெறித்து கொலை செய்த குரூரம் உலகிற்கு உணர்த்தியது.

அன்றும், இன்றும் என்றும் இஸ்லாம் மட்டுமே அமெரிக்காவின் அடிப்படை பிரச்சனையாம், நிறவெறியைத் தீர்க்க வல்லது. இதனால் அமெரிக்காவின் எதிர்காலம், இஸ்லாத்தின் மூலம்தான் மலரும்.

இதனை நன்றாக உணர்ந்தது அமெரிக்க முஸ்லிம்கள் தங்கள் இஸ்லாம் அடிப்படை மார்க்க கடமையாம் இஸ்லாமியப் பிரச்சாரத்தை நிறைவாகவே நிறைவேற்றி வருகின்றார்கள். இதில் அவர்கள் சந்தித்த சோதனைகள் சொல்லி

YAAMEEN GRAPHIC PANRUTI

மாளாது. டிரம்ப் நாளும் ஒரு நெருக்கடியைக் கொடுத்தார்.


2020 நவம்பரில் அமெரிக்காவில் நடந்த தேர்தலில் அவமானம் நிறைந்ததொரு தோல்வியை மக்கள் டிரம்ப்–க்கு கொடுத்தார்கள். அவருடைய திட்டங்களில் ஒன்றாக அங்குள்ள கறுப்பர்களுக்கு வாக்குரிமையை மறுப்பதாக இருந்திருக்கின்றது. நம் நாட்டில் கொண்டுவரப் பட்ட CAA என்ற குடியுரிமைத் திருத்தச் சட்டத்தைப் போல் (Defranchise the afro americans) அமெரிக்காவில் வாழும் கறுப்பு நிறம் கொண்டவர்களை ஆஃப்ரோ – அமெரிக்கர்கள் என்றே அழைப்பார்கள். அவர்களுக்கு வாக்குரிமையை மறுப்பது ஒரு பெரும் இலக்காக இருந்திருக்கின்றது டிரம்ப்–இன் வெள்ளை நிற வெறி கும்பலுக்கு. இதுதான் அவரைத் தேர்தலில் எதிர்த்து நின்ற ஜோசப் பிடனின் மகத்தான வெற்றிக்குக் காரணம். அமெரிக்கர்கள் ஒற்றுமையுடன் இருப்போம் என்ற ஒற்றை முழக்கத்தை முன் வைத்து வென்றார் பிடன்

ஆகவே ஒற்றுமையை பேசும், பிடன் வெற்றிபெற முடியுமானால் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் நிரந்தரமாக நடைமுறை வாழ்க்கையில் நிலை நிறுத்திய இஸ்லாம் நிச்சயமாக அங்கே வெற்றிபெறும் நிரந்தரமாக, நிலை நாட்டப்படும். இன்ஷா அல்லாஹ்.

## தாருல் இஸ்லாம்

வருடந்தோறும் மால்கம் – X ஷஹீதாக்கப் பட்ட பிப்ரவரி 21 ஆம் நாளை மையமாகக் கொண்டு, பிப்ரவரி மாதம் முழுவதும் தாழ்த்தப் பட்ட, அமுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு இஸ்லாமே மருந்து என்ற பிரச்சாரத்தைச் செய்து வருகின்றோம். தாருல் இஸ்லாம் சார்பில் இதனை முன்னிட்டு மால்கம் – X நூலை, குறைந்த விலையில் மக்களுக்கு விநியோகித்து வருகின்றோம்.

**110 ரூபாய் மதிப்புள்ள நூலை 80 ரூபாய்க்கு கிடைக்கச் செய்கிறோம். (இந்த மாதம் மட்டும்)**




## நூல் தேவைக்கு

சென்னை - 81481 29887
மதுரை - 95246 26457
திருப்பூர் - 96551 35154
கோவை - 86954 21821
மேட்டுப்பாளையம் - 86108 40476
பொள்ளாச்சி - 94898 32769
திருச்சி - 93810 29717
நாகை - 82489 63991
காரைக்கால் - 98657 37232
நாகர்கோவில் - 81908 1075

இவண்,

**தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்,**

**நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம்**

52/1, மண்ணடித் தெரு,
மண்ணடி, சென்னை – 600 001.
செல் : 81481 29887

# பலதாரமணம்

## அன்றும் - இன்றும்

**மகளிர் மன்றம்**



இஸ்லாத்தின் மீது இட்டுக்கட்டடப்படும் இடிந்துரைகளில் பலதார மணமும் ஒன்று. யதார்த்த வாழ்க்கையில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதைப் பற்றி எள்ளளவும் கவலைப்படாதவர்கள் அல்லது அதைப் பற்றிய அறிவில்லாதவர்கள் வாய்க்கு வந்ததையெல்லாம் உளறுகின்றார்கள். இவர்களுக்கு இஸ்லாம் பலதார மணத்தை ஒவ்வொரு ஆண்மகன் மீதும் கடமையாக்கி இருக்கின்றது என்று நினைப்பு.

ஏனெனில் பலதார மணத்தைப் பற்றி இவர்களின் எஜமானர்கள் என்ன சொன்னார்களோ, அதை வாந்தி எடுப்பதைத் தவிர இவர்களுக்கு வேறு எதுவும் தெரியாது.

ஆனால் இவர்கள் தங்கள் எஜமானர்கள் சொல்லித்தந்தவை உண்மைதானா? என்பதைப் பற்றியோ, இஸ்லாம் உண்மையிலேயே பலதார மணத்தைப் பற்றி என்ன சொல்லி இருக்கின்றது என்பதைப்பற்றியோ எந்தக் கவலையுமில்லை. வார்த்தைகளை வாந்தி எடுப்பதே வேலை.

இதனால் இஸ்லாம் பலதார மணத்தை சில நிபந்தனைகளோடுதான் அனுமதித்திருக்கின்றது என்ற உண்மை கூட இவர்களுக்கு எட்டிட வில்லை.

இறைவன் தன் திருமறையில் பெண்களுக் கென்றே தந்த அத்தியாயம் அன்நிசா - பெண்கள். இந்த அத்தியாயத்தில் இப்படிக் கூறுகின்றான்.

அனாதைப் பெண்களைத் திருமணம் செய்து அவர்களிடம் நியாயமாக நடக்க

> **“ஒரு பெண்ணை திருமணம் செய்துகொள்வது என்பது ஓர் உணவு. பலதாரமணம் ஒரு மருந்து. திருமணந்தான் மனித இனத்தின் இனப் பெருக்கத்திற்கு வகை செய்வது. அதில் நோய் வந்தால் மருந்தாகப் பயன்படுகின்றது.”**

முடியாது என பயந்தீர்களானால், உங்களுக்குப் பிடித்தமான பெண்களை இரண்டிரண்டாகவோ,மும்மூன்றாகவோ, நன்நான்காகவோ மணந்து கொள்ளுங்கள். ஆனால் நீங்கள் இவர்களிடையே நியாயமாக நடக்க முடியாது என்று பயந்தால் (ஒரு பெண்ணையே மணந்து கொள்ளுங்கள். அல்லது உங்கள் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்ட, அடிமைப் பெண்ணானவளைக் கொண்டு போதுமாக்கிக் கொள்ளுங்கள். இதுவே நீங்கள் அநீதி செய்யாமலிருப்பதற்கு நெருக்கமான வழியாகும். (அல் குர்ஆன் 4:3)

நீங்கள் மணம் செய்துகொண்ட, பெண்களுக்கு அவர்களுடைய மஹரை திருமண பணத்தை மகிழ்வோடு கொடுத்துவிடுங்கள். அதிலிருந்து ஏதேனும் ஒன்றை மனமுவந்து அவர்கள் உங்களுக்குக் கொடுத்தால், அதைத் தாராளமாக மகிழ்வுடன் புசியுங்கள். (அல்குர்ஆன் 4 : 4)

இதிலிருந்து என்ன தெரிகின்றது, ஒழுக்கம் பேணிடும் ஒரு தேவையை நிறைவு செய்திட இஸ்லாம் ஓர் அனுமதியை வழங்குகின்றது அவ்வளவுதான்,அல்லாமல் அது கடமையல்ல. ஒரு பெண்ணை திருமணம் செய்துகொள்வது என்பது ஓர் உணவு. பலதாரமணம் ஒரு மருந்து. திருமணந்தான் மனித இனத்தின் இனப் பெருக்கத்திற்கு வகை செய்வது. அதில் நோய் வந்தால் மருந்தாகப் பயன்படுகின்றது.

மேலைநாடுகள் பலதாரமணத்தை அனுமதித்திருந்தால் அவர்கள் நாட்டில் அபலைப் பெண்கள் இவ்வளவு உருவாகியிருக்க மாட்டார்கள். இந்தப் பெண்கள் எல்லாம் குடும்பத்தரசிகளாக, குதூகலமாக குடும்பம் நடத்திக் கொண்டிருந்திருப்பார்கள். நல்ல தொரு சமுதாயத்தை நாட்டுக்குத் தந்திருப் பார்கள். விபச்சாரத்தையும், ஒழுக்கக் கேடு களையும் வேரோடும் மண்ணோடும் கெல்லி எறிந்திருக்கலாம்.

மேலைநாட்டு சமுதாயங்கள், ஒழுக்கக் கேடுகளால் குறிப்பாக திருமணமானவர்கள் செய்யும் ஒழுக்கக் கேடுகளிலிருந்து சமுதாயத்தைக் காப்பாற்றிட பலதார மணத்தை அனுமதியுங்கள் என்றார் மேலைநாட்டு பிரசித்திப் பெற்ற எழுத்தாளர் பெர்னாட்ஷா. இன்னொரு எழுத்தாளர் (J.E. Mc Farlane) ஜெ. இ. மிஃபார்லென் வரலாற்று சிறப்புமிக்க ஆய்வு ஒன்றை நூலாகத் தந்தார்.

அவர் கூறினார் :

பலதாரமணம் என்பதை சமுதாய அளவிலும், ஒழுக்கங்களின் அடிப்படை யிலும், மத அடிப்படையிலும் சீர்தூக்கிப் பார்த்தால் பலதாரமணம், நாகரீகங்களின், தரமிக்க சமுதாயங்களின் பழக்கங்களில் ஒன்றாகவே இருந்திருக்கின்றது. தரத்தில் மிகுந்த ஒரு சமுதாயப் பழக்கமே! பலதார மணம், மேலைநாட்டு சமுதாயம் எதிர் நோக்கிடும் பல பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையும். இன்று மேலை நாட்டுப் பெண்கள் பலர் கையறு நிலையில் வாழ்ந்து கொண்டிருக் கின்றார்கள். அதற்காக நாம் மாற்று வழிகளைக் கண்டிடவில்லை. அது விபச்சாரத்தை வளர்த்து விட்டிருக்கின்றது. வைப்பாட்டி முறை வழக்கில் வந்திருக்கின்றது. பலருக்கு திருமண மாகாமலே இளமை கழிந்து விடுகின்றது.

(ஆதாரம் : J. E. Mc Farlane : In this case for poligamy or the case against The System of Monogamous Marriage.)

சுருக்கமாகச் சொன்னால், பலவீனமான பெண்களின் வாழ்வுக்கு வழிவகுக்கும் ஓர் சிறந்த ஏற்பாடே பலதாரமணம்.

பலதாரமணம் - விவாதம் தொடரும்.. இன்ஷா அல்லாஹ்!

**எம்.ஜி.எம்.**



தொடர்



# உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும், வீழ்ச்சியும்


**நீதிமன்ற அவமதிப்பு வழக்கு, உலக நீதி மன்றங்களில் நடந்து கொண்டிருப்பதென்ன?**

*ஆங்கிலம்:*

**திரு.பிரஷாந்த் பூஷன்,**

*மூத்த வழக்கறிஞர்,உச்சநீதிமன்றம்.*

**தமிழ் வடிவம்:**

**மு.குலாம் முஹம்மது,**

*ஆசிரியர்.வைகறை வெளிச்சம்.*


அன்பார்ந்த வாசகர்களே, உச்சநீதிமன்றத்தின் வீழ்ச்சிகள் சிலவற்றை இந்தியாவின் மூத்த வழக்கறிஞர்களில் ஒருவரான பிரசாந்த் பூஷன் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

இதை வைத்துக்கொண்டு நமது உச்ச நீதிமன்றம் ; அவர்மீது நீதிமன்ற அவதூறு வழக்கு ஒன்றைத் தானாக முன்வந்து பதிவுசெய்தது. அதற்கு அவர் ஒரு விளக்கத்தை அறிக்கையாக தாக்கல் செய்தார். அதில் பல விஷயங்கள், விபரங்கள், விளக்கங்கள் இவற்றைப் பாமரர்களும் பெறமுடியும்.

அத்தோடு, இது நம் நாட்டின் தற்கால நீதிமன்ற வரலாற்றையும் (Contemporary History of the Judiciary)- அறிந்திட இயலும். அதனால் அதனை, அதாவது பிரசாந்த் பூஷன் அவர்களின் அறிக்கையை தமிழில் தந்து கொண்டிருக்கின்றோம்.

இப்போது இந்தத் தொடரில் நீதிமன்ற அவமதிப்பு, எப்போது வருகின்றது? அந்த நீதிமன்ற அவமதிப்பின் உண்மையான பொருள் என்ன? என்பதைப் பார்த்து வருகின்றோம். அதன் தொடர்ச்சியே சில இங்கே இடம் பெறுகின்றது.

**நீதிபதி A.P.ஷா முன்னாள் தலைமை நீதிபதி, டெல்லி உயர்நீதிமன்றம்**

நமது உச்ச நீதிமன்றம் இந்த, இன்றைய பாசிச ஆட்சிக்குத் தாளம் போட்டுக் கொண்டிருந்த போது, அதனை தன்னுடைய பல்வேறு உரைகள், எழுத்துக்கள் வழி தைரியமாக விமர்சித்தவர். அவருடைய உரைகள் ஒன்றின் தலைப்பு தான் "உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும்."

அவர் நீதிமன்ற அவமதிப்புக் குறித்து இப்படிக் கூறுகின்றார். அவருடைய கருத்துப்படி, நீதிபதிகள் தங்கள் தவறுகளை மறைத்திட நீதிமன்ற அவமதிப்பை அவசர அவசரமாக எடுக்கின்றார்கள். அவர்கள் நீதிமன்ற அவமதிப்புகள் வழி தங்கள் கண்ணியத்தைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என எண்ணு கின்றார்கள். அதன்மூலம், தங்களுக்கு எதிராக வரும் எதிர்ப்புகளையும் அடக்கிவிடலாம் எனக் கருதுகின்றார்கள். இது சரியான பாதை அல்ல என்கின்றார்.

நாட்டில் மக்கள் எல்லாம் நல்ல தீர்ப்பை எதிர்பார்க்கும் அவசர வழக்குகள் பல உச்சநீதிமன்றத்தில் கிடப்பில் கிடக்கின்றன. அதில் மிகவும் முக்கியமானவை, அவை யெல்லாம் அரசியல் சாசனத்தோடு நேரடியாகத் தொடர்புடையவை. அவற்றுள்

முக்கியமானவை CAA என்ற குடியுரிமை திருத்தச் சட்டம், “Election Fundraising” என்ற தேர்தலுக்காக நிதி திரட்டிடும் விவகாரம் (இதில் பெரும் தொகை ஒன்றை பாரதீய ஜனதா கட்சி மட்டும் நிதியாகக், கடனாகப் பெற்றுள்ளது) காஷ்மீரின் தனி அந்தஸ்தை, இரத்து செய்த விவகாரத்தில் தொடரப்பட்ட அடிப்படை வழக்குகள். அதைத் தொடர்ந்து அங்கே காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சம்பந்தமாக தொடரப்பட்ட ஆட்கொணர்வு மனுக்கள். இன்றைக்கு இந்தியா எதிர்நோக்கி வரும் பேரழிவிலிருந்து இந்தியாவைக் காப்பாற்றிட அவசரமாக எடுத்திட வேண்டிய அநேக வழக்குகள், உச்சநீதிமன்றத்தில் கிடப்பில் கிடக்கின்றன. அவற்றையெல்லாம் புறந்தள்ளி விட்டு, தாங்கள் செய்ய வேண்டியதை எடுத்துச் சொன்னவர் மீது, அவதூறு வழக்கு ஒன்றை விரைந்து ஜோடித்திருக்கின்றார்கள்.

அதற்கு அவருடைய இரண்டு ட்விட்டர் பதிவுகளைப் பயன்படுத்தி இருக்கின்றார்கள். என்னைப் பொருத்தவரை, ஒரு ஜனநாயக நாட்டில் “நீதிமன்ற அவமதிப்பு” என்றொரு விதியே இருக்கக்கூடாது. நீதிமன்ற அவமதிப்பு என்பதும், பேச்சு சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம் என்பவை ஒரே நேரத்தில் இருக்க வியலாது. ஏனெனில் நம் நாட்டில் பேச்சுச் சுதந்திரமும், சிந்தனைச் சுதந்திரமும் அடிப்படை உரிமைகள் என அறிவிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இதுபோன்றவர்கள் அதாவது பிரசாந்த் பூஷன் போன்றவர்கள் “ட்விட்டரில்” பதிவு செய்தவற்றைத் தாராளமாகத் தண்டிக்க முன்வருவது, அதற்காகத் தாராளமாக தானாக முன்வந்து "Suo moto" வழக்காக மாற்றும் அதிகாரத்தைப் பயன் படுத்துவது எல்லாம் வரம்பு மீறிய செயல். அதற்காக நீதிமன்றத்தின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிடுவார்கள் எனச் சொல்வது எல்லாம் அபரிமிதமான அக்கறைகள். அவசியமில்லாதவை!

இதெல்லாம் எதைக் காட்டுகின்றது என்றால், உச்ச நீதிமன்றம் தன்னை விமர்சிப்பவர்களைத் தாங்கிக் கொள்ளாது என்பதையே! எவ்வளவு தான் ஆதாரமிருந்தாலும், எவ்வளவு பெரிய சமூக ஆர்வலராக இருந்தாலும் தன்னை யாரும் சரி செய்திட முன்வரக்கூடாது என்பதையே உச்சநீதிமன்றம் இந்த வழக்கின் மூலம் வலியுறுத்துகின்றது.

**இதில் அதாவது இப்படி நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விரைந்து எடுத்ததன் மூலம், உச்சநீதிமன்றமும், அதிகாரவர்க்கமும் ஒன்றுதான் எனப் பிரகடனப்படுத்துகின்றது.**

ஆதாரம் : “தி இந்து” ஆங்கில நாளிதழில், 27 ஜூலை 2020 டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதி (ஓய்வு) A.P.ஷா அவர்கள் எழுதிய : The Chilling Effect of Criminal Contempt என்ற கட்டுரையின் பகுதிகள், உச்ச நீதிமன்றத்தின் பார்வைக்காக பின் இணைப்பு C(248-250) எனத்தரப் பட்டுள்ளது.

-இந்தத் தொடர் மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் அவர்கள் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கையின் தமிழாக்கம்.

-தொடரும்.. இன்ஷா அல்லாஹ்!

**- MGM.**






# பெற்றோர்களின் பாதுகாப்பு

# முதியோர் பாதுகாப்புச் சட்டம்

ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த தாய், தந்தை இருவரும் அக்குழந்தைக்குத் தேவையான அனைத்தையும் செய்கின்றனர். நாம் குழந்தையை உள்ளங்கையில் வைத்துத் தாங்கியதுபோல,பிள்ளைகள் எதிர்காலத்தில் நம்மைத் தாங்குவார்கள் என்று நம்புகின்றனர். ஆனால்,பெற்றோரின் இயலாக் காலத்தில் பிள்ளைகள் அவர்களைப் பாதுகாக்காமல் இருந்துவிடுகின்றனர்.

இப்படி நிராதரவாக நிற்கும் முதியோருக்கு உதவ, 2007ஆம் ஆண்டு மத்திய அரசு சட்டம் ஒன்றை இயற்றியது. இப்படி சட்டம் கொண்டுவந்துதான் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமையை பிள்ளைகளுக்கு உணர்த்த வேண்டுமா என்று அப்போது கேள்விகள் எழுந்தன. என்றாலும், இது காலத்தின் கட்டாயமானது.

இதன்படி, முதியோர்களைக் கைவிடும் மகன்கள்,மகள்களுக்கு மூன்று மாத சிறை தண்டனை அல்லது ஐந்தாயிரம் ரூபாய் அபராதம் அல்லது இரண்டுமே தண்டனையாகக் கொடுக்கப்படும். 2019ம் ஆண்டு இந்தச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. மகன்கள், மகள்கள் மட்டுமல்லாமல் மருமகன், மருமகள் உட்பட இவர்களின் சொத்துக்களில் பங்குபெறும் யார் முதியோரை பராமரிக்காமல் கைவிட்டாலும், அவர்களுக்கு ஆறு மாத சிறைத் தண்டனையும், பத்தாயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும். இந்த மாற்றங்களால் முதியோருக்கு சாதகமா? பாதகமா?

முதியோருக்கு சாதகமே!

60 வயது தாண்டிய மூத்த குடிமக்கள் அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலில் இரண்டாவதாக நம் நாடு உள்ளது. “2050 ஆம் ஆண்டில் இந்தியாவில் ஐந்தில் ஒருவர் 60 வயது தாண்டியவராக இருப்பார்” என்கிறது ஒரு கணக்கெடுப்பு.

இந்நிலையில் “திருமணம் ஆன பிறகு பெற்றோரைப் புறக்கணித்துவிட்டு தனிக்குடித்தனம் சென்றால், இச்சட்டம் பாயும்” என்பது ஓரளவுக்கு பெற்றோருக்குச் சாதகமே. வயது

முதிர்ந்த பெற்றோர்களை முதியோர் இல்லங்களில் சேர்ப்பதை இச்சட்டத்தின் மூலம் ஓரளவு குறைக்க முடியும். சட்டத்துக்கு பயந்தே சில இளைஞர்கள் வேறுவழியின்றி தம் பெற்றோரை வீட்டில் வைத்துக் கொள்கின்றனர்.

செட்டில்மென்ட் பத்திரம் மற்றும் தானப் பத்திரத்தை ரத்து செய்ய இந்தப் பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு நலச் சட்டத்தில் வழி உள்ளது. துன்புறுத்தலாலோ அல்லது முன்யோசனை இல்லாமலோ வாரிசுகளுக்கு எழுதிக்கொடுத்த சொத்துக்களை மீண்டும் திரும்பப் பெறலாம் என்பதும் சாதகமான அம்சமே!

முதியோருக்கு பாதகமே!

குடும்பத்தின் கௌரவம் கருதியும், புறக்கணித்தாலும், பாசம் மாறாத நிலையிலும், தங்கள் பிள்ளைகள் மீது புகார் கொடுக்க பல முதியோர்கள் முன்வருவதில்லை. “பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு” என்ற பழமொழி உண்மைதான். பல குடும்பங்களில், பெற்றோர்கள் இப்படி புகார் செய்தால், அவர்களை அழைத்து வந்து வீட்டில் வைத்து அடைத்தும் கூட கொடுமை செய்ய நேரிடலாம்.

சட்டம் கொண்டுவரப்பட்டாலும்.., நடைமுறைக்கு வர சாத்தியம் குறைவாகவே உள்ளது. இதுபோன்ற சட்டங்கள் பற்றி விழிப்புணர்வும் மிகக்குறைவே!

எதிர்காலத்துக்காக என்ன செய்யலாம்?

இந்த சட்டம் முதியோருக்கு சாதகமா அல்லது பாதகமா என்பது அவரவர் குடும்பச் சூழலைப் பொறுத்தே அமையும். சட்டத்தால் சாதிக்க முடியாததை சாத்வீக முறையில் சாதிக்க முடியும்.

- “முதியோரைப் பாதுகாப்பது தங்கள் கடமை” என்பதை இளைய சமுதாயத்துக்கு உணர்த்த வேண்டும். இதற்குத் தகுந்த பருவம், பள்ளிப் பருவமே. ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 15ஆம் தேதி உலக முதியோர் வன்கொடுமை ஒழிப்பு விழிப்புணர்வு நாளாக அனுசரிக்கப்படுகிறது. டாக்டர் வி.எஸ்.நடராஜன் முதியோர் நல அறக் கட்டளை மூலம் அரசாணை பெற்று, தமிழகத்தில் அனைத்து பள்ளிகளிலும் கடந்த சில ஆண்டுகளாக இந்தநாளில் உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. ஆண்டுக்கு ஒருமுறை மட்டும் இதைச் செய்யாமல், மாதா மாதம் 15ம் தேதி செய்ய வேண்டும். இவர்கள் வளரும்போது முதியோரை நன்றாக கவனித்துக் கொள்வார்கள் என்பது உறுதி.
- முதியோர்களின் நன்மதிப்புகளைப் பற்றி பள்ளிப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்
- பெரியோர்களின் நற்பண்புகளைப் பற்றியும் ,அவர்களை இளைய சமுதாயத்தினர் பாதுகாப்பது பற்றியும் சுவாரசியமான குறும்படங்கள் வெளியிடப்பட வேண்டும். இந்தப் படங்களை அரசு நடத்தும் தொலைக் காட்சியில் அடிக்கடி ஒளிபரப்ப வேண்டும்.

இப்படி தொடர்ந்து செய்து வந்தால், வருங்கால சமுதாயம் முதியோரை மதிப்பதாக உருவாகும். அந்தக் காலம் கனியும் வரை சற்று பொறுத்திருப்போம்!

இஸ்லாத்தின் வழிகாட்டுதல்கள்

இத்தனை சட்டங்கள் வந்தாலும், முதியோர் இல்லங்களும் பெருகிக் கொண்டேதான் இருக்கின்றன.

குடும்பங்கள் குலைந்து போனதற்கு நாம் மெல்ல மெல்ல மேலை நாட்டுக் கலாச்சாரங்களில் வீழ்ந்ததே காரணம். ஆனால் இஸ்லாமியக் குடும்ப அமைப்பு வேறொரு அடிப்படையில் அமைந்தது. அங்கே முதியோர்களைப் பாதுகாப்பதை குழந்தைகள், தங்களுக்குக் கிடைத்த, கிடைத்ததற்கரிய பேறாகக் கருதினார்கள். இஸ்லாமிய குடும்ப அமைப்பைக் கட்டி எழுப்பிய அல்லாஹ் அதற்கான அடிப்படையை இப்படி அமைத்தான்;

> அவனையன்றி (அல்லாஹ்வையன்றி) வேறு எவரையும் நீர் வணங்கலாகாது என்றும், பெற்றோருக்கு நன்மை செய்ய வேண்டும் என்றும், உம்முடைய இறைவன் விதித்திருக்கின்றான். அவ்விருவரில் ஒருவரோ அல்லது இருவருமோ முதுமை அடைந்துவிட்டால்,

அவர்களை (உஃச்,சீ என்று சடைந்தும் சொல்ல வேண்டாம். அவ்விருவரையும் உம்மிடமிருந்து விரட்ட வேண்டாம். இன்னும் அவ்விருவரிடமும் கனிவான, கண்ணியமான பேச்சையே பேசுவீராக.

இன்னும் இரக்கம் கொண்டு, பரிவு என்னும் இறக்கையை அவ்விருவருக் காகவும், நீர் தாழ்த்துவீராக, மேலும் "என் இறைவனே, நான் சிறுபிள்ளையாக இருந்தபோது, என்னைப் பரிவோடு அவ்விருவரும் வளர்த்ததுபோல், நீயும் அவர்கள் இருவருக்கும் கிருபை செய்வாயாக!" என்று பிரார்த்திப்பீராக". (அல்குர்ஆன் 17 :23,24)

அல்லாஹ்வின் வழிகாட்டுதல்களின் கீழ் இந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்பிய இறைவனின், இறுதித்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நபித்தோழர் ஹழரத் அபூ ஹுரைரா(ரழி) அவர்கள்,

நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள், ஒருவன் தன்னைப் பெற்றவர்களில் இருவருமோ அல்லது ஒருவரோ தன்னிடமிருந்து, அவர்களுக்கு சேவை செய்து சொர்க்கத்தைப் பெற முடியாதவனை மூன்று முறை சபித்தார்கள். (முஸ்லிம் - நபிமொழி தொகுப்பு)

ஹழரத் அபூ உமாமா(ரழி) அவர்கள் கூறினார்கள் : நான் பெருமானார்(ஸல்) அவர்களிடம், குழந்தைகள் மீது பெற்றோரின் உரிமைகள் என்னவென்று கேட்டேன். அதற்கு பெருமானார்(ஸல்) அவர்கள், பெற்றோர்கள் தான் குழந்தைகளின் சொர்க்கமும் நரகமும் என பதில் சொன்னார்கள். (இப்னுமாஜா, மிஸ்காத்)

அதாவது பெற்றோர்களைப் பரிவோடும் அன்போடும் கவனித்தால், சொர்க்கம் கிடைக்கும். அதாவது பெற்றோர்களை கவனிப்பதன் மூலம், மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையில் சொர்க்கத்தை சம்பாதிக்கலாம். உரிய உயரிய முறையில் அவர்களை கவனிக்கத் தவறினால் நரகம்தான்.

ஹழரத் அப்துல்லாஹ் பின் அம்ர்(ரழி) அவர்கள் கூறினார்கள், பெருமானார்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : "அல்லாஹ்வின் திருப்தி என்பது, தந்தையின் திருப்தியிலிருக்கின்றது. அதேபோல் அல்லாஹ்வின் அதிருப்தி தந்தையின் அதிருப்தியிலிருக்கின்றது." (திர்மிதி, ஹாக்கிம் )

அபூஹுரைரா(ரழி) அவர்கள் கூறினார்கள்: நாங்கள் அண்ணல் நபி(ஸல்) அவர்களுடன் இருந்தோம். அப்போது ஒரு மனிதர் கேட்டார், "அல்லாஹ்வின் தூதரே! என் தாய், தந்தையர் இறந்துவிட்டபின் அவர்களுக்கு நன்மை யளிக்கக்கூடிய செயல் ஏதும் இருக்கிறதா? நான் அதை நிறைவேற்ற முடியுமா?." அதற்கு நபி (ஸல்)அவர்கள், அவ்விருவருக்காகவும், இறைஞ்சுவது மேலும் அவர்களை இறைவன் மன்னித்தருளவேண்டும் என வேண்டுவது. அவர்கள் செய்திருந்த ஒப்பந்தத்தை (வாக்குறுதி அல்லது மரண சாஸ்திரம்) போன்ற வற்றை நிறைவேற்றுவது. அவர்களுடைய நண்பர்கள், நெருங்கிப் பழகியவர்கள், அவ்விருவரின் வாயிலாக உமக்கு வாய்த்த ரத்த பந்தங்களுடன் இணைந்து வாழ்வது. (அதபுல் முஃப்ரக்)


சட்டங்கள் ஆயிரம் அமைத்தாலும், முதியோருக்கு வாழ்க்கையில் சாந்தியோ, சமாதானமோ ஏற்படுவதில்லை.

அபூஹுரைரா(ரழி) அவர்கள் கூறுகின்றார்கள், ஒருவர் பெருமானார்(ஸல்) அவர்களிடம் வந்தார். அவர், இறைவனின் தூதர் அவர்களே! என்னிடத்தில் சிறந்த பராமரிப்பிற்கு உரிமையுடையவர் யார்? பெருமானார்(ஸல்) அவர்கள் "உங்கள் தாய்" என்றார்கள். அவர் மீண்டும் கேட்டார் யார் யார்? பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள், "உங்களின் தாய்" அவர் மீண்டும் கேட்டார், அவருக்குப் பின் யார்? அவருக்குப்பின் உங்கள் தந்தை என்றார்கள். (புகாரி, கிதாபுல் அதாப்).

இந்தத் தாய், தந்தையர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களாக இருந்தாலும் இதே உரிமைகள் உண்டு. இந்த வழிகாட்டுதல்களால், வழிகாட்டப்பட்டதால்தான் இஸ்லாமிய சமுதாய அமைப்பில் முதியோர் இல்லங்கள் தேவை இல்லை என்றானது.

பிற்றை நாட்களில் ஐரோப்பாவில் இந்த முதியோர் இல்லங்கள் தொடங்கப் பெற்ற போது இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள், அதனை மனித இனத்தின் அவமானச் சின்னங்கள் என விமர்சித்தார்கள்.

**MGM**




# பிராமினிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

## எஸ்.எம்.முஷ்ரிப்

**சென்ற இதழின் தொடர்ச்சி......**

**குற்றவாளி தயானந்த் பாட்டீலுடைய வாக்குமூலத்தை பார்ப்போமா!**

'சம்பவம் நடந்த அன்று மாலை 7:30 மணி இருக்கும். நான் கடையை மூடிவிட்டு பல்கந்தர்வா சவ்க் (இவனுடைய பையிலிருந்து குண்டு வெடித்த இடம்) தாண்டி புனே மாநகராட்சி பேருந்து நிறுத்தத்தை நோக்கி சென்று கொண்டிருந்தேன். 500 மீட்டர் முன்னால் அன்னா ஹசாரேயின் 'ஊழலுக்கு எதிரான இந்தியா' பொதுக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. அதை கேட்கலாம் என்று காலி டிபன் பையை சுவரோரமாக சாய்த்து வைத்து விட்டு 5லிருந்து 7 நிமிடம் வரை பேச்சை கேட்டுக் கொண்டிருந்தேன்.' (ஆதாரம்: புனே மிர்ரர், 2 ஆகஸ்ட் 2012)

இவன் (குற்றவாளி தயானந்த் பாட்டீல்) ஒவ்வொரு முறையும் வெவ்வேறு வாக்கு மூலங்களை அளித்துள்ளான். ஒரு முறை, 'யாரோ என்னுடைய காலி டிபன் உள்ள பைக்குள் குண்டுகளை வைத்திருப்பார்கள்' என்றான்.

இன்னொரு முறை, 'என்னுடைய பைக்கு பதிலாக வேறொரு பையை எடுத்து வந்துவிட்டேன்.' கடைசியாக, 'நான் எப்பொழுதுமே பிளாஸ்டிக் பை தான் எடுத்து வருவேன். அன்றைய தினம் துணிப்பை எடுத்து வந்ததால் கனமாக இருந்தது.

கனமாக இருக்கிறதே என்று திறந்து பார்த்தேன். அதற்குள் வெடித்துவிட்டது' என்றான். (தி டைம்ஸ் ஆப் இந்தியா 2, ஆகஸ்ட் 2012, புனே மிர்ரர் 2, ஆகஸ்ட் 2012)

இவன் கடைசியாக சொன்னது உண்மையாக இருக்குமேயானால் இவனுடைய முகம் சிதைந்திருக்கும். ஆனால் குண்டு வெடிப்பு நடந்தவுடன் இவனை புகைப்படம் எடுத்த அனைத்து செய்தித்தாள்களிலும் இவனுடைய முகத்தில் காயமோ அல்லது ரத்தத் துளிகளோ இல்லை. இவனுக்கு சிகிச்சையளித்த சசூன் பொது மருத்துவமனை டாக்டர்களின் கூற்றுப்படி, வயிற்றின் கீழ் பகுதியிலும் கன்னத்திலும் ஒரு சதைத்துண்டு கிழிந்திருந்தது. இடது கண் புருவத்தில் சிறிய தீக்காயம் இருந்தது.கையில் வைத்திருந்த பையில் குண்டுவெடித்தால் மட்டுமே இதுபோன்ற சதைச் சிதறல்கள் இருக்கும் என்கிறார்கள் இவனை பரிசோதித்த டாக்டர்கள். (ஆதாரம்: தி டைம்ஸ் ஆ/ப் இந்தியா, 3, ஆகஸ்ட் 2012)

தயானந்த் பாட்டீலுடைய வாக்குமூலத்தில் ஏகப்பட்ட முரண்பாடுகள். ஆனால் 48 மணி நேரத்திற்குள்ளாக சந்தேகத்திற்குரிய முஸ்லிமல்லாத ஒருவனை காவல்துறை கையும் களவுமாக பிடித்தது இவனைத்தான். மிக மிக ஆச்சர்யமான விஷயமென்ன வென்றால், சிறிய காயங்களே உள்ள போதும் இவனை 7 நாட்கள் மருத்துவ மனையில் வைத்திருந்தனர் போலீஸார். அதுவும் இவனுடைய வார்டை சுற்றி துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு. யாரையும் எட்டிப் பார்க்கக்கூட அனுமதிக்க வில்லை.

இரண்டு போலீஸ் வாகனங்கள் மருத்துவ மனை வளாகத்திற்குள் எப்போதும் இருந்தன. இதுபற்றி பத்திரிக்கையாளர்கள் மருத்துவமனையை அணுகியபோது, அவனை உடனே அனுப்பியிருப்போம் ஆனால், போலீஸாரின் அறிவுறுத்தலின் பேரில் தான் வைத்திருக்கின்றோம் என்றனர் மருத்துவமனை ஊழியர்கள். இது சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியது.

இதன்பிறகு தயானந்த் பாட்டீல் மற்றும் அவருடைய குடும்பத்தைப் பற்றிய தகவல்கள் பல மாதங்களாக அறியப்படவில்லை. ஒரு வேளை அவர்கள் புனேவிலோ அல்லது உருளிகஞ்சான் அல்லது பூர்வீக ஊரான பீடாரில் இருந்திருக்கலாம்! அவர்களைப் பற்றிய தகவல்கள் போலீஸார் மட்டுமே கொடுத்திருக்க இயலும்.

ஆனால் அவர்கள் தரவில்லை. கிட்டத்தட்ட பத்து மாதங்களுக்குப் பிறகு, மே மாதம் 2013ம் ஆண்டு செய்தித்தாளில் ஜனகலி மகாராஜ் குண்டுவெடிப்பு வழக்கில் ஒரு சாட்சியாக இவனின் பெயர் இடம்பெறுகிறது எப்படியெனில் 'இவன் தெரியாமல் குண்டுகள் இருந்த கைப்பையை எடுத்துவிட்டதாக வழக்கில் சேர்க்கப் பட்டுள்ளது'!

மேற்படி வழக்கை புலனாய்வு செய்த 'பிரசித்தி பெற்ற டெல்லி காவல்துறையின் சிறப்புப் பிரிவு, நந்தேத்தைச் சேர்ந்த இம்ரான்கான் வாஜித்பதான், மாற்றுத் திறனாளி இர்பான், அஹ்மத் நகரைச் சேர்ந்த அஸ்லம் ஷேக் என்ற பாண்டி ஜாகிர்தார், ஆசத்கான், அவ்ரங்காபாத்தைச் சேர்ந்த சையத் ஆரிப் என்ற காஷிப் சையத் ஜபருத்தீன் பியாபானி, / பைரோஸ் என்ற ஹம்ஜா அப்துல் ஹமீத் சையத், முபீன் மேமன் மற்றும் புனேயைச் சேர்ந்த பாரூக் பக்வான் ஆகிய எட்டு பேரையும் கைது செய்ததாகவும் செய்தித்தாளில் செய்தி வந்திருந்தது. இது மட்டுமில்லையாம்!

மேற்படி வழக்கில் இந்தியன் முஜாஹிதீன் அமைப்பைச் சேர்ந்த ரியாஸ் மற்றும் இக்பால் பட்கல் இவர்களுக்கு உதவியாக இருந்த ஷாகிர் என்ற அஸதுல்லா அக்தர் மற்றும் அஹ்மத் என்ற வகாஸ் மேலும் லஷ்கர் இ தொய்பா அமைப்பைச் சேர்ந்த பயாஸ் காக்ஜி போன்றோர் தேடப்படும் குற்றவாளிகளாவும் அந்த செய்தித்தாளில் குறிப்பிடப்பட்டிருந்தது தான் அதிசயம். (தி இந்தியன் எக்ஸ்பிரஸ் (புனே) 28, மே 2013.

போலீஸார் தங்களது திறமையால் 'ஒப்புதல் வாக்குமூலம்' மற்றும் 'கைப்பற்றப்பட்ட

வெடி பொருட்கள்' என்ற வழக்கமான முறையை கைது செய்தவர்கள் மீது திணித்து இவர்களை குற்றவாளியாக்கியது அப்பட்டமாகத் தெரிகிறது.

எள்ளளவும் அறிவியல் ஆதாரங்களோ அல்லது மறுக்க முடியாத ஆதாரங்களோ சமர்ப்பிக்கப்படவில்லை.

குண்டு வெடிப்பு நடந்த ஜன்கலி மஹாராஜ் சாலை வியாபாரம் அதிகமாக புழங்கும் ஓர் இடம். குண்டுவெடிப்பு நடந்த பகுதிகளை சுற்றி கிட்டத்தட்ட 100 சிசிடிவி கேமராக்கள் அப்பகுதியில் உள்ளன. குண்டு வெடிப்பிற்கு பயன்படுத்தப்பட்ட மிதிவண்டி வாங்கிய இடமான கணேஷ் சாலையிலும், ஜன்கலி மஹாராஜ் சாலையிலும் இருக்கும் பல சிசிடிவி கேமராக்கள் காவல் துறையால் பார்வையிடப்பட்டன. சந்தேகப்படும் நபரின் நடவடிக்கைகள் அடங்கிய பதிவுகள் காவல்துறையால் கைப்பற்றப்பட்டன. (The Times of India Pune 7 & 8 August 2012 and Pune Mirror (TOI publication) 8 August 2012)

இந்த பதிவுகள் குற்றவாளி யார் என்பதை துல்லியமாக காட்டி இருக்கும். ஆனால் ஒரு சிசிடிவி பதிவுகள் கூட சமர்ப்பிக்கப்படவில்லை. ஏனெனில் குற்றப்பத்திரிக்கையில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் உண்மையான குற்றவாளி அல்ல.

இந்த வழக்கை புலனாய்வு செய்த (ஐபி) மத்திய உளவுத் துறை, சிறப்புப் பிரிவு காவல்துறை மற்றும் தீவிரவாத தடுப்பு குழுவின் உண்மைத் தன்மையை குறித்து நீதிமன்றம் உட்பட ஒருவர் கூட கேள்வி எழுப்பவில்லை! அக்ஷர்தாம் வழக்கில் எவ்வாறு உச்சநீதிமன்றம் வரை சென்று கைது செய்யப்பட்டவர்கள் அப்பாவிகள், நிரபராதிகள் என்று விடுதலை செய்யப்பட்டனரோ அதே போன்று இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட அப்பாவிகளும் கிட்டத்தட்ட 8 முதல் 10 ஆண்டு வரை தங்களுடைய இளமையை சிறையில் கழித்த பிறகே நிரபராதிகள் என்று விடுவிக்கப்பட்டனர். ஆனால் உண்மையான குற்றவாளியான தயானந்த் பாட்டீல் மற்றும் அவனது கூட்டாளிகள் வழக்கிலிருந்து தப்பித்து விட்டனர்? யார் இவர்களை தண்டிப்பது?

இன்ஷா அல்லாஹ் தொடரும்...





இந்த புத்தகம் இரண்டு முக்கியமான விஷயங்கள் நம் ஜனநாயகத்திற்கு மிக மோசமான அச்சுறுத்தல்களாக இருப்பதை பற்றி பட்டயங்கூறுகிறது. ஒன்று ஐ.பி என்ற மத்திய உளவுத்துறையின் வானளாவிய அதிகாரம் மற்றொன்று ஐ.பி என்ற மத்திய உளவுத்துறைக்கும் தவறான அழிவுக் கொள்கைகளைக் கொண்ட வலது சாரி தீவிரவாத குழுக்களுக்கும் இடையிலான சாத்தானிய உறவு. இவை இரண்டும் தான் இப்புத்தகத்தின் முக்கிய நோக்கம்.

~~₹220~~ ₹150 தள்ளுபடி விலையில்!

80727 73868

Vergal Pathippagam



# தாய்ப்பாலே தன்னிகரற்ற சக்தி

## குழந்தை வளர்ப்பு - தொடர்.....

தாய்ப்பாலைக் குழந்தைகளுக்குத் தவறாமல் தாருங்கள் என வற்புறுத்திட வேண்டிய காலகட்டம் ஒன்று வந்துவிட்டது. காரணம், மேலை நாட்டு நாகரீகங்கள் எல்லோரையும் ஆட்கொண்டு விட்டன. இதில் ஜாதி, மத, நிற, நில வேறுபாடுகள் இல்லை.

இந்த மேலை நாட்டு மோகத்தில் சிக்கியவர்கள் பல சிக்கலான சிந்தனைகளுக்கு ஆட்பட்டு விட்டார்கள். இந்தச் சிந்தனைகளுள் சில,தாய் தன் பாலை குழந்தைகளுக்குத் தருவதால் அவளது அழகு அழிந்து போகும், முதுமை ஓடி வந்துவிடும் என்பனவாகும்.

இதனால் குழந்தைகளுக்கு புட்டிப்பாலையே புகட்டும் பழக்கம் புழக்கத்தில் வந்தது. இதற்குத் தகுந்தாற்போல் பல குழந்தைகளுக்கான உணவுகளும் கண்டுபிடிக்கப்பட்டு அங்காடிக்கு வந்தன. இந்த உணவுப் பொருள்களைத் தயாரிப்பவர்கள் விற்பனையை அதிகரிக்க அபார விளம்பரங்களை அள்ளிக் கொட்டினார்கள். இந்த விளம்பரங்கள் வழி அந்த உணவுப் பொருள்களை ஊட்டவில்லையென்றால் குழந்தைகள் வாழவே முடியாது என்றொரு பிரம்மையை ஏற்படுத்தினார்கள்.

இவர்கள் செய்த இடைவிடாத பிரச்சாரத்தால் ஒரு தலைமுறையில் பிறந்த குழந்தைகளுக்குத் தாய்ப்பால் பூரணமாகக் கிடைக்காமல் தடுத்தும்விட்டார்கள்.

ஒரு தலைமுறை இப்படி திசைமாறிப் போன பின், ஒரு பெரும் முயற்சி எடுக்கப்பட்டது. அதில் தாய்ப்பாலின் அருமை பெருமைகளைப் பற்றி மக்களிடையே பிரச்சாரம் செய்திட வேண்டிய நிலை வந்தது.

தாய்ப்பாலை ஊட்டித்தான் ஆகவேண்டும் என்று குழந்தையைப் பெற்றிடும் தாய்மார்களுக்கு உபதேசிக்க வேண்டிய அவலம் அவனியைத் தொற்றிக்கொண்டது. இந்தப் பின்னணியில் தாய்ப்பாலை பற்றிய சில தகவல்களை இங்கே தருகின்றோம்.

குழந்தை பிறந்தவுடன் இறைவனின் ஏற்பாடாய் அதற்காக சுரப்பதே தாய்ப்பால். தாய்ப்பால் தான் குழந்தை பிறந்தவுடன் அருந்தும், முதல் உணவு. இதுவே அதன் முக்கிய மூல உணவாகவும் அமைகிறது.

விஞ்ஞான ஆராய்ச்சி என்ற முத்திரையோடு வந்தால்தான் மக்கள் இப்போதெல்லாம் ஏற்றுக் கொள்கிறார்கள். அந்த ஆராய்ச்சியாளர்களே குழந்தைக்கு சிறந்த உணவு தாய்ப்பால்தான் என ஊர்ஜிதம் செய்கின்றனர்.

### தாய்ப்பால் தூய்மையானது

தாய்ப்பாலின் தூய்மை, வேறு எந்த உணவுக்கும் வராது. சுத்திகரிக்கப்பட்ட அல்லது தூய்மைப்படுத்தப்பட்ட சிறந்த உணவு தாய்ப்பால். மிகவும் எளிதாக ஜீரணமாகும் உணவும் இந்தத் தாய்ப்பால் தான். நோய் எதிர்ப்புச் சக்தியை நிரந்தரமாக குழந்தைக்குத் தருவதும் தாய்ப்பால்தான். இது மழலைப் பருவத்தில் மட்டுமல்ல ஆயுள் உள்ளவரை குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியைத் தருகிறது.

குழந்தை பிறப்பதற்கு முன் உண்டாகும் பால் - சீம்பால் - பல்வேறு தொற்று வியாதிகளிட மிருந்து குழந்தையைப் பாதுகாக்கின்றது என்கின்றனர் ஆய்வாளர்கள். கொலஸ்ட்ரம் என்ற இந்த சீம்பால், தாய் சாதாரணமாக ஊட்டும் பாலிலும் தாராளமாகக் கிடைக்கின்றது. இதில் கிடைக்கும் நோய் எதிர்ப்புசக்தி பல்வேறு வகையான நோய் களையும் தடுத்திடும் என்கின்றனர் ஆராய்ச் சியாளர்கள்.

Babies receive immunity to a variety of infections through the co - lostrum (the fluid that comes in before, the real milk) and through real the milk... (baby & child care)

தாய்ப்பால் அருந்தும் குழந்தைகளுக்கு குடல்புண் போன்றவை வர வாய்ப்பில்லை என்கின்றார்கள் மருத்துவர்கள். மேலைநாட்டுக் கலாச்சாரத்தில் மூழ்கிப்போன தாய் ஒருத்தி இப்படிக் குறிப்பிடுகின்றாள்:

தாய்ப்பாலின் மகிமையை நான் பயணம் செய்து கொண்டிருக்கும் போதுதான் உணரு கின்றேன். அங்கே புட்டிகளை சூடான தண்ணீரில் கழுவ வேண்டியதில்லை, எந்தெந்த பால் பவுடரை எந்தெந்த அளவில் கலந்திட வேண்டும் என்ற சிக்கல் இல்லை, குழந்தைகளும் தங்கள் சுண்டு விரலை சூப்பி தங்கள் இயல்பான உந்துதலைத் தணித்திட வேண்டியதில்லை. (டாக்டர் பெஞ்சமின் ஸ்போக் - In Baby and Child Care)

அமெரிக்காவில் ஏற்பட்ட சிந்தனை சிக்கலால் 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்கப் பெண்கள் குழந்தைகளுக்குப் பால் தருவதை நிறுத்தும் நிலைக்கு வந்துவிட்டார்கள். இந்தக் குழப்பம் இப்போது தெளிந்து பால் கொடுப்பவர்களின் எண்ணிக்கை பெருகி வருகின்றதாம். ஆனந்தப்படுகிறார்கள் அமெரிக்கர்கள்.

அமெரிக்கர்களுக்கு பித்தம் பிடிப்பதிலோ, சித்தம் கலங்குவதிலோ எந்தப் பிரச்சனையு மில்லை. ஆபத்து என்னவெனில் அவர்கள் தங்களுக்கேற்படும் குழப்பங்களை வெகு விரைவாக உலகமக்களுக்கு பரப்பி விடுகின்றார்கள். இவர்களுடைய முட்டாள் தனங்கள் சில ஆராய்ச்சி முடிவுகள் என்ற ஆதாரத்தோடு வருவதால் எல்லா நாட்டு மக்களும் ஏகமாய்ப் பலியாகி விடுகின்றார்கள்;

ஆனால் இப்போது அவர்களே, தாய்ப்பாலின் அருமைகளையும், பெருமைகளையும் உணர்ந்து தாய்ப்பாலூட்ட தொடங்கியுள்ளதால் உலக மக்களும் சற்று கலக்கம் தெளிந்து காணப்படுகின்றார்கள்.

தாய்மார்கள் இந்தப் பாலூட்டும் காலத்தில் தாங்கள் உட்கொள்ளும் உணவில் தனிக்கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் போதிய அளவு உணவையும் உட்கொள்ளவேண்டும். இந்தக் காலத்தில் உண்ணும் உணவின் அளவால் அவர்களின் எடை கூடுவதில்லை. அதனால் பருத்தும், கனத்தும் விடுவோம் எனக் கவலைப் பட வேண்டாம் என்று ஆர்வமூட்டுகின்றார்கள் மருத்துவர்கள்.

அந்தத் தாய் தான் வழக்கமாக பழக்கமாக்கிக் கொண்ட எல்லா உணவு வகைகளையும் உண்ணலாம். அதிக அளவில் மருந்துகளை உட் கொள்ளாமலிருப்பது நல்லது. ஏனெனில் சில மருந்துகள் தாய்ப்பால் வழி ஊடுருவும். குழந்தைகளின் பல், இருதய பாகங்களில் பாதிப்புகளை உண்டாக்கலாம்.

தாய்ப்பாலில் கால்சியம் என்ற சுண்ணாம்புச் சத்து மிகவும் அதிகமாக இருக்கின்றது. இஃது குழந்தையின் எலும்பு வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகின்றது. தாய் போதியளவு உணவை உட் கொள்ளவில்லை என்றால் சுரக்கும் பால் இந்தச் சுண்ணாம்புச் சத்தை அவளது எலும்பு களிலிருந்து எடுத்துக்கொள்ளும்.

இதனால் பாலூட்டும் தாய் போதிய அளவு உணவு உட்கொள்பவளாக இருக்க வேண்டும். இல்லையேல் பாலூட்டும் தாய் தனது பற்களிலுள்ள சுண்ணாம்புச் சத்தை இழக்க வேண்டியது வரும், பற்களில் பளபளப்பு

பாழ்படும். தாய் நிறைய பால் அருந்துவதன் மூலம் அவள் தனக்கும், தன் குழந்தைக்கும் வேண்டிய சுண்ணாம்புச் சத்தைப் பெறலாம்.

குழந்தை பிறந்தவுடன் பால் அடிக்கடி ஊட்டினால் பால் அதிகமாக சுரக்க வழிவகுக்கும். பால் கட்டுவதையும் தடுக்கும். குழந்தைக்குத் தேவைப்படும் போதெல்லாம் பாலூட்டலாம். எனினும் மருத்துவர்கள் இப்படியொரு கால அளவை பரிந்துரைக் கின்றார்கள். காலை 6 மணி, 9 மணி, 12 மணி, மாலை 3 மணி, 6 மணி, 10 மணி, அதிகாலை 2 மணி. ஆனால் எந்த மருத்துவரும் குழந்தையின் தேவைக்கேற்ப பாலூட்டுவதில் குறுக்கே நிற்கவில்லை.

குழந்தை வளர்ப்பில் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்ட டாக்டர் பெஞ்ஜமின் ஸ்போக் அவர்கள், "என்னுடைய அனுபவத்தில் பால் எவ்வப்போது ஊட்டப்பட வேண்டும் என்பதை குழந்தையே முடிவு செய்யட்டும் என விட்டு விடுவதே சிறந்தது, அதாவது குழந்தை அழும் போது அல்லது இதர சமிங்ஞைகள் வழி தெரிவிக்கும்போது பாலூட்ட வேண்டும்" என்கிறார். குறைந்த அளவு 2 மணி நேர இடை வேளைக்குள் பாலூட்டலாம்.

இறைவன் வழங்கிய அழகிய இயற்கையான உணவு தாய்ப்பால் அதனை தவறாமல் தகுந்த அளவில் குழந்தைகளுக்குத் தருவோம். இறைவன் இதில் இப்படி வழி காட்டுகின்றான்:

".....தாய்மார்கள் தங்களுடைய குழந்தை களுக்கு (அவர்கள் பிறந்ததிலிருந்து) இரண்டு ஆண்டுகள் வரை பூரணமாகப் பாலூட்டவும். (அல்குர்ஆன் 2 : 233)

இதனடிப்படையில் தாய்ப்பாலை பெறுவது குழந்தைகளின் அடிப்படை உரிமைகளுள் ஒன்று என்கிறார், இஸ்லாமிய அறிஞர் ஹமூத் அப்துல்அத்தி(ரஹ்). ஏதேனும் காரணங்களால் ஈன்றெடுத்தத் தாயால் பாலூட்ட இயலவில்லை யெனில் செவிலித் தாய்களைக் கொண்டு பாலூட்டலாம் என்கின்றது இஸ்லாம்.

நீங்கள் உங்களுடைய குழந்தைகளுக்கு செவிலித்தாய்களைக் கொண்டு பாலூட்டக் கருதி நீங்கள் கொடுக்க வேண்டியதைக் கிரம மாகக் கொடுத்துவிட்டால் (அவ்வாறு பாலூட்டுவது) உங்கள் மீது குற்றமாகாது. (அல்குர்ஆன் 2 : 233)

எப்படியேனும் குழந்தைக்குத் தாய்ப்பால் கிடைக்க வேண்டும் என்பதே குறிக்கோள். மகப்பேற்றின் மகிழ்ச்சிகளுள் ஒன்று பாலூட்டுவது. இப்படி தன் இரத்தத்தைப் பாலாய்த் தருவதால் அவளுக்கும், அவளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருவதால் தந்தைக்கும் நன்றியுடையவனாய் மனிதன் இருக்க வேண்டும் என்று பணிக்கின்றான். இறைவன்.

இறைவன் தன் இறைமறையில், இப்படிக் கூறுகின்றான்:

தமது தாய் தந்தைக்கு நன்றி செய்வது பற்றி மனிதனுக்கு நாம் நல்லுபதேசம் செய்தோம். அவனுடைய தாய், துன்பத்தின் மேல் துன்பத்தை அனுபவித்து (கர்ப்பத்தில்) அவனைச் சுமந்தாள். அவன் பிறந்த பிறகும் இரண்டு வருடங்களுக்குப் பின்னரே அவனுக்குப் பால் மறக்கடித்தாள். ஆகவே மனிதனே நீ எனக்கும் (அல்லாஹ்வுக்கும்), உன்னுடைய தாய்,தந்தையருக்கும் நன்றி செலுத்தி வா. முடிவில் நீ என்னிடமே வந்து சேர வேண்டியதிருக்கின்றது. (அல்குர்ஆன் 31:14)

குழந்தைகளின் இந்த அடிப்படை உரிமையை நிறைவேற்றிடுவதில் அரசுக்கும் பொறுப்புண்டு. கலீபா உமர்(ரலி) அவர்கள் தங்களது ஆட்சிக் காலத்தில் பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் பைத்துல்மாலில் உரிமை உண்டு என அறிவித்தது இங்கு நினைவு கூறத்தக்கது.

பாலூட்டும் காலங்களில் தாயை ஆவேசப் படுத்தும் அல்லது நரம்பு தளர்ச்சிகளுக்கு ஆளாக்கும் நிலையை யாரும் உருவாக்கிடக் கூடாது. காரணம் இது தாய்ப்பாலை வற்றிடச் செய்யும். இது தந்தை கவனிக்க வேண்டியது.

வல்ல அல்லாஹ் அனைவருக்கும் நல்வழி காட்டுவானாக!

உதவிய நூல்கள்:

திருக்குர்ஆன்.

THE FAMILY STRUCTURE IN ISLAM,
BY HAMMUDAH ABDALATI

BABY AND CHILD CARE,
DR. BENJAMIN SPOCK

**-MGM**


அல்-கைராவான் மருத்துவமனையின் இப்போதைய தோற்றம்


அல்-மன்சூரி மருத்துமனையின் வெளிப்புறத் தோற்ற வரைபடம்

# மருத்துவமனைகள்

## அல்-கைராவான் மருத்துவமனை

ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த அல்-கைராவான் மருத்துவமனை, பார்வையாளர் களுக்கான காத்திருப்பு அறைகள், பெண் செவிலியர்கள், நோயாளிகள் பிரார்த்தனை மற்றும் படிப்பதற்காக ஒரு மசூதி, வழக்கமான மருத்துவர்கள் உட்பட நன்கு ஒழுங்கமைக்கப் பட்ட அரங்குகளைக் கொண்ட ஒரு அதிநவீன மருத்துவமனையாக இருந்தது.

இந்த மருத்துவமனை, முறிந்த எலும்பு அமைப்புகளை ஒழுங்குப்படுத்துதில் சிறப்பு வாய்ந்ததாக இருந்தது. மற்ற இடங்களில் தொழுநோய், தீமையின் அறிகுறியாகக் கருதப்பட்ட நேரத்தில், அல்-கைராவான் மருத்துவமனைக்கு அருகில் தொழுநோயாளி களுக்கான சிறப்பு வார்டு இருந்தது.

இந்த மருத்துவமனை இஸ்லாமிய அரசின் பொது நிதியிலிருந்து நிர்வகிக்கப்பட்டது. மேலும் மருத்துவமனையின் சேவைகளை அதிகரிக்க தாராளமாக வழங்கிய பிற நபர்களின் முயற்சியாலும் சிறந்த முறையிலான சிகிச்சைகள் அளிக்கப்பட்டது.

## அல்-மன்சூரி மருத்துவமனை

அல்-மன்சூரி மருத்துவமனை நான்கு நுழைவாயில்களுடன் கட்டப்பட்டது. ஒவ்வொன்றின் மையத்திலும் ஒரு நீரூற்றைக் கொண்டது. சுல்தான் கலாவுன், தினமும் மருத்துவர்களைக் கொண்டு முறையாகப் பணிக்கு வருவதையும், நோய்வாய்ப் பட்டவர்களைக் கவனிக்கிறார்களா? என்பதை முழுமையாக உறுதி செய்தார்.


தனித்தனி வார்டுகளில் தங்க வைக்கப் பட்டிருந்த நோயாளிகளுக்கு சேவை செய்ய ஆண் மற்றும் பெண் உதவியாளர்களை நியமித்தார். படுக்கைகளில் மெத்தைகள் இருந்தன. சிறப்புப் பகுதிகள் தனியாக பராமரிக்கப்பட்டன. மருத்துவமனையின் அனைத்து பகுதிகளிலும் குடிநீர் வசதி செய்யப்பட்டது.

கட்டிடத்தின் ஒரு பகுதியில் தலைமை மருத்துவர் ஒருவருக்கு மருத்துவத்தை கற்பிப்பதற்கும், விரிவுரை செய்வதற்கும் ஒரு அறை வழங்கப்பட்டது.

சிகிச்சை பெறக் கூடிய நோயாளிகளின் எண்ணிக்கையில் எந்த கட்டுப்பாடுகளும் இல்லை, மேலும் மருத்துவமனைக் குள்ளேயே மருந்தகம் (Medical Shop) அமைக்கப்பட்டது. நோயாளிகள் வீட்டிற்கு எடுத்துச் செல்லக்கூடிய அளவிற்கு மருந்து களை வழங்கியது. **(Source: 1001 Invents.in)**

- ஃபாத்திமா பின்த் மாரிமுத்து

# NIA/UAPAக்கு எதிரான மக்கள் இயக்கம்



மாண்புமிகு திரு.

## மதன்.பி.லோக்கூர்

உச்சநீதிமன்ற நீதிபதி(ஓய்வு)

## அவர்களின் உரை

**சென்ற இதழின் தொடர்ச்சி...**

ஆக்ரா சிறையில் 12 ஆண்டுகளிலிருந்து 22 ஆண்டுகள் வரை சிறையில் அடைக்கப்பட்ட சில நபர்களைப் பற்றி முன்பே நான் குறிப்பிட்டேன். பல்வேறு காரணங்களால் பல ஆண்டுகள் சிறைப்படுத்தப்பட்ட பிறகு, அவர்கள் விடுதலை செய்யப்படுவது எனும் கேள்வி மாத்திரம் இங்கு இல்லை. குற்ற நீதிக்கான முழு நிகழ் முறையும் இங்கு கவனிக்கப்பட வேண்டும். முகமது பரூக்கி வழக்கில் கைது செய்யப்பட்டதில் இருந்து தொடங்கி, அகில் கோகாய் வழக்கில் குற்றச் சாட்டுகள் பதிவிடப்பட்டது வரையிலும், விசாரணை மற்றும் விடுதலை வரையிலும் அனைத்தும் பரிசீலிக்கப்பட வேண்டும்.இது மிகவும் முக்கியமானது. ஊபாச் சட்டம் மற்றும் அரசு விரோதச் சட்டம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்று கோருவது சரியானதுதான். ஆனால் அவை எங்கும் போகப்போவதில்லை என்று நான் நினைக்கிறேன். மேலும் தேசப்பாது காப்புச் சட்டம் மிஷிகி மிகவும் அடிக்கடி இனி மேல் பயன்படுத்தப்படப்போகிறது.

எனவே இத்தகைய சூழலை மக்கள் எப்படி எதிர்கொள்ளப் போகிறார்கள்? பொறுப்பேற்கும் தன்மைதான் இதற்கான ஒரே பதில். பொறுப்பேற்கும் தன்மை என்பது இரண்டு வடிவங் களில் இருக்க வேண்டும்.ஒன்று பொருளாதார ரீதியானது. இதன்படி போதுமான இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டும்.நம்பி நாராயணனுக்கு 50 இலட்சம் ரூபாய் கொடுக்கப் படும் என்றால், தவறாக கைது செய்யப்பட்ட, தவறாகச் சிறையில் அடைக்கப்பட்ட அனைவருக்கும் ஒரு நல்ல தொகையை இழப்பீடாக உறுதியாக வழங்க முடியும். ஏன் முடியாது?

காவல்துறையினர் அல்லது குற்றம் சாட்டுபவரிடம் நீங்கள் ஐந்து இலட்சம் ரூபாய் அல்லது 10 இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்று நீதிமன்றங்கள் சொல்லத் தொடங்கினால், அவர்கள் வழிக்கு வருவார்கள் என்றும், தேவையற்ற கைது நடவடிக்கைகளை மேற்கொள்ள மாட்டார்கள் என்றும் நான் கருதுகின்றேன். இது ஓர் அம்சமாகும்.

தான் நிரபராதி என நம்பக்கூடிய நபருக்கு மட்டுமல்ல, இறுதியில் நிரபராதி என மெய்பிக்கப் பட்ட நபருக்கும் ஏற்படும் மன அதிர்ச்சியை நாம் புறக்கணிக்கிறோம். அந்த நபர் அவர் செய்யாத செயலுக்காக அல்லது பொய்யான குற்றச்சாட்டுக் காகப் பற்பல ஆண்டுகள் சிறையில் இருப்பது குறித்துக் கடும் மன அதிர்ச்சிக்கு உள்ளாகிறார். அதைப்போலவே, மணிப்பூரைச் சார்ந்த செயல் பாட்டாளர் ஒருவரும் கோமூத்திரம் குறித்துச் சிலவற்றைச் சொன்னதற்காக அவர் மீது பயனற்ற குற்றச்சாட்டைச் சுமத்தித் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டதற்காக அவரும் அதிர்ச்சிக்கு உள்ளாகிறார். அந்த நபருடைய மனநிலை எவ்வாறு இருக்கும்? அவர் மீதான உளவியல் தாக்குதல் எப்படி இருக்கும்? அவரது குடும்பம்,அவரது குழந்தைகள் ஆகியோர் மீதான உளவியல் மற்றும் உணர்வுபூர்வமான தாக்கம் எப்படி இருக்கும்? அந்தக் குழந்தைகள் பள்ளிக்குச் செல்கின்றபோது, அவரைப் பார்த்து மற்ற குழந்தைகள் "உங்கள் தகப்பனார் சிறையில் இருக்கின்றார்" எனக்கூறுவார்கள். ஏன்? ஏனென்றால் அவர் ஒரு பயங்கரவாதி. ஏன்? ஏனென்றால் அவர் தேசவிரோதச் செயலைச் செய்தவர். ஏன்? ஏனென்றால் அவர் இந்த நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பவர். அவர் என்ன செய்தார்? அவர் எதுவும் செய்யவில்லை. புற்றுநோய் ஒழிப்பு குறித்த முகாமில் கலந்துகொள்ளச் சென்றவர்.11 ஆண்டுகளாகச் சிறையில் இருக்கிறார். ஒரு குழந்தை 11 அல்லது 12 ஆண்டுகள் பள்ளிக்குச் செல்லும். ஆனால் நாம் இது பற்றி எல்லாம் கவனிப்பதில்லை.

மன அதிர்ச்சி மிக மிக முக்கியமானது. ஏனென்றால் மனச்சோர்வுடைய மக்கள் இருக்கின்றனர். அவர்களது குடும்பங்கள் மனச் சோர்வு அடைகின்றன. அவருடைய நண்பர்கள் மனச்சோர்வு அடைகின்றனர். அவர்களுடைய

உறவினர்கள் அனைவரும் மனச்சோர்வு அடைகின்றனர். இங்கு அப்பாவியான ஒரு மனிதர், தவறாகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். எதற்காக? அவர் செய்யாத ஒன்றுக்காக? இத்தகைய போக்கின்மூலம் எப்படிப்பட்ட சமூகத்தை வளர்த்தெடுக்க நாம் முயற்சிக்கிறோம்?

இப்பொழுது "மென்மையான சித்திரவதை" (Soft Torture) என்பது உருவாகி வருகிறது. மூன்றாவது வகை (Third Degree) சித்திரவதையை நாம் அறிவோம். அதேபோல் இரண்டாம் வகை சித்திர வதையையும் நாம் அறிவோம். இப்பொழுது மென்மையான சித்ரவதை வந்துள்ளது. சிறையில் அதிக எண்ணிக்கையிலான நபர்களைத் திணிப்பது இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். ஒரு நபர் இருக்கக்கூடிய சிறை அறையில்,நான்கு பேர் இருக்கின்றனர். சிறை அறையிலுள்ள மேடையில் யார் உறங்குவார்கள்? வலிமையான சிறையாளி அதைத் தீர்மானிப்பாரா? எனவே தூங்கும் பொழுது இத்தகைய அசௌகரியங்கள் இருக்கின்றன.

இதற்கும் கூடுதலாக, சுகாதாரச் சிக்கல் இருக்கிறது. குழந்தைகளுக்கான கூர்நோக்குப் பாதுகாப்பு இல்லங்களை நான் பார்வையிட்டு இருக்கிறேன். 50பேர் தங்கக்கூடிய பொது அரங்கில் 50பேர் மட்டும்தான் தங்க வேண்டும். ஆனால் அதற்கு அதிகமானோர் இருக்கின்றார்கள். மேலும் ஒரே ஒரு கழிப்பறைதான் பயன்பாட்டில் உள்ளது. எவ்வகையான சுகாதாரத்தை இதன் மூலம் நீங்கள் எதிர்பார்க்க முடியும்? சிறைகள் இதைக்காட்டிலும் ஓரளவு பரவாயில்லை. இது ஒருவகையான சித்திர வதை அல்லவா?

சத்துமிக்க உணவு என்பது அக்கறை காட்ட வேண்டிய மற்றொரு விஷயம். எவ்வளவு கலோரி உணவு உட்கொள்ள வேண்டும், எவற்றை உண்ணக் கூடாது, எப்பொழுது உண்ண வேண்டும் என்பதைப்பற்றி எல்லாம் உணவியல் நிபுணர்கள் நமக்கு அறிவுறுத்துகிறார்கள். இவை அனைத்தும் சிறையாளிகளுக்கு வழங்கப்படுகிறதா? குழந்தைச் சிறையாளிகள் நிலை என்ன?ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் குழந்தைகள் சிறைப்படுத்தப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு கொடுக்கப்படும் சத்துணவு என்ன? அவர்கள் அடைத்து வைக்கப்பட்டு இருக்கும் இடத்தின் சுகாதார நிலை பற்றி நமக்குத் தெரியுமா? மருத்துவ வசதி என்பது அக்கறை செலுத்த வேண்டிய மற்றொரு பகுதியாகும். மருத்துவ வசதிகள் என்பது ஒரு மனிதனுக்கு உரிமை யானவை அல்லவா? சிறையாளியாக இருந்தாலும் கூட? சிறையாளியாக இருந்தால்தான் என்ன?

பீமா கொரேகான் வழக்கில் சிறைப் படுத்தப்பட்டுள்ள ஹானி பாபு அவர்களது கண் மிகவும் மோசமான நிலையில் இருந்துள்ளது. அவரது பார்வையே பறிபோய்விடும் என்ற நிலை வந்த பிறகுதான்,ஒரு மருத்துவமனைக்கு அவர் அனுப்பப்பட்டார்.அதற்கு முன்னால் அல்ல! ஸ்டேன் சுவாமி அவர்களைப் பற்றி ஒவ்வொருவரும் பேசுகின்றனர். முன்னதாகவே அவருக்கு மருத்துவ சிகிச்சை ஏன் அளிக்கப் படவில்லை? மருத்துவ சிகிச்சை அளிக்க மறுப்பது, மென்மையான சித்ரவதை அல்லவா? மென்மை யான சித்திரவதை என்பது ஒரு நபரை அடிப்பது அல்ல. அதைப் போன்றது அல்ல மென்மையான சித்திரவதை என்பது. அடிப்படை வசதிகளை மறுப்பது கூட ஒரு வகையான மென்மையான சித்திரவதை ஆகும்.

ஒரு நாளில் இரண்டு மணிநேரம் மட்டும் தனது சிறை அறையிலிருந்து வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்பட்ட ஒரு நபரைப் பற்றி அண்மையில் ஓர் அறிக்கை வந்தது. அதாவது 22 மணி நேரம் அவர் சிறைக் கொட்டடியில் பூட்டி வைக்கப் பட்டுள்ளார். அனேகமாக அது தனிமைச் சிறைதான் அல்லது தனிமைச் சிறைக்கு இணையானது தான். இது மென்மையான சித்திரவதை அல்லவா?

நமது கிரிமினல் நீதிமுறை பற்றிய முழுமையான விவரத் தொகுப்பை பார்க்க வேண்டும். நீண்ட காலச் சிறைக்குப் பிறகு விடுதலையாவது குறித்த பிரச்சனையை நான் கவனிக்க வேண்டுமென்று அஞ்சலி மற்றும் பிரசாத் ஆகியோர் குறிப்பிட்டது போல, ஓர் அம்சத்தை மாத்திரம் நாம் பார்க்க முடியாது. பிரச்சனையின் விரிவான தளத்தை நான் பார்க்க வேண்டும்.

நாம் எங்கே போய்க்கொண்டிருக்கிறோம்? அதுதான் நம்முன் உள்ள கேள்வி. இதற்குப் பரிகாரம்தான் என்ன? இழப்பீடு என்பது ஒன்று. பொறுப்பேற்கும் தன்மை என்பது மற்றொன்று.

மனநலம் என்பது இணையான முக்கியத்துவம் உடையது அல்லது மிகவும் முக்கியத்துவம் உடையது. ஏனென்றால் மோசமான அநீதி, பாதிக்கப்பட்டவருடைய வாழ்நாள் முழுவதும் துன் புறுத்தக் கூடியதாக இருக்கும். அவர்களுடைய வாழ்க்கை முடியும்வரை மட்டுமல்ல, அவருடைய குடும்பத்திலுள்ள அனைவரின் வாழ்க்கை முழுவதும், அவர்களுடைய குழந்தைகளுடைய வாழ்க்கை முழுவதும் பாதிக்கக்கூடியது. இதை வாழ்நாள் முழுவதும் அவர்கள் நினைவு வைத்திருப் பார்கள். விழித்தெழ வேண்டிய தருணம் வந்து விட்டது.

(காவல் சித்ரவதைகளுக்கு எதிரான கூட்டியக்கம் - தமிழ்நாடு - புதுவை வெளியிட்ட, "கொடுங்கோன்மைச் சட்டங்களுக்கு எதிரான நீதியின் குரல்" நூலிலிருந்து)

# இஸ்லாம் நாங்கள் தேர்ந்தெடுத்த மார்க்கம்



## கவிதா (இப்போது) நூர் பாத்திமா

*2014ம் ஆண்டுக்கு பிந்தைய, தற்போதைய மோடியின் பாசிச ஆட்சியில், வட மாநிலங்கள் முழுமையாக பாஸிஸ்டுகளின், இந்துத்துவவாதிகளின் கூடாரங்களாக மாறி நிற்கின்றது. நித்தம் ஒரு கலவரம், கொலை, கொள்ளை, கற்பழிப்புகள் என நாள்தோறும் பாஸிஸ்டுகள் தங்கள் வெறியாட்டத்தை வெளிப்படையாக நிகழ்த்தி கொண்டிருக்கின்றனர். குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் மீதான தாக்குதல்கள், கும்பல் வண்முறைகள், படுகொலைகள், மாட்டின் பெயரால் கொலை செய்யப்படுவது என, இந்தியாவின் வடமாநிலங்கள் முஸ்லிம்கள் வாழ்வதற்கு பாதுகாப்பற்ற பகுதிகள் என்று பேசப்படக்கூடிய அளவிற்கு அங்கே முஸ்லிம் சமூகம் பாதிக்கப்பட்டுள்ளது.*

*இந்தியாவின் வட மாநிலங்களின் நிலைமை இப்படியிருக்க, "இஸ்லாம் எங்கே அதிகமாக எதிர்க்கப்படுகிறதோ, அங்கேதான் அது வேகமாக வளரும்" என்ற வரலாற்றுக்கு ஏற்ப பாஸிஸத்தின் கூடாரமாக திகழும் இந்தியாவின் வட மாநிலங்களில் இஸ்லாத்தை நோக்கி மக்கள் வந்து கொண்டிருக்கின்றனர்.*

*ஏதோ, சாதாரணமாக இங்கொன்றும், அங்கொன்றுமாக இல்லாமல், படித்த சிந்திக்கும், இளைஞர்கள், பெண்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்கின்றனர். அப்படி இந்த கோரமான, மோசமான இந்தியாவின் பாஸிச ஆட்சியில் வட மாநிலங்களில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களின் அனுபவங்களை இனி பதிவு செய்வது என முடிவெடுத்துள்ளோம். அதன்வழி கவிதா எப்படி நூர் பாத்திமா ஆனார்? என்பதை பார்ப்போம்.......!*

### கவிதா (இப்போது) நூர் பாத்திமா

எனது பெயர் நூர் பாத்திமா. எனது முந்தைய பெயர் கவிதா. வீட்டில் என்னை “பூனம்” என்று செல்லமாக அழைப்பார்கள். மும்பைதான் எனது சொந்த ஊர். எனக்கு இப்போது 30வயது ஆகின்றது. நான் Cambridge Universityயில் உயர்படிப்பு முடித்துள்ளேன். எனக்கு திருமணம் முடிந்து இரண்டு குழந்தைகள் உள்ளனர்.

அல்லாஹ் ஒரு அடியானுக்கு நேர்வழியை நாடிவிட்டால் அவனுக்கு தன்னுடைய இஸ்லாம் எனும் தீனைப் பற்றிய புரிதலை வழங்குகின்றான். அதனடிப்படையில் அல்லாஹ் என் மீது அவனுடைய அருட்கொடைகளை பொழிந்துள்ளான் என்றுதான் சொல்ல வேண்டும்.

முஸ்லிம்களை கடுமையாக வெறுக்கும் தீவிரவாத இந்துக்களுக்கு மத்தியில் தான் நான் வளர்ந்தேன். ஆனால் எனது இளமை பருவத்திலிருந்தே எனக்கு இந்து மதத்தின் சிலைவழிபாட்டின் மீது நம்பிக்கை இல்லாமல் இருந்தது. எனக்கு நியாபகம் இருக்கின்றது. ஒருமுறை என் வீட்டில் இருந்த ஒரு கடவுள் சிலையை என் கழிவறைக்கு எடுத்துச் சென்றுவிட்டேன். இதைக்கண்ட என் அம்மா எனக்கு அறிவுரை கூறி கண்டித்தார்.

அப்போது நான், “இந்த சிலையால் தன்னைத் தானே பாதுகாத்துக்கொள்ள முடியவில்லை. அப்படியிருக்க அது எப்படி நமது தேவைகளை நிறைவேற்றும்? அந்தச் சிலையிடம் ஏன் நீங்கள் ஆசிர்வாதங்களை கேட்கிறீர்கள்?” என்று கேட்டேன். (பார்க்க அடிக்குறிப்பு - 01)

எங்கள் குடும்ப வழக்கப்படி திருமணத்தின் போது, மணப்பெண் தனது கணவனின் காலைக் கழுவி, அந்த நீரை குடிக்க வேண்டும். இந்த வழக்கத்தை முதன்முதலில் எதிர்த்தது நான்தான். கடுமையாக எதிர்த்தேன். எனது திருமணத்தின் போது அந்த செயலை நான் செய்யவேயில்லை.

### அச்சுறுத்தும் அந்த கனவு

எனக்கு அடிக்கடி ஒரு கனவு வரும். அந்த கனவில், ஒரு அறை. அந்த அறைக்குள் நான் நுழைவது போன்று கனவில் வரும். நான் திடுக்கிட்டு எழுவேன். எனக்கு அப்போது வேர்த்திருக்கும். நீண்ட நாட்களாக இந்த கனவு எனக்கு வந்து கொண்டே இருந்தது.

### அல்லாஹ்வை நோக்கிய முதல் அடி!

இந்த நிலையில் நான் ஒரு பள்ளியில் ஆசிரியராக பணியில் சேர்ந்தேன். அந்த வேலைக்கு நான் காரில் தனியாக சென்று வருவேன். அந்த பள்ளிக்கு அருகில் ஒரு இஸ்லாமிய அழைப்பு மையம் இருந்தது. அங்கே நிறைய சொற்பொழிவுகள் நடைபெறும். அதை கேட்பதற்கு அடிக்கடி அங்கே சென்று வருவது எனது வழக்கம்.

அப்போதுதான் நான் முஸ்லிம்களைப் பற்றியும், இஸ்லாத்தை பற்றியும் அறிந்து கொண்டேன். “முஸ்லிம்களிடத்தில் சிலைவழிபாடு இல்லை. அவர்களின் இறைவன் தனித்தவன்” என்ற முஸ்லிம்களின் இறைவனைப் பற்றிய பார்வை என்னை வெகுவாக கவர்ந்தது. முஸ்லிம்களை மட்டுமல்ல அகிலத்தையும், அனைத்தையும் நிர்வகிப்பவன் அல்லாஹ் என்கின்ற “அந்த ஒரு இறைவன்” தான் என்பதை நான் அறிந்தேன்.

அடுத்து முஸ்லிம்களின் தொழுகை முறை என்னைக் கவர்ந்தது. அது முஸ்லிம்களின் வழிபாட்டு முறை என்பது எனக்கு தெரியாது. ஏதோ முஸ்லிம்கள் யோகா செய்கிறார்கள் என்று தான் நினைத்தேன். உலகின் ஒட்டுமொத்த முஸ்லிம்களும் ஒரே மாதிரியான வழிபாட்டு முறையைத்தான் செய்கிறார்கள்.

இந்த நிலையில், நானும் எனது குடும்பமும் பெஹ்ரைனுக்கு குடியேறினோம். இது இஸ்லாத்தை மேலும் அறிந்துகொள்ள எனக்கு மிகவும் உதவியது. பெஹ்ரைன் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள நாடு என்பதால் அவர்களின் வாழ்வியல் சூழலுக்கு மத்தியில் எங்கள் வீடு அமைந்திருந்தது.

அங்கு எனக்கு ஒரு முஸ்லிம் பெண் தோழியாகக் கிடைத்தாள். நான் அடிக்கடி அவளை சந்திப்பேன். அவளுடன் பேசிக் கொண்டிருப்பேன். இந்த நிலையில் ரமழான் மாதம் வந்தது. ரமழான் மாதத்தில் அவள் அதிகப் படியான வழிபாட்டில் ஈடுபடுவதால், என்னை சந்திப்பதை தவிர்த்துக் கொண்டாள்.

ஆனால் நான் விடவில்லை. அவளை சந்திக்கச் சென்றேன். அவளோ, “உங்களின் வருகையால் என்னுடைய வழிபாடுகள் பாதிக்கப்படுகிறது. நாம் பிறகு சந்திப்போம்” என்று சொல்லி என்னை தவிர்த்தாள். அப்போதுதான் நான் அவளிடம் கூறினேன், “நான் இஸ்லாத்தை கற்றுக் கொள்வதற்குத்தான் உங்களுடன் பழகினேன். நான் உங்களை தொந்தரவு செய்யமாட்டேன். நீங்கள் தொழுகும் முறை, உங்களது வணக்க வழிபாடுகளை நான் அமைதியாக உங்களுடனே இருந்து கவனித்து தெரிந்து கொள்கிறேன். என்னை தடுக்காதீர்கள்” என்று கூறினேன்.

இதைக்கேட்ட அவள் மிகவும் மகிழ்ச்சியடைந்தாள். அவளுடனே இருந்து அவள் செய்யும் வணக்க வழிபாடுகளை ஓரளவுக்கு கற்றுக்கொண்டேன். பிறகு என் வீட்டிற்கு வந்து என் அறையை பூட்டிக்கொண்டு தொழ ஆரம்பித்தேன். இப்படி ஒரு நாள் கதவை பூட்ட மறந்த நான், தொழுது கொண்டிருக்கும் போது என் கணவர் பார்த்துவிட்டார்.

"என்ன செய்து கொண்டிருக்கின்றாய்?" என்று கேட்டார். "நான் தொழுது கொண்டிருக்கின்றேன்" என்று பதில் கூறினேன்.

"நீ சுய நினைவோடுதான் இருக்கிறாயா? நீ என்ன சொல்கிறாய் என்று உனக்கு புரிகின்றதா?" என்று மிரட்டும் விதமாக கேட்டார்.

பயத்தால் என் கண்களை மூடிக்கொண்டேன். என் கணவர் என்னை அடித்தார். அதன்பின் எனக்கு எங்கிருந்து தைரியம் வந்தது என்று தெரியவில்லை. என் உள்ளத்தில் ஒரு விதமான தைரியத்தை உணர்ந்தவளாக, அந்த சூழ்நிலையை எதிர்கொள்ள ஆரம்பித்தேன்.

"நான் இஸ்லாம் மதத்தை ஏற்றுக்கொண்டேன். அதனால் தொழுகின்றேன்" என்று தைரியமாக கூறினேன்.

"இதைக்கேட்ட என் கணவர், 'என்ன சொன்னாய்? தைரியம் இருந்தால் மீண்டும் அதைச் சொல்" என்றார்.

மீண்டும் உரத்த குரலில் சொன்னேன், "நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன்" என்று.

இதைக்கேட்ட அவர் என்னை மீண்டும் அடிக்க ஆரம்பித்தார். சத்தம் கேட்டு என் சகோதரி என்னை அவரிடமிருந்து காப்பாற்ற ஓடி வந்தாள். ஆனால் நடந்ததை அவளிடம் கூறியதும், அவளும் சேர்ந்து என்னை அடிக்க ஆரம்பித்தாள்.

நான் அவளைத் தடுத்தேன். "நீங்கள் என் வழியில் குறுக்கிடக்கூடாது. எனக்கு எது நல்லது, கெட்டது என்று நன்றாகத் தெரியும். நான் தேர்ந்தெடுத்த வழியில் நான் நிலைத்திருப்பேன்." என்று கூறினேன்.

என் கணவர் என்னை மிகவும் துண்புறுத்த ஆரம்பித்தார். அதனால் நான் சுயநினைவை இழந்து மயங்கி விழுந்தேன். இதெல்லாம் நடந்து கொண்டிருக்கும் போது எனது இரு குழந்தைகளும் அங்கிருந்தனர். அதன் பின் என்னை ஒரு தனியறையில் பூட்டிவிட்டார்கள். யாரையும் சந்திக்க, பேச என்னை அனுமதிக்கவில்லை.

**சென்று விடுங்கள் அம்மா!**

ஒரு நாள் இரவு எனது குடும்பம் முழுவதும், ஏதோ ஒரு விழாவிற்கு சென்றிருந்தார்கள். நான் எனது அறையில் பூட்டப்பட்டிருந்தேன். என் இரு குழந்தைகள் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அப்போது மூத்தமகன், அவனுக்கு வயது 9. என்னிடம் வந்தான். என் கைகளை பற்றிக்கொண்டு அழ ஆரம்பித்துவிட்டான்.

"இவர்கள் உன்னை கொன்றுவிட திட்டம் தீட்டுகிறார்கள். நீ இங்கிருந்து தப்பித்து சென்றுவிடு அம்மா" என்று அழுதுக்கொண்டே கூறினான்.

"அப்படியெல்லாம் எதுவும் நடக்காது. நீ உனது தம்பியை நன்றாக பார்த்துக்கொள்ள வேண்டும்." என்று நான் அவனுக்கு ஆறுதல் கூறி அணைத்துக் கொண்டேன்.

ஆனால், அவன் தொடர்ந்து அதையே திரும்ப திரும்ப என்னிடம் கூறி அழுதுக்கொண்டே இருந்தான்.

"நான் வீட்டை விட்டு சென்றுவிட்டால், மீண்டும் உங்கள் இருவரையும் என்னால் சந்திக்கவே முடியாது" என்று கூறி அவனை சமாதானம் செய்ய முயற்சித்தேன்.

ஆனால் அவனோ, "அதற்குமுன் நீங்கள் உயிருடன் இருக்கவேண்டும் அம்மா! உயிருடன் இருந்தால்தான் எங்களை நீங்கள் சந்திக்க முடியும்! தயவு செய்து தப்பித்து சென்று விடுங்கள்" என்று கூறினான்.

இதன்பின் நான் வீட்டைவிட்டு வெளியேறுவது என முடிவு செய்தேன். அந்த இரவை என்னால் மறக்கவே முடியாது. என் மூத்த மகன் தன் தம்பியை எழுப்பினான். 'எழு அம்மா நம்மை விட்டு போகிறாள். அவள் மீண்டும் எப்போது நம்மை சந்திப்பாள் என்பது நமக்குத் தெரியாது எழு!" என்று தன் இளைய மகனை எழுப்பினான்.

இளைய மகன் எழுந்து என்னிடம் வந்தான். "அம்மா நீங்கள் எங்களை விட்டு செல்கின்றீர்களா?" என்று தன் கவலையான குரலில் என்னிடம் கேட்டான்.

"ஆம்! இப்போது நான் உங்களை விட்டு செல்கிறேன். ஆனால் மீண்டும் நிச்சயமாக உங்களை சந்திக்க வருவேன்" என்று கூறி வீட்டை விட்டு நடக்க ஆரம்பித்தேன். என் இரு குழந்தைகளும், வீட்டு வாசலில் நின்றுகொண்டு கண்களில் கண்ணீர் மல்க கையசைத்துக் கொண்டு என்னைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

என் வாழ்வின் இந்த தருணங்களை என்னால் மறக்கவே முடியவில்லை. இந்த சம்பவங்களை நினைவுகூரும் போதெல்லாம், இஸ்லாத்திற்காக, வீடுகளையும், குடும்பங்களையும் துறந்த ஸஹாபாக்கள் தான் நினைவுக்கு வருவார்கள்.

### எனக்கிருக்கும் ஒரே சொந்தம் இஸ்லாம்

வீட்டை விட்டு வெளியேறிய நான், அருகில் இருந்த காவல் நிலையத்திற்கு சென்றேன். அங்கு எனக்கு, மொழி ஒரு பெரிய பிரச்சனையாக இருந்தது. அங்கிருந்த காவலர்கள் யாருக்கும் ஆங்கிலம் தெரியவில்லை. நல்லவேளையாக ஒரேயொரு காவலர் ஆங்கிலம் தெரிந்தவராக இருந்தார்.

"நான் வீட்டைவிட்டு வெளியேறி வந்துவிட்டேன் என்றும், நான் இஸ்லாத்தை தழுவ ஆர்வமாக உள்ளேன்" என்றும் கூறினேன். அந்த காவலர் எனக்கு உதவினர். அவர் தன்னை தனது குடும்பத்தார்களிடம் அழைத்துச் சென்று எனக்கு அவரது வீட்டில் அடைக்கலம் கொடுத்தார்.

இதற்கிடையில், காலையில் என் கணவர், "என் மனைவி கடத்தப்பட்டதாக புகார் கொடுத்தார்." ஆனால், நான் யாராலும் கடத்தப்படவில்லை. நானாகத்தான் வீட்டைவிட்டு வெளியேறி வந்தேன்" என்று விசாரணையில் தெளிவாக்கப் பட்டது.

"நான் என் கணவருடன் செல்ல விருப்பமில்லை. நான் இஸ்லாத்தை தழுவ விரும்புகின்றேன்." என்று ஆணித்தரமாக கூறிவிட்டேன். இதைக் கேட்ட என் கணவர் என்னை மிரட்டினார். ஆனாலும் என் முடிவில் நான் உறுதியாக இருந்தேன்.

அதன்பின், என்னுடைய நகைகள், உடமைகள், சொத்துகள், வங்கி இருப்பு என அனைத்தையும் எடுத்துக் கொள்வதற்கு எழுத்துப்பூர்வமாக அறிக்கையை என்னிடம் வாங்கிக்கொண்டு, என்னை இனி தொந்தரவு செய்யமாட்டேன் என அவரும் அறிக்கைத் தந்துவிட்டு சென்றுவிட்டார்.

பின்னர், தொடர்ச்சியான துன்புறுத்தல்களுக்கு ஆளான நான், சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்ந்தேன். அப்போது எனக்கு சிகிச்சையளித்த மருத்துவர் என்னிடம், "நீங்கள் எங்கிருந்து வந்துள்ளீர்கள். நீண்ட நாட்களாக சிகிச்சை பெற்று வருகின்றீர்கள். உங்கள் குடும்பத்தினர் யாரும் உங்களை சந்திக்க நலம் விசாரிக்க வரவில்லையா?" என்று கேட்டார்.

நான் அவரிடம் எந்த பதிலையும் கூறவில்லை. ஏனென்றால், இஸ்லாம் என்ற ஒன்றிற்காகத்தான் நான் வீட்டை விட்டு வெளியேறினேன். இப்போது எனக்கு வீடும் இல்லை, குடும்பமும் இல்லை, குழந்தைகளும், செல்வங்களும் இல்லை. இப்போது என்னுடைய ஒரே உறவு இஸ்லாம் தான்.

### கனவில் வந்த அந்த அறை!

மருத்துவமனையில் இருந்த காலத்தில் நான் எனது அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்து கவனமாக இருந்தேன். சிகிச்சை முடிந்தவுடன் நான் அருகில் இருந்த ஒரு இஸ்லாமிய அழைப்பு மையத்திற்கு சென்றேன். அங்கு ஒரு வயதான முதியவர் இருந்தார். அவரிடம், என் கதையைச் சொன்னேன். முதலில் தயங்கிய அவர், பின்னர் என்னை ஹிஜாப் அணிந்து வரச்சொன்னார்.

காவல்நிலையத்தை விட்டு வெளியேறும் போது என்னிடம் கொஞ்சம் பணம் இருந்தது. அந்தப் பணத்தில் எனக்காக முழு உடலையும் மறைக்கும் அளவிலான ஒரு சூட்டை - Suitஐ வாங்கி அணிந்து கொண்டு இஸ்லாமிய அழைப்பு மையத்திற்கு திரும்பினேன்.

அந்த முதியவர் எனக்கு "ஒழு" செய்ய கற்றுக்கொடுத்தார்.(பார்க்க அடிக்குறிப்பு 2). பின் என்னை ஒரு அறைக்குள் அழைத்துச் சென்றார். அந்த அறையின் சுவரில் ஒரு பெரிய படம் மாட்டியிருந்தது.

அந்தப்படத்தை பார்த்த நான் கத்தினேன், "இதோ இதுதான். இதுதான் அந்த அறை. பல நாட்கள் என் தூக்கத்தை கலைத்த அந்த கனவில் நான் கண்ட அறை இதுதான்" என்று மகிழ்ச்சியில் கத்தினேன்.

அவர் சிரித்துக் கொண்டே, "அது அல்லாஹ்வின் வீடு - பைத்துல்லாஹ். உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்கள் ஹஜ் மற்றும் உம்ராவிற்காக இந்த வீட்டிற்கு வருவார்கள்" என்றார்.

இதைக்கேட்ட நான் வியப்பில். "அல்லாஹ் இந்த வீட்டில் தான் குடியிருக்கின்றானா?" என்று கேட்டேன். அதற்கு அவர் புன்னகையுடன் அதுபற்றின விளக்கத்தை எனக்கு கூறினார்.

அப்போது என்னால் புரிந்துகொள்ள முடியாத ஒரு விசித்திரமான, மகிழ்ச்சியான உணர்வை நான் உணர்ந்தேன்.

இந்துவாக இருக்கும் போது, என் கனவில் நான் கண்ட காட்சிகள் அன்று நிஜத்தில் நிறை வேறியது.

### திருக்கலிமாவை மொழிந்தேன்!

ஆம்! அந்த அறையில் எனக்கு அவர் திருக்கலிமாவைக் கற்றுக்கொடுத்தார். நானும் கூறினேன். அப்போது என் மனதில் கவலையோ, சுமையோ இல்லை. நான் என்னை மிகவும் லேசாக உணர்ந்தேன். மாசுபட்ட தண்ணீரிலிருந்து, சுத்தமான நீருக்குள் நீந்தியது போல அந்த தருணம் இருந்தது.

அந்த இஸ்லாமிய மையத்தின் உரிமையாளரான அந்த முதியவரே என்னை மகளாக தத்தெடுத்துக் கொண்டார். அதன் பின் ஒரு நல்ல இஸ்லாமிய குடும்பத்தில் எனக்கு வரன் பார்த்து எனக்கு திருமணமும் செய்து வைத்தார்.

இஸ்லாத்தை ஏற்றபின் எனக்கிருந்த முதல் ஆசை! அல்லாஹ்வின் வீட்டை பார்க்க வேண்டும் என்பதுதான். பின்னர் நான் உம்ரா செய்து பார்த்தும் விட்டேன்.

### இந்தியாவில் என் குடும்பத்தினர்

நான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதற்கு பின் இந்தியாவுக்கு வரவேயில்லை. காரணம், என் குடும்பத்திற்கு இந்தியாவில் உள்ள, அரசியல் மற்றும் இந்துத்துவ பாசிஸ்டுகளின் இயக்கத்தோடு நெருங்கிய தொடர்பு உண்டு.

என் குடும்பத்தினர் என் தலைக்கு விலையை நிர்ணயித்துள்ளனர். நான் இந்தியா வந்தால் நிச்சயமாக என்னைக் கொன்று அதை அரசியல் ஆக்கிவிடுவார்கள்.

முஸ்லிம்கள் என்றாலே அடக்குமுறையாளர்கள், பயங்கரவாதிகள் என்று எனக்கு கற்றுக்கொடுக்கப்பட்டது. இதனால் இஸ்லாத்தை ஏற்பதற்கு முன்னாள், முஸ்லிம்களை வெறுப்பவர்களாகவே இருந்தோம்.

ஆனால் இப்போது எனக்கு உண்மை என்னவென்று புரிந்துவிட்டது. எனது ஒவ்வொரு தொழுகையிலும் முஸ்லிம்களின் வெற்றிக்காக பிரார்த்திக்கிறேன். எல்லாம் வல்ல அல்லாஹ் எனக்கு மகன்களை வழங்கினால், அவர்களை நான் “முஜாஹித்களாக” வளர்த்தெடுப்பேன். இஸ்லாத்திற்காக அவர்களை நான் அர்ப்பணிப்பேன் என்று பிரார்த்திக்கிறேன்.

Source: https://www.muslimconverts.com

**அஷ்ரப் அலீ**

### அடிக்குறிப்பு 01


இது கவிதா (எ) நூர் பாத்திமா அவர்கள் இஸ்லாத்தை ஏற்பதற்கு முன் அவரது வாழ்வில் நடந்த ஒரு சம்பவம். அதை அவரே கூறுவதால் இக்கட்டுரையில் இடம்பெற செய்கின்றோம்.

ஆனால் பொதுவாக இஸ்லாம் இதுபோன்று, பிறமத கடவுள்களையும், வணக்க வழிபாட்டு முறைமைகளையும், இழிவுபடுத்துவதை, ஏசுவதை அனுமதிக்கவில்லை.

### அடிக்குறிப்பு 02

“ஒழு” முஸ்லிம்கள் தொழுகைக்கு முன்பு, கை, முகம், கால்களை தண்ணீரைக் கொண்டு சுத்தப்படுத்திக்கொள்ளும் ஒரு முறையாகும்.





Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002